# அகராதி - நினைவுகள்

பேராசிரியர்

**எஸ். வையாபுரிப் பிள்ளை, பி. ஏ., பி. எல்.,**

சென்னை ஸர்வகலாசாலைத் தமிழ் லெக்ஸிகன் பதிப்பாசிரியர் 1926-'36
சென்னை ஸர்வகலாசாலைத் தமிழ்-ஆராய்ச்சித் துறைத் தலைவர் 1936-'46
திருவிதாங்கூர் ஸர்வகலாசாலைத் தமிழ்ப் பேராசிரியர் 1951-'54

**தமிழ்ப் புத்தகாலயம்**

திருவல்லிக்கேணி :: சென்னை-5

முதற்பதிப்பு : பிப்ரவரி, 1959

உரிமை பதிவு

விலை ரூ. 1·75

மங்கை அச்சகம்

25, மாவடி விநாயகர் கோயில் தெரு, இராயப்பேட்டை, சென்னை-14

# முன்னுரை

வாழ்க்கை முழுதும் தமிழ்-ஆராய்ச்சித் துறைக்கே தம்மை அர்ப்பணித்துக்கொண்ட என் தந்தையார்தம் முதிர்ந்த அனுபவத்தினின்றும் பிறந்த கருத்துக்கள் செறிந்த கட்டுரைகள் சில இந்நூல்வடிவில் வெளியாகின்றன. இதுவரை வெளிவந்த தொகுதிகளுள் அமையாதனவற்றையும், அச்சேருதவற்றையும் திரட்டித் தமிழ்மக்களுக்குச் சமர்ப்பிப்பது எனது கடமையென்றே கருதுகிறேன். தமிழ்மக்கள் இவற்றை வரவேற்பார்கள் என்பது என் நம்பிக்கை.

தந்தையாரவர்கள் தாம் தமிழ்ப் பேரகராதிப் பதிப்பாசிரியத் தலைமைப் பதவியேற்ற வரலாறும், அவ்வேலையில் அவர்களுக்கு ஏற்பட்ட விந்தையான அனுபவங்களும் முதல் இரண்டு கட்டுரைகளில் இடம்பெறுகின்றன. கல்விப் பயனையும், சிறு குழந்தைகளுக்குச் செய்யுட் பாடத்தினால் ஏற்படும் நன்மைகளையும் எடுத்துக் கூறுவன அடுத்து வரும் இரண்டு கட்டுரைகள். இவற்றைத் தொடர்ந்து சமயம் பற்றிய எட்டுக் கட்டுரைகள் பலவேறு தலைப்புக்களில் இடம்பெறுகின்றன. இறுதிக் கட்டுரை தாய்மொழிப் பற்றினால் மாறும் விந்தையான மனப்போக்கை எடுத்துக்காட்டித் தமிழ்மக்களை எச்சரிக்கின்றது.

தந்தையாரின் நூல்களை வெளியிடுவதில் பேரார்வம் கொண்ட **'தமிழ்ப் புத்தகாலய'** அதிபர் கண. முத்தையா அவர்களே இத்தொகுதி வெளிவருதற்குப் பெரிதும் உதவினர். அவருக்கு என் உளம் நிறைந்த நன்றி. இதனைக் கருத்தோடு சிறந்த முறையில் அச்சேற்றித் தந்த 'மங்கை அச்சக'த்தாருக்கும் எனது நன்றி உரியதாகும்.

'வையகம்'
சென்னை - 28
15-2-'59

**வை. ஸரோஜினி**

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | அகராதி - நினைவுகள் ... | 1 |
| 2. | அகராதி - அனுபவங்கள் ... | 12 |
| 3. | கற்றதனுல் ஆய பயன் ... | 23 |
| 4. | சிறு குழந்தைகளுக்குச் செய்யுட் பாடங்கள் ... | 48 |
| 5. | பண்டைத் தமிழ்நாடும் சமயமும் ... | 55 |
| 6. | பக்தியும் தெய்வ வரலாறுகளும் ... | 60 |
| 7. | பக்திப் பெருவெள்ளம் ... | 67 |
| 8. | பக்தி வெள்ளத்தின் விளைவு ... | 72 |
| 9. | பக்திக் கனியின் தீஞ்சாறு ... | 77 |
| 10. | வடநாட்டில் கண்ணன் ... | 82 |
| 11. | அவதாரங்களும் தென்னுட்டுத் தொடர்பும் ... | 87 |
| 12. | ராதாவும் கிருஷ்ணனும் ... | 92 |
| 13. | தமிழ்மொழிப் பற்றும் பிற மொழி வெறுப்பும் ... | 98 |

# அகராதி - நினைவுகள்

சென்னை, பல்கலைக் கழகத்திலிருந்து ' தமிழ் லெக்ஸி கன் ' என்ற பெயரால் வெளியிடப்பெற்ற அகராதியைப் பற்றித்தான் நான் இங்கு பேசுகிறேன். இந்த லெக்ஸிகன் 1913 ஜனவரியில் செந்தமிழ் நாட்டுத் தலைநகர் எனத்தகும் மதுரையில் தொடங்கப்பெற்று, 1915 மே மாஸத்தில் சென்னை நகரில் தொடர்ந்து இயற்றப் பெறுவதாயிற்று. இதற்கு ரெவரெண்ட் ஜே. எஸ். சாண்ட்லெர் (*Rev. J. S. Chandler*) தலைமைப் பதிப்பாசிரியராகத் தொடக்கத்தில் அமைந்தார். முதலில் மூன்று பண்டிதர்களும், பின்னர் 1915-ல் நான்காவது பண்டிதரொருவரும் உதவியாளராகக் கொள்ளப்பட்டனர். லெக்ஸிகன் கமிற்றி ஒன்றும் நியமிக் கப்பட்டது. முதலில் லெக்ஸிகன் பற்றிய பொறுப்பு சென்னை அரசாங்கத்தாரிடமிருந்தது. ஆனால், அரசாங்கம் பல்கலைக் கழகத்தின் மூலமாகவே இப்பொறுப்பை நிறை வேற்றிவந்தனர். பின்னர் அகராதி வேலையின் பொறுப்பு முழுதும் பல்கலைக் கழகத்தாரே வகிக்கவேண்டும் என்று அரசாங்கம் தீர்மானித்தது. பல்கலைக் கழகமும் இதனை ஏற்று ஸின்டிக்கெட் கமிற்றியொன்றும் நியமித்தது. இது வரை செய்துவந்த வேலையைப் பரிசீலனை செய்து நோக்கி னால் அது ஒருவகையிலும் திருப்தியாகாது என்ற முடிவிற்கு

1917-ல் பல்கலைக் கழகம் வந்தது. பின், மிஸ்டர் மார்க் ஹண்டர் அகராதி இயற்ற வேண்டும் நியமம் பற்றி ஒரு குறிப்பு எழுதினர். இதனை ஒப்புக்கொண்டு, ஒரு புதிய அகராதிக் கமிற்றி நியமிக்கப்பட்டது. அதன் தலைவர் ஸர் பி.எஸ். சிவசாமி ஐயர். மகாமகோபாத்தியாய சாமிநாதையர், அனவரத விநாயகம் பிள்ளை, குப்புஸ்வாமி சாஸ்திரிகள், தோட்டக்காடு இராமகிருஷ்ண பிள்ளை என்பவர்கள் அதன் உறுப்பினர்கள். அகராதிப் பதிப்புக் கழகத்தில், ரெவ. சாண்ட்லெர் கூட, பல்கலைக் கழகத்து மொழிநூற் பேராசிரியரும், தமிழிலும் வடமொழியிலும் வல்ல ஒரு பி. ஏ. பட்டதாரியும் (Graduate) வேண்டுமெனத் தீர்மானிக்கப்பட்டது. 1918-ல் பொருட் செலவுப் பொறுப்பும் அகராதியை முற்றுவிக்கும் பொறுப்பும் பல்கலைக் கழகத்தாரே ஏற்றனர். 1919-ல் ஸர் பி. எஸ். சிவசாமி ஐயர் அகராதியின் அமைப்பு முறையையும் சொற்களின் ஆங்கில மொழிபெயர்ப்புக்களையும் கண்டித்து, ஒரு கண்டனமும் எழுதி, தமக்குத் தலைவராக இருக்கமுடியாது என்று கூறி விலகிவிட்டனர். அப்பொழுது நீதிபதி டி. வி. சேஷகிரி ஐயர் தலைமை வகித்தனர்.

1921-ல் சாண்ட்லெர் பதிப்பாசிரியர் பதவியினின்றும் நீங்கவே, திரு. அனவரத விநாயகம் பிள்ளை அப்பதவியை ஏற்றனர். அவரால்தான் முதன்முறையாக அகராதிப் பகுதிகள் அச்சுக்குக் கொடுக்கப்பட்டன. 1923-ன் முடிவில் 16 பாரங்கள் அச்சியற்றி முடிந்தன. அப்பொழுது திரு. பிள்ளை பதிப்பாசிரியர் பதவியினின்றும் விலகிக்கொண்டனர். 1924 பெப்ருவரியில் திரு. ஸி. பி. வெங்கடராமையர் பதிப்பாசிரியராய் அமர்ந்தனர். இரண்டு ஆண்டுகளாக அச்சிட்ட பாரங்களும் பிழை நிரம்பியுள்ளன என்று கொண்டு திருத்தங்கள் செய்துவந்தனர். அகராதி வேலை மிக மந்தமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. அகராதி வேண்டாம் என்ற அளவுக்குப் பல்கலைக் கழகம் அதிருப்தியுற்றது. ஸி. பி. வெங்கடராமையர் பதிப்பாசிரியர் பதவியினின்றும் நீங்கி, கல்வியிலாகா

வில் தமது காயமான வேலைக்குச் சென்றனர். ரீராவ்பஹதூர் கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் 1926 மார்ச்சு மாதம் அகராதிக் கமிற்றித் தலைவராக நியமனம் பெற்றார்.

1926 நவம்பர் இறுதியில் நான் பதிப்பாசிரியர் நியமனம் பெற்றேன். நான் அப்பதவி பெறுவதற்குமுன் திருநெல்வேலியில் வக்கீல் தொழிலில் அமர்ந்திருந்தேன். எனது பொழுதெல்லாம் பெரும்பாலும் தமிழ்நூல்களைக் கற்பதிலும், ஆராய்ச்சி செய்வதிலும், கம்பராமாயண பரிசோதனையிலும் கழிந்தது. எனது தந்தையாரவர்களுடைய வற்புறுத்துதலின்பேரில் சைவசித்தாந்த நூற்பயிற்சி சிறிது பெற்றேன். வீரராகவபுரத்தில் என்னோடு வக்கீல் தொழிலில் இருந்த எம். எஸ். சுப்பய்யா முதலியார், சக்கரபாணி நம்பியார், ஆதிமூர்த்தியா பிள்ளை, வண்ணார்பேட்டையில் திரு. வி. வேதநாயகம் பிள்ளை, டி. கே. சிதம்பரநாத முதலியார், எனது பழைய நண்பர் கே. அனந்தராமையங்கார், ஏ. வி. சுப்பிரமணிய ஐயர், தமிழ்ப் பாண்டித்தியத்திலும் சைவ சித்தாந்த சாஸ்திரங்களிலும் வல்லவராய், பிற்காலத்தே திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்வானாய் விளங்கிய சிதம்பர ராமலிங்கம் பிள்ளை, சி. வீரபாகு பிள்ளை முதலியோர் என்னோடு தமிழ் பயின்ற நண்பர்கள். எனது கம்பராமாயணப் பயிற்சி ஸ்ரீ வ. வெ. சு. ஐயரவர்களைக் கவர்ந்தது. அவர்களது ஆயுள் இறுதிவரை எனக்கு மிக நெருங்கிய நண்பராய்விட்டார்கள். எனது நட்பு, பிராமணர், அல்லாதார் என்ற ஜாதி வேறுபாடுகளைக் கடந்தது; வடமொழி, தமிழ் என்ற மொழி வேறுபாடுகளைக் கருதாதது; பண்டிதர்கள், ஆங்கிலம் கற்ற தமிழர்கள் என்ற சிறு வரம்புகளை மதியாதது; சைவம், வைஷ்ணவம் முதலிய மதவேறுபாடுகளைக் கனவிலும் நினையாதது; சங்ககாலத் தமிழ், இடைக்காலத் தமிழ், தற்காலத் தமிழ் என்றவற்றில் ஏதேனும் ஒன்றில் அபிமானம் வைத்து அதனையே கற்பது என்ற நியதியைக் கொள்ளாதது. அறிவு வளர்ச்சியும், தமிழுணர்வுப் பெருக்க

மும், உண்மை நாட்டமும், நடுநிலைமையுமே என்னை ஊக்கி வந்தன.

எனது சொந்த ஊராகிய திருநெல்வேலியில் நான் வக்கீல் தொழிலில் இறங்குவதற்குமுன், எனது மனைவியின் ஊராகிய திருவனந்தபுரத்தில் 1915-ல் அட்வொக்கேட் ஆக இருந்தேன். அப்போது உற்ற நண்பர்களாக இருந்தவர்கள் திரு. கே. என். சிவராஜ பிள்ளை, தி. இலட்சுமண பிள்ளை, சி. தேசிகவிநாயகம் பிள்ளை, நீதிபதி ஸ்ரீ கே. ஜி. சேஷைய ரவர்களது மாப்பிள்ளை கே. ஜி. சங்கர ஐயர் முதலினோர். இங்கிருந்துதான் நான் முதலில் பத்திரிகைகளுக்கு எழுதத் தொடங்கியது. சேரர் தலைநகராகிய கருவூர் எங்கிருந்தது என்ற கேள்வியானது அக்காலத் தமிழ் வித்வான்களிடையே பெரிதும் விவாதிக்கப்பட்டு வந்தது. செந்தமிழ்ப் பத்திரா சிரியராயிருந்த திருநாராயண ஐயங்கார் ஒருபுறமும், ஸேது ஸம்ஸ்தான மகாவித்வான் ரா. இராகவையங்கார் எதிர்ப்புற மாகவும் பத்திரிகை மூலமாய்த் தருக்கித்து வந்தனர். எனது நண்பர் கே. ஜி. சங்கர ஐயரும் நானும் இப்பத்திரிகைகளை வாசித்து வந்தோம். ஒருமுறை இராகவையங்கார் புறநா னூற்றில் 13-ம் செய்யுள் சேரரது கருவூர் சோழநாட்டினை அடுத்துச் சேரரது உள்நாட்டிலிருந்தது என்பதை ஆதரிப்ப தாகக் காட்டினர். இதனை மறுத்து திருநாராயண ஐயங்கார் தமது தர்க்கப் பான்மையெல்லாம் காட்டி இப்புறநானூற்றுச் செய்யுள் தமது கொள்கைக்குச் சாதகமாயிருப்பதுபோல் பொருளுரைத்தனர். இவர்கள் தமது தர்க்கநூற் பயிற்சி கொண்டு எதனையும் நிறுவிவிடலாம் என்று நினைத்தார்கள். நச்சினார்க்கினியரை சாக்ஷிக்கூண்டில் ஏறச்செய்து அவரைக் குறுக்கு மறுக்காய்க் கேள்விகள் கேட்டு, தாம் எழுதியிருப் பதன் பொருள் தமக்குத் தெரியாது என்று சொல்லும்படி திருநாராயண ஐயங்கார் செய்த விநோத ஆராய்ச்சி என் றும் நகைப்பிற்கு விளைபுலமாயுள்ளது. இக்கருத்தை நான் சங்கர ஐயருக்குக் கூறினேன். அவர் 'அப்படி நீ கூறுவது

உண்மையானல் அதைப்பற்றி எழுதவேண்டும்' என்று ஐய வுணர்ச்சி மிகுதியும் தோன்றப் பதில் விடுத்தார்கள். நானும் என் கருத்துப் புலப்பட, இச்செய்யுள் பற்றி மிக விரிந்த கண்டனவுரையொன்று பல பகுதிகளாக எழுதினேன். இவ் வுரைதான் என்னைப் பண்டித உலகிற்கு அறிமுகமாக்கி வைத்தது. கண்டனவுரைப் பகுதிகளைக் கொடுத்து, அவற் றிற்குக் கீழே, தமது மறுப்புக்களையும் திருநாராயண ஐயங் கார் எழுதிவந்தனர். இவற்ருல் எனது கண்டனவுரையின் நேர்மையும், தெளிவும் ஆராய்ச்சிவன்மையும்தான் தெள்ளத் தெளிய உணரப்படலாயின. எனக்குத் தமிழ்நாடு, யாழ்ப் பாணம் முதலிய பிரதேசங்களிலிருந்து புகழ்மாலைகள் வந்து குவிந்தன. இக் கண்டனவுரையை அடுத்து, தொல்காப்பிய ரது சமயம் பற்றிச் சில கட்டுரைகள் எழுதி, அவர் ஜைன மதத்தினர் என்பதை நிறுவினேன். இது ஜைனவுலகில் ஒரு கிளர்ச்சியை உண்டுபண்ணியது; ஜைனர்களது நன்மதிப்பு எனக்குக் கிடைக்கும்படி செய்தது. ஒருமுறை தி. இலட்சு மண பிள்ளையிடம் இக்கட்டுரை பற்றிப் பேச நேர்ந்தது. அவர் 'சமயம்' என்பதைப் பிறழவுணர்ந்து மிக்க ஆத்திரத் துடன் 'தொல்காப்பியர் எந்தக் காலத்தினர் என்று துணிந் திருக்கிறீர்கள்?' என்று கேட்டார்கள்!

திருவனந்தபுரத்திலிருக்கும்பொழுது மலையாளம் சிறிது கற்றுக்கொண்டேன். நானும் திரு. தேசிகவிநாயகம் பிள்ளை யும் அதிகாலையில் எழுந்து வடமொழியிலுள்ள ஸப்த ரூபா வலியை மனப்பாடம் செய்துவந்தோம். லகு சித்தாந்த கௌமுதியை, கோவெல் (*Cowell*) என்பவர் எழுதிய ஆங்கில மொழிபெயர்ப்பின் உதவிகொண்டு, தமிழில் முழுதும் மொழிபெயர்த்தேன். இம் மொழிபெயர்ப்பு இன்றும் எனது நூல்-நிலயத்தில் உள்ளது. கம்பராமாயணத்தை இங்குள்ள அரண்மனை நூல்நிலயத்திலிருந்து (*Palace Library*) கிடைத்த மிகப் பழைய ஏட்டுப் பிரதியுடன் ஒப்பிட்டுப் பார்த்து, பாட பேதங்களைக் குறித்துக்கொண்டு வாசித்து முடித்தேன்.

இவ்வாறு அச்சுப்பிரதிகளை ஏட்டுப் பிரதிகளோடு ஒப்பிடுதல் நான் முதன்முறையாகச் செய்யத் தொடங்கியதல்ல. எப். ஏ. (F. A.) வகுப்பு மாணவனாக இருக்கும் காலத்திலேயே கலித்தொகை முழுவதையும் அங்ஙனம் ஒப்பிட்டுப் படித்துள்ளேன். பி. ஏ. (B. A.)யில் தேர்ச்சிபெற்றவுடன், தொல்காப்பியப் பொருளதிகாரம் இளம்பூரணர் உரைச் சுவடியை திரு. த. கனகசுந்தரம் பிள்ளையிடமிருந்து பெற்று உரைமுழுவதும் பிரதி செய்து வைத்துள்ளேன். 1922-ல் மனோன்மணீயத்தை உரை, அரும்பத அகராதி, அனுபந்தங்களுடன் வெளியிட்டேன். இதில் உதவியவர் திரு. தேசிக விநாயகம் பிள்ளை.

1923-ம் வருஷத்தின் ஆரம்பத்தில் நெல்லை வந்து சேர்ந்தேன். அவ் ஆண்டில் கம்பர் கழகம் ஒன்று நிறுவப் பட்டது ; கம்பர் விழா மிக விமரிசையாய்க் கொண்டாடப் பட்டது. திரு. சக்கரபாணி நம்பியார் விழா இனிது நடைபெறுவதற்கு வேண்டும் பொருள் திரட்டுவதில் பெருமுயற்சி யெடுத்துவந்தார்கள். சுப்பய்யா முதலியார் முதலிய அன்பர்களும் பலவழிகளில் உதவிவந்தனர். இம்முயற்சிகள் ஒரு புறம். வேறு சில ருசிகரமான சம்பவங்களும் நிகழ்ந்தன. டிஸ்டிரிக்ட் ரிஜிஸ்ட்ராராக இருந்த சபாபதிப் பிள்ளை விழாவில் 5 நிமிஷங்கள் பேசவேண்டுமென்று உயிர்ப்பிச்சை கேட்பதுபோல் இரங்கிக்கூறி, பின்பு, அரைமணிக் கூறு கம்பன் பாட்டுக்களை இடைவிடாமற் பொழிந்து தள்ளியதை மறக்கவே முடியாது. இதில் தலைமை தாங்கியவர் ஸ்ரீ ரா. இராகவையங்கார். அவரை நேரிற்கண்டு அளாவளாவும் பேறு இப்பொழுதுதான் கிடைத்தது. இதில் குறிப்பிடத்தக்க சில விஷயங்கள் உண்டு. திரு. கே. என், சிவராஜ பிள்ளை கம்பனது கவித்துவத்தைப் பற்றி எழுதிய ஆங்கிலக் கட்டுரை. 'கம்பன் திருநாள்' என்னும். பொருள் பற்றி நான் எழுதிய பாவனைக் கட்டுரை. எனது கட்டுரை 'செந்தமிழில்' வெளியிடுவதற்கு அனுப்பப்பட்டிருந்தது. சில நாட்

கள் கழித்து, கலாசாலையில் என்னுடன் கற்ற நண்பரும் எனது தமிழாற்றலை அறிந்தவருமாகிய ஸ்ரீ பெ. நா. அப்புஸ்வாமி அய்யர் நெல்லைக்கு வந்தனர். அவர் அக்காலத்தில் 'தமிழர் நேசன்' பத்திரிகையின் ஆசிரியராக விளங்கினர். என்னைச் சந்தித்துத் தமது பத்திரிகைக்கு அடிக்கடி எழுதிக் கொண்டிருக்கவேண்டும் என்று வற்புறுத்தினர். நானும் இசைந்து, 'கம்பர் திருநாள்' என்ற கட்டுரையின் பிரதியொன்றை அவரிடம் கொடுத்தேன். அவர் அதனை வாசித்து மகிழ்ந்து தமது பத்திரிகையிலும் வெளியிட்டனர். என்னைப் பற்றிச் சென்னையிலுள்ள சில அன்பர்களும் தெரிந்துகொள்வதற்கு இக்கட்டுரை காரணமாயிற்று.

1926-ல் ஸி. பி. வெங்கடராமையர் அகராதிப் பதிப்பாசிரியர் பதவியினின்றும் நீங்கியதும் வேறொரு தக்க பதிப்பாசிரியரை நியமிப்பதில் சென்னைப் பல்கலைக் கழகத்தின் சார்பாக, அகராதிக் கமிற்றி முயன்றது. என்னைப் பற்றி எனது நண்பர் பெ. நா. அப்புஸ்வாமி அய்யர் பிரஸ்தாபிக்க நேர்ந்ததும், கமிற்றித் தலைவர் ஸ்ரீ கே. வி. கிருஷ்ணசாமி ஐயர் மிகவும் திருப்திகொண்டனர். அகராதிக் கழகத்தில் தலைமைத் தமிழ்ப் பண்டிதராக விளங்கிய ஸ்ரீ மு. இராகவையங்காரிடம் விசாரணை செய்தனர். என்னை நேரில் அறியாதவராயிருந்தும் எனது கட்டுரைகளை வாசித்துள்ளமையினாலே அவரும் திருப்தியான விடையளித்தனர். ஆகவே, என்னையே அப்பதவிக்குத் தக்கவனென்று உறுதி கொண்டனர். பெ. நா. அப்புஸ்வாமி அய்யர் மூலமாக எனது ஸம்மதமும் தெரிவிக்கப்பட்டது. அகராதிக் குழுவில் ஜைனர்கள் சார்பில் உறுப்பினராயிருந்த திரு. சக்கரவர்த்தி நயினாரும் என் பெயரையே ஆமோதித்தனர். ஸ்ரீ குப்புஸ்வாமி சாஸ்திரிகள், ஸி. ஆர். நமச்சிவாய முதலியார் முதலிய அனைவரும் எனது சார்பாக இருந்தனர். மகாமகோபாத்யாய உ. வே. சாமிநாதையருக்கு மட்டும் திருப்தியில்லை. இது பலபடியாலும் விளங்கிற்று. ஸ்ரீ ராமரத்ந ஐயருக்கு இப்

பதவியை அளிக்கவேண்டும் என்பது அவர்கள் கருத்து. ஆனால், அக்கருத்து நிறைவேற வழியில்லையென்று கண்டதும் ஒதுங்கிவிட்டனர். அகராதிக் கமிற்றியின் தீர்மானத்தைப் பல்கலைக்கழகத்தில் ஸின்டிக்கேற்றும் ஒப்புக்கொண்டு, என்னை நியமனம் செய்தார்கள். நான் தமிழ்-ஆராய்ச்சித் துறைக்கே உரியவனென்று பள்ளிப் பருவமுதற்கொண்டு என்னை நான் கருதிவிட்டபோதிலும், எனது வாழ்க்கைத் துறையின் முழுப் போக்கும் அவ் ஆராய்ச்சித்துறையில் அமைந்துவிடுமென்று நான் கனவிலும் நம்பியதில்லை. எனக்குரிய துறையில் நான் செல்லுதற்குக் காரணமாயிருந்த பெ. நா. அப்புஸ்வாமி அய்யர், கே. வி. கிருஷ்ணசாமி ஐயர், ஸி. ஆர். நமச்சிவாய முதலியார் முதலிய பேரன்பர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டுள்ளேன்.

1926 நவம்பர் மாஸம் 25-ம் தேதியில் நான் சென்னை சென்று அகராதிப் பதிப்பாசிரியர் பதவியை ஒப்புக்கொண்டேன். அலுவலகத்தில் பி. எஸ். சுப்பிரமணிய சாஸ்திரியார் இடைக்காலத் தலைவராயிருந்தார். மு. இராகவையங்கார் தலைமைத் தமிழ்ப் பண்டிதர், வை. மு. கோபாலகிருஷ்ணமாச்சாரியார் வடமொழியும் தமிழும் வல்ல பண்டிதர், ஆ. சிங்காரவேலு முதலியார் சைவ சித்தாந்தப் பண்டிதர், இ. எஸ். வரதராஜ அய்யர், சுந்தரமூர்த்தி என்ற இருவரும் பி. ஏ., பட்டம் பெற்ற உதவியாளர்கள், இராமமூர்த்தி ஸர்மா, கோபாலையர் என்ற இருவரும் பெயர்த்தெழுதுவதற்கும் புரூப் (*Proof*) ஒப்பு நோக்குதற்கும் நியமித்த கிளார்க்குகள், மானேஜர் சாது வரதராஜம் பந்துலு இவர்கள் அங்கிருந்தனர். அனைவரையும் மு. இராகவையங்கார் அறிமுகப்படுத்தினர்.

எனது முதல் வேலை அகராதியின் அமைப்புமுறையை (*plan*) நன்கு பயில வேண்டுவதாயிருந்தது. உடன்தானே அகராதிச் சொற்கள் கொண்ட கடுதாசித்துண்டுகளைத் தயாரிப்பது முதல் அச்சியற்றி முடியும் வரையுள்ள எல்லா நிலைகளையும் உணர்ந்து, அனைத்தையும் நானே செய்து கையாள

வல்லவனுகவும் ஆயினேன். புனர் பரிசோதனைக்குப் (*Revision*) பின்னர், நூல்களை வாசித்துப் புதுப்பதங்களைச் சேர்க்கப் பெரிதும் முயன்றேன். இவ்வேலைகள் அனைத்திலும் என்னேடு அகராதி அலுவலகத்திலுள்ள அனைவரும் பூர்ண மனத்துடன் ஒத்துழைத்து வந்தனர். ஆண்டு ஒன்றுக்கு மூன்று பகுதிகளாக வெளியிட்டுவரத் திட்டமிட்டுக்கொண்டு வேலைசெய்து வந்தோம். என் மனம் முழுவதிலும் அகராதி வேலைக்குரிய செயல்கள்தான் நிரம்பியிருந்தன. குறித்த கெடுவில் அகராதிப் பகுதிகள் வெளிவரத் தொடங்கியதும், பல்கலைக் கழகத்தார் திருப்தியுற்றனர். இதுவரை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை, ஸெனட் கூடும்பொழுதெல்லாம் லெக்ஸிகன் ஆபீசு இதனேடு இறந்துவிடுமென்று எண்ணி வருந்திய நிலைமை மாறி, இப்போது அகராதி வேலை துரிதமாக நடைபெற்றுவருவதைத் தெரிந்து பலரும் உத்ஸாகம் கொள்ளலாயினர். அகராதி வேலையில் முற்றும் முனைந்து நின்ற எனது அலுவலகத்தினர்க்கு யாதொரு கவலையும் ஏற்படாதபடி அகராதிக் கமிற்றியும், இக் கமிற்றித் தலைவரும் நோக்கிக்கொண்டனர்.

நோக்கம் விரிவடைந்துகொண்டு வந்தது. அகராதி வேலையில் எண்ணிறந்த இடர்ப்பாடுகள் இருந்தன. தமிழ் நூல்களிற் பெரும்பாலன, பிரதிகளை நன்கு பரிசோதித்து வெளியிடப்பெற்றன அல்ல. ஆறுமுக நாவலர், சி. வை. தாமோதரம் பிள்ளை, டாக்டர் சாமிநாதையர் முதலிய ஒரு சிலரது பதிப்புக்களே கொள்ளத் தக்கனவாயிருந்தன. ஐயருங்கூட ஒருசில இடங்களைத் தவருக உணர்ந்து புதுச் சொற்களைச் சிருஷ்டித்துவிட்டனர். உதாரணமாக, சிலப்பதிகாரத்தில் வாழ்த்துக் காதையில் (26) 'பாவைமா ராரிக்கும் பாடலே பாடல்' என்று தவருக வாசித்துக்கொண்டு 'ஆரிக்கும்' என்பதற்கு 'ஒலிக்கும்' என்று பொருளெழுதிவிட்டனர். இவர்கள் எழுதியதனை நம்பி, லெக்ஸிகனும் 'ஆரித்தல்' என்று ஒரு சொல்லைக் கொடுத்து 'ஒலித்தல்' என்று

பொருள் கொடுத்துவிட்டது. உண்மையான பாடம் 'ஆரிரக்கும்' என்பது. இதன் பொருள் (சோழர்க்குரிய) ஆத்தி (மாலை)யை இரக்கும் என்பதாகும். ஐயர் பதிப்பிற்கூட இவ்வகைப் பிழை காணப்படுமாயின், பிறரது பதிப்புகளைப் பற்றி யாது சொல்லக் கிடக்கிறது? எனவே, ஒரு சொல்லைக் கொடுப்பதன்முன், அதன் உண்மை வடிவத்தையும் உண்மைப் பொருளையும் ஆராயவேண்டிய அவசியமிருந்தது. ஆனால், மேற்காட்டியது போன்ற பிழைகள் மிகச் சிலவே உள்ளன. தமிழிலுள்ள நிகண்டுகள் இன்றுகாறும் பிழையறப் பரிசோதித்துப் பதிப்பிக்கப் பெறவில்லை. நாவலர் பதிப்பித்த சூடாமணி நிகண்டு ஒன்றினைத்தான் ஒருவாறு ஒப்புக்கொள்ள முடியும். திவாகரம், பிங்கலந்தை முதலிய நிகண்டுகளின் பதிப்புக்கள் பிழைகள் மலிந்திருந்தன. இப்பிழைகள் அகராதியிலும் எளிதில் ஏறிவிடுமல்லவா? உதாரணமாக, மேடு என்ற பொருளில் குப்பல் என்றொரு சொல் திவாகரத்தின் அச்சுப் பிரதியில் உள்ளது. ஏட்டுப் பிரதிகளில் 'குப்பை' என்றே உள்ளது. இதுவே சரியான சொல்லாயிருக்கவும் 'குப்பல்' என்பதும் அகராதியிற் கொடுக்கப்பட்டுள்ளது.

சொற்கள் இங்ஙனமாக, சொற்களின் உற்பத்தி குறித்தும் பிழைபோதல் எளிதாம். உதாரணமாக, 'கழகம்' என்பதற்கு மலையாளச் சொல்லைக் காட்டியிருக்கிறது. அதற்குரியது 'க்ளஹ' என்ற வடசொல்லென்பது பாணினீயத்தால் விளங்கும். இங்ஙனமே, கல்லூரி என்பது கல்லூரிகா என்ற வடசொல்லென்பது மயமதம் முதலிய சிற்பநூலால் தெரியவருகின்றது. இவ் வடமொழியுற்பத்தியும் காட்டப்பெறவில்லை. ஆங்கிலப் பொருள் தமிழ்ப் பொருள்களைத் தருவதிலும் மிகக் கவனத்துடன் இருக்கவேண்டும். பிரயோகங்களையும் சொற்பொருள் நியதிகளையும் நன்கு உணர்ந்தாலன்றி இவற்றைத் தரமுடியாது. பிரயோகங்களைக் கொடுப்பதிலும் கூடியவரை காலத்தால் முற்பட்ட பிரயோகங்களையே

காட்டுதல் வேண்டும். இவற்றின் ஆகரங்களையும் தெளிவாய்த் தக்க நியதியை மேற்கொண்டு தருதல் வேண்டும்.

இங்ஙனமாக, சொல்லினையும் பொருளினையும் பற்றிப் பலவகையிலும் நன்கு பரிசோதனை செய்தே அகராதி அமைத்தல் வேண்டும். குறித்த கால எல்லைக்குள் எவ்வளவு திருத்தமாக அகராதியை இயற்ற முடியுமோ அவ்வளவும் செய்து வந்தோம்.

# அகராதி - அனுபவங்கள்

*1926 - நவம்பர் 25-ல் சென்னை சென்று தமிழ்-லெக்ஸிகன் பதிப்பாசிரியர் பதவியை ஒப்புக்கொண்டேன். அவகாசங் கிடைக்கும்போதெல்லாம் இலக்கிய - இலக்கண ஆராய்ச்சியிலும், சொல்லாராய்ச்சியிலும் மிகவும் ஈடுபட்டிருந்த எனக்கு, இவ்வகை ஆராய்ச்சிகளே எனது வாழ்க்கைத் துறையாக அமைந்துவிட்டதை எண்ணுந்தோறும் அடங்காத பெருமகிழ்ச்சி உண்டாயிற்று. (இவ்வாறு அமைவதற்கு முக்கிய காரணமாயிருந்த அப்புஸ்வாமி ஐயர், ஸி. ஆர். நமச்சிவாய முதலியார் முதலாயினோரது நட்பு மேன் மேலும் பெருகி வளர்ந்தது. எனது குடும்பத்தினரை சென்னைக்கு வரவழைத்துக்கொள்ளுதற்குச் சிலகாலம் சென்றது. அவர்கள் வரும்வரை அப்புஸ்வாமி அய்யர் வீட்டிலே தங்கியிருந்தேன்.)*

*லெக்ஸிகன் அலுவலகத்தில் எனக்கு அறிமுகமாயிருந்தவர் அங்கே தலைமைத் தமிழ்ப் பண்டிதராயிருந்த ஸ்ரீ மு. இராகவையங்கார் மட்டுந்தான்.*

*முதன்முதலாக, அகராதியின் அமைப்புமுறையை நன்கு பயிலவேண்டுவதாயிருந்தது. அதனை விரைவிற் கற்று, சொற்களைக் கார்டு அளவுள்ள கடுதாசித் துண்டுகளில் எழுதிச் சேர்ப்பதுமுதல் அச்சியற்றி முடியும் வரையுள்ள எல்லா நிலைகளிலும் பயிற்சி பெற்றுக்கொண்டேன் என்பதை முன்னரே கூறியுள்ளேன். இவ்வாறு கடுதாசித் துண்டுகளில் எழுதுவதுபற்றி ஒரு சிறிய வரலாறு உண்டு. லெக்ஸிகனின் ஆரம்பகாலத்தில் Folio அளவுள்ள நோட்டுப் புத்தகங்களில் சொற்களை எழுதிவந்தார்கள். மொழி முதலில் வரும் எழுத்துக்களின் கீழாகச் சொற்கள் பல நோட்டுப் புத்தகங்களில், பல இடங்களில், அகராதிக் கிரமமின்றி எழுதப்பட்டு வந்தன. ஏதேனும் ஒரு சொல்லைப் பார்க்கவேண்டுமாயின், பல நோட்*

டுப் புத்தகங்களையும், ஒவ்வொரு புத்தகத்திலும் பல இடங்களையும் நோக்கும்படி நேர்ந்தது. இதனால் விளைந்த இடைஞ்சல்கள் பல. சொற்கள் மிகுந்தோறும், நோட்டுப் புத்தகங்களும் மிகுந்தன; கஷ்டப்பாடுகளும் மிகுந்தன. ஒரு சொல்லின் பலபொருள்களையும் தொடர்ச்சியாகவும் பார்க்க முடியாது. சொற்களையும் பொருள்களையும் தேடும் இந்தக் காட்சி சிறிது விநோதமாகவே யிருந்ததாம். பதிப்பாசிரியரா யிருந்த ரெவ. சாண்ட்லெர் இங்கிலாந்து, அமெரிக்கா முதலிய தேசங்களுக்குச் சென்று அகராதி இயற்றும் முறையைத் தெரிந்து மீண்ட பிற்பாடுதான், கார்டு அளவிலுள்ள கடுதாசித் துண்டுகளில் சொற்களையும் பொருள்களையும் எழுதி அகராதிக் கிரமத்தில் அடுக்கிவைக்கும் முறை கையாளப்பட்டதாம்!

தமிழ்-லெக்ஸிகன் இருமொழி அகராதி; எனவே, தமிழ்ச் சொல்லுக்கு ஆங்கிலத்திலும் தமிழிலும் பொருள் கொடுக்கப்பட்டிருக்கும். 1862-ல் வெளிவந்த உவின்ஸ்லோ அகராதியைக் கூடியவரை பூர்த்தியாக்கி, தற்கால அவசியத்திற்கு ஏற்றவாறு பதிப்பிடுதலே தொடக்கத்தில் நோக்கமாயிருந்தது. பூர்த்தியாக்குதற்கு இந்த அகராதியை ரெவ. ஜி. யூ. போப் பக்கம்தோறும் வெற்றுக் கடுதாசிகளை வைத்து அங்கொன்றும் இங்கொன்றுமாகக் குறித்து வைத்திருந்த நான்கு வால்யூம்களாகப் பைண்ட் செய்த அகராதிப் புத்தகத்தையே பெற்று உபயோகிக்க முதலில் எண்ணினர். இதனோடு 1841-ல் பூர்த்தியாக்கப்பட்ட ராட்லர் அகராதியும், 1779-ல் தோன்றிய பெப்ரீஸியஸ் (*Fabricius*) அகராதியும் எடுத்துக்கொள்ளப்பட்டன. ஆனால், போப்பின் குறிப்புக்கள் சிறிதளவே பயன்பட்டன. லெக்ஸிகன் வேலையைப் பார்க்கும் பொருட்டு வந்த சென்னை கவர்னர் முதலினோர்க்குக் காட்டும் காட்சிப் புத்தகமாகவே இது பெரும்பாலும் பயன்பட்டது.

சொற்கள் பற்றிய அளவில் பெருங்குறை இருந்தது. பேரிலக்கியங்கள், பேரிலக்கணங்கள் முதலிய அனைத்தும்

உவின்ஸ்லோவின் காலத்திற்கு மிகமிகப் பிற்பட்டுத்தான் பதிப்பிக்கப்பட்டன. எனவே, இவற்றிலுள்ள பண்டைச் சொற்களில் பெரும்பாலன உவின்ஸ்லோ அகராதியில் இடம் பெறவில்லை. சூடாமணி நிகண்டு தவிர ஏனைய நிகண்டுகள் திருந்திய பதிப்பாக வெளிவரவுமில்லை. யாழ்ப்பாணத்தி லுள்ள பிராதேசிகச் சொற்கள் சேர்க்கப்பட்டனவேயன்றி, (இந்தியாவில்) தமிழ்நாட்டில் வழங்கிய பிராதேசிகச் சொற் கள் பெரும்பாலும் சேர்க்கப்படவில்லை. பலவேறு தொழில் பற்றிய சொற்களும் பற்பல சாஸ்திரங்களுக்குரிய சங்கேத பதங்களும் இதிலே பெரும்பாலும் காணக் கிடையா. இவை போன்ற குறைகளெல்லாம் நீக்கவேண்டியது அவசியமா யிருந்தது. சிலாசாசன பதங்கள் உவின்ஸ்லோவில் மருந் துக்கும் கிடையா. புத்தகங்கள், கல்வெட்டுக்கள், தொழில் பற்றிய நூல்கள் முதலிய அனைத்தையும் வாசித்துப் புதுப் பதங்களைத் தொகுக்க வேண்டியதாயிற்று. இவற்றைத் தொகுப்பதில் நானும் ஸ்ரீ இராகவையங்கார் முதலிய பண் டித சிரேஷ்டர்களும் பெருமுயற்சி எடுத்துக்கொண்டோம், இவ்வாறு முயன்றதேயன்றி, பிரதேசவாரியாக பல அறிஞர் கள் கௌரவ உசாத்துணைவர்களாக (*Honorary Consultants*) உதவும்படி கேட்டுக்கொள்ளப்பட்டனர். இவர்களுள் கவி மணி தேசிகவிநாயகம் பிள்ளை மிக்க சிரமமெடுத்து நாஞ்சில் நாட்டுப் பதங்களைத் தந்ததோடு சிலாசாசனப் பதங்களையும் பொருள்களையும் தெரிவித்து வந்தார்கள். இங்ஙனமே யாழ்ப்பாணம் எஸ். ஆர். முத்துக்குமாரு முதலியாரும் பேருதவி செய்தனர்.

இங்ஙனமெல்லாம் பதங்களைச் சேர்ப்பதில் ஒருசில செய்திகள் எனது நினைவில் அழுந்திக் கிடக்கின்றன. இவ் வகை முயற்சியில் சைவ சித்தாந்தப் பதங்களைச் சேர்க்கும் பொழுது குய்ய தராட்டக புவனம் முதலிய முந்நூற்றுச் சொச்சம் புவனங்களும் வரிசையாகக் கார்டுகளில் எழுதப் பெற்றன. இவற்றை நான் பார்த்ததும் திடுக்குற்றேன்.

ஒவ்வொரு சமயத்தினரும் தங்கள் சமயத்தினர்க்கெனக் கற்பித்துக்கொண்ட புவனங்களைச் சேர்ப்பதானால், இப் புவனங்களுக்கே 5 அல்லது 6 அகராதிகள் தேவையாகும். இவற்றை நுட்பமாய் விளக்குதலும் அரிய செயல்; பயனும் சிறிதளவும் இல்லை. இராமலிங்க சுவாமிகள் உலகெலாம் உணர்ந் தோதற்கரியவன் என்பதில் 'உலகெலாம்' என்பதனை விளக்கப் புகுந்து காரண காரிய தூல சூக்குமவுலகு, காரிய காரண தூல சூக்கும வுலகு என்பன முதலாக எழுதிச் சென்று ராயல் வடிவு (*Royal size*) 42 பக்கங்களில் மிகவும் சிறிய எழுத்தில் உலகங்களை விவரித்துள்ளனர். இந்தக் கற்பிதங்களுக்குத் தமிழ் லெக்ஸிகனில் இடமில்லை எனக் கூறி நிறுத்தினேன். ஆனால், ஏற்கெனவே சில புவனங்கள் லெக்ஸிகன் ஆட்சிக்குள் அமைந்துவிட்டன.

வேறுசில பதங்கள் நூற்பதிப்பாளர்களின் தவறுகளை ஆராயாததால் புதிதாகக் கொள்ளப்பட்டன. சிலப்பதிகாரப் பதிப்பில் வாழ்த்துக் காதையில் 'பாவைமா ராரிக்கும் பாடலே பாடல்' என்று ஓரடி கொடுக்கப்பட்டுள்ளது; இதில் வரும் 'ஆரிக்கும்' என்பதன் பொருள் 'ஒலித்தல்' எனக் காண்கின்றது. 'ஆரித்தல்' என்பது தமிழ் மொழிக்கே புதிது. ஏட்டுப் பிரதிகளில் 'ஆரிரக்கும்' என்றே உள்ளது. இதுதான் உண்மையான பாடம் என்பது இவ்வடியினைப் போன்று முன்னும் பின்னும் வருகின்ற செய்யுளால் விளங்கும். எனவே, 'ஆரித்தல்' என லெக்ஸிகனில் காணும் பதம் தவறானதாகும். இவ்வகைப் போலிச் சொற்களை கோஸ்ட் வேர்ட் (*Ghost word*) என்று ஆங்கிலத்தில் கூறுவர். பதிப்பாசிரியரேயன்றி, நூலாசிரியர்களே சொல் வடிவங்களைத் தவறாக உணர்ந்து தவறான சொற்களைத் தந்ததும் உண்டு. தாசேரகம் என்ற வடசொல்லுக்கு ஒட்டகம் என்று பொருள். இச்சொல்லை, 'தாசோகம்' என ஒருசில நிகண்டாசிரியர்கள் வாசித்துவிட்டனர். தேனீ என்று பொருள்

படுவதாகச் சூடாமணி நிகண்டு கூறும் 'சாகம்' என்பதும் இவ்வகையில் அடங்கும்.

லெக்ஸிகன் அலுவலகத்திலேயே எழுத்துக்கள் செவ்வையாய் அமையப் பெருமையால் நேர்ந்த பிழைகளும் உண்டு. நான் பதிப்பாசிரியனாகப் பொறுப்பேற்றுச் சில வாரங்களே ஆயிருந்தன. ஒருநாள் 'கள்ளாணி' என்ற ஒரு தொடரை திருத்தத்திற்கு வந்த அகராதி அச்சுத்தாளில் கண்டேன். இப்படி ஒரு தொடர் நான் கேள்விப்பட்டதில்லை. என்னை அடுத்திருந்த பண்டிதர்களுக்கும் விளங்காப் புதிராகவே இருந்தது. அதற்கு எழுதியிருக்கும் பொருளை வைத்துக் கொண்டு, 'சுள்ளாணி' என்று இப்பதம் இருக்கவேண்டும் என்று தீர்மானித்தேன். பின்னர் இதுவே திருத்தம் என்பது இத்தொடரின் ஆகரத்திலிருந்து தெரிந்து, இதனைச் சுள்ளாணி என்று திருத்தி உரிய இடத்தில் சேர்க்கச்செய்தேன். ஏற்கெனவே இத்தொடர் அங்கிருந்ததைக் கவனிக்கவில்லை. பின்னர் இதனை அச்சிடுங் காலத்தில், இருமுறை இது காணப்பட்டது. 'சுழியாணியின்' மரூஉ எனக் கொண்டனர். ஆனால், பொருளை மாற்றவில்லை. இப்பிழையெல்லாம் 'சு' என்ற எழுத்தைக் 'க' என்று எழுதிவிட்டதால் நேர்ந்ததாகும். இங்ஙனமே உச்சிவேர் என்ற ஒரு தொடர் புகுந்துவிட்டது; இது ஊசி வேர் என்பதனைத் தவருக வாசித்துக் கொண்ட பதமாம்.

சொற்களைப் பற்றிப் பெரும்புகார் வந்துகொண்டிருந்தது. இயன்றவரை இக்குறையைத் தவிர்க்க முயன்று வந்தோம். உவின்ஸ்லோவில் 6755 சொற்கள் உள்ளன. இதில் 1,10,000 சொற்கள். இப் பேரகராதியைத் தொகுத்தற்குப் பயன்படுத்தப்பட்ட நூல்களின் விவரப்பட்டிகையை நோக்கினல், முயற்சியின் அளவு தெற்றெனப் புலப்படும். ஆனல், ஒருவரும் (ஸர்வக்ஞர்) முற்றுணர்ந்தவரில்லை. நூதன ஆங்கிலப் பேரகராதிக்கு ஆங்கிலவுலகு முழுதும் மனமுவந்து 3, 4 தலைமுறைகளாக உதவிவந்தது. இதனை

ஞாபகத்தில் வைத்தல் அவசியம். குறைகூறுவோருள் ஒரு சிலர் தமிழ் வாசனையே இல்லாதவர். ஒருமுறை 'பின்னை' (மரம்) என்ற சொல் உங்கள் அகராதியில் இல்லையே என்று ஒருவர் கூறினர். உடனே 'பின்னை' என்பது சரியான வடிவம் அல்ல; புன்னை என்பதுதான் அச்சொல் என்று கூறி அதனை அகராதியில் எடுத்துக் காட்டினேன். இம்முயற்சி எவ்வளவுதூரம் நிறைவேறியுள்ளது என்பது என் முன்னுரையின் பின் வைக்கப்பட்டுள்ள அனுபந்தத்தால் அறியலாம். இதில் 'தாரம்' 'வரி' என்ற சொற்களை உதாரணமாக எடுத்துக் காலக்கிரமப்படி நிகண்டுகள், அகராதிகள் முதலியவற்றில் இவற்றிற்குக் கொடுக்கப்பட்டுள்ள பொருள்களை முறையே காட்டி, லெக்ஸிகனில் அவற்றின் பொருள்கள் மிகமிக விரிந்துள்ளமை உணர்த்தப்படுகிறது.

ஒருசிலர்க்கு அகராதியைப் பயன்படுத்தவே தெரியவில்லை; இதில் கையாண்டுள்ள முறையைத் தெரிந்துகொள்ளாது இடர்ப்பட்டவர்கள் உண்டு.

'வடசொற்கள்தான் மிகுதியாய்க் காணப்படுகின்றன; தமிழ்ச் சொற்கள் குறைவாகவே உள்ளன' என்று வேறொரு கூக்குரல். ஆங்கிலத்தில் லத்தீன், கிரீக் முதலிய அன்னியமொழிச் சொற்கள் பாதிக்குமேலுள்ளன. எஞ்சியவற்றிலும் கணிக்கத்தக்க ஒருபகுதி லத்தீன் முதலியவற்றின் அடியாகப் பிறந்தவை. மேலும் மேலும் சிறந்து விளங்கும் மொழிகளில் இந்த இயல்பு காணக்கூடியதே. இதனைக் குறையாகக் கருதுவார் யாருமில்லை. நமது தாய்மொழி தனித்தியங்கக்கூடியது என்ற உணர்ச்சி தவருன அபிமானத்தால் தோன்றி நம்மிற் பலரையும் கூத்தாட வைக்கிறது. ஆங்கிலத்தில் '*Avoid Latin derivatives; use brief, terse, rugged Anglo-Saxon mono-Syllables*' என்று ஓராசிரியர் மாணவர்களுக்கு அறிவுரை கூறினராம். இவ்வாக்கியத்தில் *Anglo-Saxon* என்பது மட்டும் *Anglo-Saxon* மொழி. இது போன்றதொரு கூத்து ஒரு கூட்டத்தில் நடைபெற்றது.

ஒருவர் ஒருமுறை 'வடமொழிப் பதங்களையெல்லாம் நிர்த் தாட்சண்யமாய் ஒழித்துவிட்டுத்தான் மறுகாரியம்' என்றனர். இந்த வாக்கியத்திலிருந்தே எவ்வளவுதூரம் வடமொழியை விலக்க முடியுமென்று தெரிகிறதல்லவா?

தமிழ்-மொழியின் பூர்வ சரித்திரத்தையும், அது வளர்ந்து வந்திருக்கிற நெறியையும் தற்காலப் போக்கையும் யாராலும் மாற்ற முடியுமா? பலமொழிச் சொற்களின் கலப்பு நமது அறிவு வளர்ச்சியையும் நாகரிகத்தையும், பண்பாட்டையும் புலப்படுத்துவதல்லவா? இவைகளெல்லாம் ஒருபுறம் இருக்கட்டும். தமிழ்-அகராதி செய்யவேண்டுவதென்ன? தமிழ்-மொழியில் ஆதிகாலந்தொட்டு இன்றுவரை உலக வழக்கிலும், செய்யுள் வழக்கிலும் புகுந்துள்ள எல்லாச் சொற்களையும் தந்து விளக்க வேண்டுமல்லவா? ஆனால், இவ்வாறு கூறுவதெல்லாம் செவிடர்கள் காதில் சங்கு ஊதுவது போலத்தான். இக்கூக்குரலை அமர்த்துவதற்கு லெக்ஸிகன் முயன்ற முறைதான் வெகு வேடிக்கையானது. பெப்ரீஸியஸ் (*Fabricius*) அகராதியில் வடசொல் முதலிய அந்நியச் சொற்கள் உடுக்குறியிட்டு (*asterisk*) காட்டப்பட்டன. இம்முறையையே முதலில் லெக்ஸிகன் கைக்கொண்டு, வடமொழி மூலச்சொல்லையும் கொடுத்து வந்தது. வடமொழி, தமிழ்மொழி என்ற வேற்றுணர்ச்சியற்றவர்களும் எளிதில் தெரிந்துகொள்ளுமாறு இவ்வுடுக்குறி செய்துவிட்டமை பெரிய தொந்தரவாய் முடிந்தது. வடமொழி எதிர்ப்புக் கூக்குரல் ஓலமிட்டு அழத்தொடங்கியது. இதற்குப் பரிகாரமாக, லெக்ஸிகன் உடுக்குறியை எகரச் சொற்கள் முதல் ஒழித்துவிட்டது. வடமொழி என்று காட்டுதற்குரிய 'S' முதலிய குறியீடின்றி, உற்பத்தி மட்டுமே காட்டப்பட்டது. அன்னிய மொழிகளில் எதனைக் குறிப்பதென்று இவ்வுற்பத்தி காட்டமாட்டாதல்லவா? இதற்காக, வடமொழியொழிந்த ஏனை மொழிகளை உணர்த்துதற்கு, அம்மொழிகளுக்குரிய குறியீடுகள் கொடுக்கப்பட்டன. உதாரணமாக

'ஏலம்' என்ற சொல்லுக்கு ஒரு செடி வகை என்றும், கோர்ட்டு முதலியவற்றில் நிகழும் பகிரங்கப் போட்டி விற்பனை என்றும் இரண்டு முக்கியமான பொருள்கள் உண்டு. செடி வகையைக் குறிக்குமிடத்து 'S' என்ற அடையாளமின்றி உற்பத்தி மட்டும் தரப்பட்டிருக்கும். போட்டி விற்பனையைக் குறிக்குமிடத்து அதற்குரிய போர்த்துகீய உற்பத்தி 'Port.' என்று காட்டப்பட்டிருக்கும். அடையாளம் யாதுமின்றி உற்பத்திமட்டும் உள்ளவிடத்து, அவ்வுற்பத்திச் சொல் வடமொழிக்குரியதென்பது ஒரு ஸங்கேதம். வடமொழிப் பதங்களை லெக்ஸிகன் ஒழித்துக் கட்டிய விதம் இப்படி!

மற்றொரு புகார் கொச்சைச் சொற்களும் லெக்ஸிகனில் காண்கின்றன என்பது. இதனுல் இந்த அகராதியைப் பார்ப்பவர்க்கு எந்தச் சொல் சரி என்ற உணர்ச்சி உண்டாகாதென்றும், நூல்-ஆசிரியர் முதலியவர்களுக்குப் பயன்படாமற் போய்விடுகிறதென்றும் இப்புகாரின் கருத்து. சில உதாரணங்கள்: "அக்கரை, அக்கறை என்ற இரண்டில் எது சரி? ஆத்துக்காரர் என்று எழுதலாமா? இஞ்சக்கம், இலஞ்சகம் என்ற இரண்டில் 'இஞ்சக்கம்' என்பது அறியாதார் வழங்கிவரும் கொச்சையல்லவா? இவை பற்றிய விஷயங்களில் அகராதி உதவ வேண்டாமா?" என்று கேள்விமேற் கேள்விகள் போட்டுவந்தார்கள். அகராதியின் நோக்கமாகத் தற்கால அகராதியாளர்கள் கொண்டுள்ளதை அறியாத காரணத்தால் இப் புகார் தோன்றியது. உத்தமமான அகராதியில் ஒரு மொழியிலுள்ள எல்லாச் சொற்களும் காணப்படுதல் வேண்டும். அகராதி என்பது பொருளை மாத்திரம் உணர்த்துகிற கருவிநூல் என்ற கொள்கை மாறி, இந்த இயல்போடு ஒரு மொழியின் ஆரம்ப காலத்திலிருந்து தற்காலம் வரையுள்ள எல்லாச் சொற்களுக்கும் ஆகரமாகவும் அது விளங்குதல் வேண்டும். கொச்சைச் சொல் முதலியவற்றை நீக்குதல் கூடாது. இவற்றுல் விளையும் நன்மைகள்

மிகப்பல. ஒரு மொழியின் ஒலிமரபு (*Phonetic System*) இவற்றில் நன்ருகப் புலப்படும். ஒரு தாய்மொழியினின்றும் கிளைமொழிகள் தோன்றுதற்கு இவை காரணமாயுள்ளன. ஒரு சொல் சரியா, பிழையா என்று நிர்ணயிப்பது அகராதி யின் வேலையன்று. இலக்கண ஆசிரியர்களுக்கு உரிய வேலை. திருந்தியது, கொச்சை என்ற வியவகாரமே தற் காலத்தார் நீக்கிவிட்டனர். இன்ன சொல்லை வழங்கலாம் என்று அகராதி அனுமதிப்பதாகக் கொள்ளுதல் தவரும். (*Encyclopaedia*)வை நோக்கிஞல் தற்கால அகராதியாளர் கொள்கைகள் நன்கு புலப்படும். ஆகவே, 'இந்த அகராதி இலக்கிய அகராதியா? வழக்கியல் அகராதியா? மரபு அகராதியா? குறுநில அகராதியா? எல்லாமா? இன்றேல் ஒவ்வொன்றில் கொஞ்சமா?' என்ற கேள்விகளெல்லாம் அறியாமையால் எழுந்தனவேயாம். லெக்ஸிகன் தொடக் கத்தில் பதிப்பாசிரியரா யிருந்தவரும் இந்த நோக்கத்தை அறிந்து அகராதி வேலையில் ஈடுபட்டனர் என்று சொல்வதற் கில்லை. உவின்ஸ்லோவின் அகராதியைச் செவ்விதாக்கு தலே நோக்கமாகக் கொண்டவர்க்கு மேலே விவரித்த தற் கால நோக்கம் புறம்பு என்பது கூறவும் வேண்டுமா? லெக் ஸிகன் 'ஒத்தி' முதலிய ஒருசில சொற்களைக் கொச்சை (*Corrupt form*) என்றும், சிலவற்றைப் பேச்சுவழக்கு (*Collo-quialism*) என்றும், வேறு சிலவற்றைப் பிராதேசிகம் (*local*) என்றும், இன்னும் சிலவற்றைச் சில வகுப்பினர் வழக்கு (*Brahmin usage*) என்றும் இங்ஙனமாக எழுதி இவ்வகைப் புகாரைத் தணித்து வந்தது.

லெக்ஸிகன் பதங்களைக் குறித்து ஒருவகைச் செய்தி களை மட்டும் கூறி இப்பொழுது அமைகின்றேன். சான்றூர் என்பதற்குக் கள்-இறக்கும் தொழிற்குரியோர் என்பது நூல்களிலும் சிலாசாசனங்களிலும் காணும் வழக்கு. இது 'சான்று' என்பதிலிருந்து தோன்றியதாகக் கருதி, அச் சொல்லுக்குக் 'கள்' என்று பொருள்கொண்டு, (17-ம்

நூற்றுண்டில்) சுமார் 325 ஆண்டுகளுக்கு முன்பிருந்த குமர குருபர சுவாமி ஒரு செய்யுள் செய்துவிட்டார். அந்த மேற்கோளைக் காட்டி 'சான்று' என்பதற்குக் 'கள்' என லெக்ஸிகன் பொருள் கூறியிருந்தது. குறிப்பிட்ட ஒரு சாதியாரை இப்பொருள் இழித்துக் கூறுகிறது என்று புகார் வந்தது : இது எளிதில் அடங்குவதாயில்லை. ஜாதிச் சச்சரவு இதனுல் ஏற்படும் என்ற அளவுக்குக் காரியம் முற்றிவிட்டது. இறுதியில் இப்பொருள் நீக்கப்பட்டது. இங்ஙனமே, அக்கிரகாரம் என்ற சொல்லுக்குப் 'பார்ப்பனச் சேரி' என லெக்ஸிகன் கொடுத்துள்ளது. இது பிராமண வகுப்பினருள்ளே ஒரு சிறு கலக்கத்தை உண்டுபண்ணிற்று. இடைச்சேரி, பட்சேரி, பறைச்சேரி என்று சொல்லலாம் ; நாற்குலங்களிலும் மேற்குலத்தவராகக் கருதப்படும் பிராமணர்கள் வாழும் இடத்தைப் 'பார்ப்பனச் சேரி' என்று சொல்லுதல் தகுதியாகுமா? - என்று வாதித்தார்கள். ஆனுல், இப்பொருளை எழுதியவர் பிராமணகுலத்தினரான ஒரு வித்துவ சிகாமணி என்று தெரிந்தும், இச்சொல்லிற்கு முன்னோர் ஆட்சியுளதென்று அறிந்தும், முன்னோராட்சிக்கு அகராதியாளர் பொறுப்பாளியல்லர் என்று பகுத்துணர்ந்தும் அமைதியுற்றனர். பின்னர், 'பார்ப்பனச் சேரி' என்ற தொடரை லெக்ஸிகனில் வெளியிட்டபோதும் எவ்விதமான அமைதிக் குறைவும் ஏற்படவில்லை. இங்ஙனமே 'முதலி' என்ற ஜாதிப் பெயரைக் குறித்தும் ஒரு கலக்கம் நிகழ்ந்தது. முதலியார் என்ற மரியாதைப் பெயர் லெக்ஸிகனில் இடம் பெற வேண்டுமேயன்றி, 'முதலி' என்பதனைக் கொடுக்கக் கூடாதெனக் கிளர்ச்சி செய்தனர். ஆனுல், 'முதலி' என்ற சொல் வேறு பொருள்களிலும் வந்துள்ளது. எனவே, இச்சொல்லை நீக்குதல் கூடாது. சொல் இருக்கும்பொழுது அதற்குரிய ஜாதிப்பொருளும் கொடுக்கத்தான் வேண்டும். பம்மல் சம்பந்த முதலியார், ஸி. ஆர். நமச்சிவாய முதலியார், டாக்டர் ஏ. லக்ஷ்மணசாமி முதலியார் முதலிய பலரையும்

கலந்தேன். லெக்ஸிகனில் முதலி என்பதன்கீழ், சாதிப் பொருளைக் கொடாமல், 'முதலியார் என்பதன் கீழ்க்காண்க' என்று கொடுத்துவிட்டு, பிந்திய இடத்தில் பொருளைத் தந் துள்ளேன். இவை போன்றவற்றால் எனக்கு நேர்ந்த தொந் தரவுகள் மிகப் பல.

ஜாதிப் பெயர்களோடு நில்லாமல், இடப் பெயர்களிலும் இவ்வகை அல்லற்பாடு நேர்ந்தது. 'கும்பகோணம்' என் பதற்குப் 'பித்தலாட்டம்' என்ற பொருள் சென்னை முதலிய பிரதேசங்களில் வழக்கிலுள்ளது. இப்பொருள் 'உவின்ஸ் லோ'விலும் காணப்படுகிறது. லெக்ஸிகனில் இப்பொருள் கொடுக்கப்பட்டபொழுது, பெருந் தொந்தரவு ஏற்பட்டது. '*Gretna Green*' என்ற ஊரைப்பற்றி இவ்வகையான அப வாதம் இருந்தது என்ற உதாரணங்களையெல்லாம் எடுத்துக் காட்டினேன். ஒன்றும் பயன்பெறவில்லை. இறுதியில் அப் பொருளை நீக்கிவிடும்படி நேர்ந்தது. இப்படியே 'தென் காசி யுபசாரம்' என்ற தொடர் பற்றியும் அவ்வூர் நண்பர் ஒருவர் 'நீங்கள் திருநெல்வேலி ஜில்லாவில் வேளாளமரபிலே பிறந்தும் இத்தொடரை லெக்ஸிகனில் புகுத்திவிட்டீர்களே' என்று என்னிடம் முறையிட்டார்.

லெக்ஸிகன் பதிப்பாசிரியர் வேலையில் இரவும் பகலு மாய் உழைத்து வந்தேன். சென்னைப் பல்கலைக் கழகமும் திருப்தியடைந்தது. இடையிடையே மேற்குறித்தன போன்ற நகைச்சுவை-அனுபவம் இல்லாமற் போனால், பதிப்பாளர் வாழ்வு சிறிது சுவை குன்றித்தான் இருக்கும். பதங்களில் மட்டுமேயன்றி, ஆங்கில உச்சாரணம், சொல் வியுற்பத்தி, ஆங்கிலத்தில் பொருள், தமிழிற் பொருள், பிரயோகங்கள் முதலிய அனைத்திலும் சுவை நிரம்பிய பல செய்திகள் உள்ளன. அவை குறித்துப் பின்னர் நோக்குவோம்.

# கற்றதனால் ஆய பயன்

பொருள் சம்பாதிப்பதற்குத்தானே நாம் படிப்பது? இந்தக் காலத்தில் பணமுடைஞ்சல் அதிகமாக இருக்கிறது. அரசாங்கத்தாருக்குக்கூட வருகிற வருமானம் போதவில்லை. அந்நிய நாட்டிலிருந்து பண உதவி வந்தால், அதை ஏற்றுக் கொள்ளும் நிலைமையில்தான் நாம் இருக்கிறோம். நமது நாட்டில் தாழ்த்தப்பட்ட வகுப்பினருக்குச் சலுகை காட்டிக் காட்டி, உயர்தர வகுப்பினர்கள் என்று சொல்லப்படுகிறவர்கள் கீழ் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறார்கள். வெகு சீக்கிரத்தில் இவர்கள் வறுமைப்பிணியால் கட்டுண்டு அரசாங்கத்தாரின் இரக்கத்திற்குப் பாத்திரமாவார்கள் என்று தோன்றுகிறது. எத்தனையோ புதுத் திட்டங்கள் வகுத்துக்கொண்டு அரசாங்கம் செல்கிறது. அவற்றிற்கெல்லாம் பணம் வேண்டும். ஏதோ அல்ப சொல்பத்தை வைத்துக்கொண்டிருக்கிறவர்களைக் கசக்கிப் பிழிந்தால் அல்லாமல் பணமுடை நீங்க மாட்டாது.

பள்ளிக்கூடங்களும், கலாசாலைகளும் மாணவர்கள் மூலமாக அவர்களது பெற்றோர்களைத் தண்டித்துப் பண வசூல் செய்கிறார்கள். சமீபத்தில் இதற்கு நிவிர்த்தி உண்டு என்று எனக்குத் தோன்றவில்லை. ஆண்டுதோறும் மாணவர்கள் தொகை பெருகுகிறது. கல்வித் திட்டங்கள் நூதன முறையில் வளர்க்கப்படுகின்றன. பெற்றோர்களுக்குத் தம் மக்களின் கல்விச் செலவு ஏறிக்கொண்டே செல்கிறது. இவ்வாறு அமைந்திருக்கும் காலத்தில், நமது படிப்பெல்லாம் பொருள் சம்பாதிப்பதற்குத்தானே என்று நாம் நினைப்பதில் குற்றமொன்றும் இல்லை. பண வருவாயின் பொருட்டுத்தான் நாம் கற்றல் வேண்டுமென்று நான் கருதுவதாக எல்லாருக்கும் தோன்றும். ஆனால், உண்மை அது அல்ல.

இந்தப் பண வருவாயைக் காட்டிலும், எத்தனையோ மடங்கு பெருமை தருவதான பிறிதொரு பயனையும் நாம் இங்கே நினைவுகூரலாம். ஆனால், இந்தப் பயனை அவ்வாறு அளவிட முடியாது. பெருமையும், பதவியும், புகழும் எளிதிற் கிடைப்பனவா? இவற்றை அளவிட முடியுமா? இவைகளைக் கல்வியின் பயன் என்று கூறுவதில் தடையில்லை அல்லவா? 'கற்றோர்க்குச் சென்ற விடமெல்லாம் சிறப்பு' என்றும், 'அறிவுடைய ஒருவனை அரசனும் விரும்பும்' என்றும், 'கேடில் விழுச் செல்வம் கல்வி' என்றும் நமது பெரியோர்களும் கூறியுள்ளனர். இவைகளைக் கல்வியின் பயன் என்று சொல்லலாம். ஆனால் நான் கருதுவது இவற்றைக் காட்டிலும் சிறந்த வேறு ஒரு பயனை. எவ்வகையாக இப்பயனைத் தெரிந்துகொள்வது என்பதை நாம் நன்றாகச் சிந்தித்தல் வேண்டும். நல்ல, சிறந்த நூல்களைக் கற்பதனால் நற்குணமும், நல்லொழுக்கமும் விருத்தியாகின்றன. இதைக், 'கல்வியின் எதிர்காலம்' என்று பொருள்படும் ஓர் ஆங்கிலச் சிறு நூலில், அதன் ஆசிரியர் நன்கு விளக்கியுள்ளார். அதே நூலில், கற்பதற்குமுன் நமது மனச் சுவர் காலியாய் - வெற்றிடமாய் இருக்கிறது என்றும், கல்வி கற்றதன்பின் அதில் ஆழமான சித்திரங்கள் தோன்றுகின்றன என்றும் கூறுகின்றார். இவருக்கு முன்னும் இக்கருத்தை வெளியிட்டிருக்கிறார்கள். 'மில்டன்' முதலிய பெருங் கவிஞர்களும் இக்கருத்தை உட்கொண்டு, "ஒரு பெரியோனது உயிர் ஆற்றலே அவன் இயற்றிய பெருநூல்" என்கிறார். அவருக்கும் பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் அரிஸ்டாடில், "ஆன்ம வளர்ச்சியின் பொருட்டே கல்வி கற்பது" என உறுதி கூறுகிறார். நமது நாட்டிலும்,

.... .... ...கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே

எனக் கல்வியின் அவசியம் வற்புறுத்தப்படுகிறது.

ஆனுல், என்ன விதமாக ஆன்ம வளர்ச்சி ஏற்படு கிறது? நூல் கற்பதனுல் உண்டான பயன், தோற்றத்தால் அறியக்கூடியபடி விளங்குகிறதா? - என்ற கேள்விகளுக்கு விடை கொடுப்பது எளிதல்ல. என்ன விதமான லாபம் என்ப தும் நமக்குப் புலப்படவில்லை. இவர்கள் கூறுவன எல்லாம் கல்வி கற்றவனுக்குப் புலப்படுமேயல்லாது ஏனையோருக்குப் புலப்படா. நாம் முன் கூறியபடி, அதைத் தொட்டு எண்ணிப் பார்க்க அளவிடமுடியாது. அது இன்ன வகையினது என்று வர்ணிப்பதும் சாத்தியமல்ல. கல்வி முற்றும் நமது வசமாய் நாம் அதனைக் கையாளத் தொடங்கியதன் பின்னரே, அதன் தன்மை விளங்கக்கூடியதாய் உள்ளது; அவ்வாறு சித்தி எய்தும் வகையில், அதன் தன்மையைக் குறித்துச் சிற்சில குறிப்புக்கள்தான் நம்மால் தர முடியும்.

'கற்றல்' என்றேன். இதனுல் நல்ல நூல்களை, நல்ல முறையில் கற்பதைத்தான் நான் மனத்தில் கொண்டுள்ளது. நாலடியாரில்,

> கல்வி கரையில, கற்பவர் நாள்சில
> மெல்ல நினைக்கிற் பிணிபல—தெள்ளிதின்
> ஆராய்ந் தமைவுடைய கற்பவே நீரொழியப்
> பாலுண் குருகிற் றெரிந்து

எனக் கூறப்பட்டுள்ளது.

இவ்வகையாகத் தேர்ந்தெடுத்த நூல்களைக் கற்பதனுல், நமது மனமும் பாவனையும் வாழ்க்கையுண்மையை உணரும் மதிநுட்பமும் பலதிறப்பட்ட பொருட்காட்சிகள் நிரம்பி அழகு பெறுகின்றன. இம்மூன்றும் புதியவாக உயிர்த் தத் துவம் பெற்றன போலத் தூண்டப்படுகின்றன. இவ்வாறு கனவிலும் நனவிலும் நிகழ்கின்றன. சிற்சில காலங்களில், நாம் நினைத்தறியாதபடி பாடல்களின் துணுக்குகளும் முழுப் பாடல்களும் நமது மனத்தில் உதித்துவருகின்றன. சில

காலங்களில் சட்டையிட்டு வெளியே புறப்படும்போது, இவ்வாறு நிகழ்தல் உண்டு. ரயிலிலிருந்து கீழ் இறங்கும்போதும், இந்த நிகழ்ச்சியைக் காணலாம். சிலப்பதிகாரத்தில் உள்ள சில அழகிய அடிகள் இவ்வாறு தோன்றுதல் சர்வ சாதாரணமானது. கம்பனது மகா காவியத்திலிருந்து எத்தனையோ அடிகளும், பாடல்களும் இவ்வாறு வருதலை நமது அனுபவத்தில் காண்கிறோம். பாடல்கள் மட்டும்தான் இப்படி வரும் என்பது இல்லை. அழகிய கதையை வாசிக்கிறோம்; அந்தக் கதையில் அபூர்வமான சந்தர்ப்பங்கள் நிகழ்கின்றன. அவை நமது மனத்தை விட்டு அகலுவதில்லை. நமது நித்திரையில் கூட அவைகள் தோன்றிக் கதாபாத்திரங்களில் நம்மை ஈடுபடும்படி செய்கின்றன.

வெகு காலத்திற்குமுன் எனக்கு நிகழ்ந்த ஓர் அனுபவத்தைச் சொல்கிறேன். 'ஸ்காட்' எழுதிய 'ஐவன்ஹோ' (*Ivanhoe*) என்ற சரித்திரக் கதையை வாசித்துக்கொண்டிருந்தேன். முடித்த இரவு முழுவதும் அதே நினைவாக இருந்தது. அதன் பல பகுதிகளும் பாத்திரங்களும் முற்றும் என்னைக் கவர்ந்துவிட்டன. இவ்வாறே பல ஆண்டுகளுக்குப் பின்னர் நான் வாசித்த 'பிரைடு அண்டு பிரிஜுடீஸ்' (*Pride and Prejudice*) என்ற ஆங்கிலக் கதையில் பல சம்பவங்களும் என் நித்திரையைப் பங்கப்படுத்தி வந்தன. செய்யுளில் ஏதேனும் ஓர் அடி ஞாபகத்திற்கு வந்தபின், அதனோடு தொடர்ந்து நிகழ்ந்த சந்தர்ப்பங்கள், காட்சிகள் முதலியன, நமது மனத்தைக் கவர்ந்து இன்பத்தை ஊட்டுகின்றன. இவைகள் எல்லாம் நமது மனத்தையும், நமது நல்லொழுக்கம், நற்குணம் முதலியவற்றையும் வளர்ச்சியுறச் செய்கின்றன. இக்காட்சிகளின் நல்லியல்பும் அளவும் நமக்குப் பெரும் துணையாக உதவுகின்றன. இவற்றால் நமது பாவனையானது நிறைந்து திகழ்கிறது. மேன்மேலும் நல்ல நோக்கத்தை மேற்கொள்கிறது. ஆனால், இதுபோன்ற நிகழ்ச்சிகளால் மட்டும் பூர்ண திருப்தி அடைந்துகொள்ள முடியாது. இவைகளால் கல்வி

இல்லாதாரைவிட நாம் சிறந்து விளங்குகிருேம் என்பது உண்மைதான். ஆனுல், இந்த அளவு போதியது ஆகாது. நாம் பெறும் பயனில் ஒரு மிகச் சிறிய அம்சத்தையே இது விளக்குவது. இப்பயனின் தன்மையை அடுத்துக் காண்போம்.

## 2

தமிழ்மறை இயற்றிய திருவள்ளுவர்,

'கற்றதனுல் ஆயபயன் என்கொல் வால்அறிவன்
நற்ருள் தொழாஅர் எனின்'

என்று அருளிச் செய்திருக்கிருர். இதற்குச் சாதாரணமாக, கற்றதற்குப் பயன் இறைவனை வணங்குதல் என்று கூறி முடிப்பர். கல்லாதவர்களும், எழுத்துவாசனை இல்லாதவர்களும் பக்தியோடு ஆலயங்களுக்குச் சென்று இறைவனை வணங்குதல் கண்கூடு. இது கல்வியின் பயனன்று. கல்லாதவர்களைத் தவிர, விலங்கினம் முதலியவைகளும் தெரியாமலே மக்கள் செய்வது போலவே, இறைவன்மீது பூத் தூவுதல் முதலியன செய்வது பற்றிய கதைகள், புராணங்கள் முதலியவற்றில் மிகவாகக் காணப்படுகின்றன. இப்படி இருக்க, கற்றதற்குப் பயன் இறைவனை வணங்குதல் என்று எவ்வாறு சொல்வது? 'பொன்மலர் நாற்றமுடைத்து' என்று சொல்வதுபோல, கற்பவர்கள் தெய்வ சிந்தனையுடையவர்களாய் இருந்து, தெய்வ வணக்கம் செய்து வருவாராயின், அவர்கள் உலகில் சிறப்புற்று விளங்குவார்கள் என்பது இக் குறளின் பொதுக் கருத்தாக இருக்கலாம்.

பொருள் வருவாயும் தெய்வ உணர்ச்சியும் கல்விப் பயனுக அமையும் என்று இன்றுகூடத் தற்காலத்தார் கொள்ள மாட்டார்கள். தற்காலத்தார் என்று குறிப்பிடுவது மேலை நாட்டு அறிஞர்களையும், அவர்களைப் பின்பற்றும் நம்மவர்களையும்தான். அவர்கள், நமது அறிவு விசாலித்து, வாழ்க்கையின் இயல்பை அதிநுட்பமாய்க் கவனிக்கும் திறமையே

கல்வியால் விளையும் பயன் என்பர். ஒவ்வொருவனுடைய தனிப்பட்ட வாழ்க்கையும் மிகச் சுருங்கியது. ஆனால், வாழ்க்கை என்பதைப் பொதுப்பட நோக்குவோமானால், அது மிக விரிந்தது; பலதிறப்பட்டது. அதில் அடங்கிய கருத்துக்கள் எத்தனையோ சிக்கல் உடையதாய் இருக்கும். ஒரு தனிப்பட்ட மனிதனால் இவை அனைத்தையும் தெரிந்து கொள்ள முடியாது. தற்காலத்தில் அரசியல், சமூக நிலை முதலியவற்றில் ஈடுபட்டு வரும் ஒருவனுக்கு, வாழ்க்கையின் இயல்புகள் நன்றாகத் தெரியவேண்டும் என்று நினைப்போம்; ஆனால், அவனுடைய சொந்த வாழ்க்கையிற்கூட ஒரு சிறு பகுதியையே அவன் அறிந்துகொள்ள இயலும். வாழ்க்கையின் அளவு பெருகப் பெருக, அதைப்பற்றிய அறிவு விரிய விரிய, நமது அறிவும் மதிநுட்பமும் அவற்றை உட்கொண்டு, வாழ்க்கையின் இயல்பை ஒருவாறாக உணரப் பயன்படுகின்றன. நமது சொந்த உயிர்வாழ்க்கையை நாம் நேர்முகமாக அனுபவத்தால் தெரிந்துகொள்கிறோம். பிறருடைய வாழ்க்கை நிலையை அறிந்துகொள்வது எப்படி?

இங்கே பிறர் என்று நான் சொல்லியதை ஆழ்ந்து கவனித்தல் வேண்டும். நமது காலத்திற்கு முற்பட்ட அனைவரும் பிறரே. அதுபோல நமது நாட்டிற்கு அப்பால் உள்ள தேசங்களில் வாழ்ந்துவருபவர்களும் பிறரே. இங்ஙனமாகக் காலம் இடையிட்டும், தேசம் இடையிட்டும் வாழ்ந்துவருபவர்கள் எல்லாம் பிறர்களே ஆவர். இவர்களுடைய வாழ்க்கை இயல்பை எவ்வாறு அறிதல் முடியும்?

பல நூல்களையும் கற்பதனால்தான் அதனை அறிதல் கூடும். மக்கள் வாழ்வின் நிலை, நம்முடைய மதிநுட்பத்தின் இயல்பு, நம்முடைய அனுபவம் இவைகள் எல்லாம் பலவாறாக ஒன்றோடொன்று தொடர்புபட்டு நின்றும், விரிந்தும், ஆழ்ந்தும் நமக்கு உதவுகின்றன. நம்கூட, நம் காலத்தவராய் இருப்பவர்களோடு, நாம் கொண்டுள்ள தொடர்பு மிக மிக எளிதாய் அமைகின்றது. நாம் எதிர்பார்த்தவைகளும்

கூடியவரையில் முற்றுப் பெறுகின்றன. நமக்கு உலகத்தைப் பற்றி ஏதேனும் வெறுப்புகள் இருக்குமானுல், அவ்வெறுப்புகள் எல்லாம் நீங்கி நம்முடைய அனுபவம் முதிர்ச்சியுறுகின்றது. இவற்றிற்கெல்லாம் மேலாக மக்களுடைய லட்சியப் பண்பாடு, குன்றின்மேல் இட்ட விளக்குப்போல் நமக்குப் புலப்படுகிறது.

இவைகள் எல்லாம் நாம் நூல்களேக் கற்பதனுல் விளேயும் பயனுகும். ஆனுல், இவற்றைப் பணம், காசு முதலியவற்றைப்போலத் தொட்டுத் தெரிந்துகொள்ள முடியாது. நூல்களேக் கற்று, அவற்றின் பொருள்களே நம்முடையதாக ஆக்கிக்கொள்வதிலேதான் அதன் சிறப்பு முற்றிலும் இருக்கிறது. இவ்வாருக ஆக்கிக்கொள்ளுதல் எல்லாராலும் முடியாது. இக்காலத்தில் பலரும் நூல்களேக் கற்கிருர்கள். அவ்வாருகக் கற்பவர்களில் பெரும்பாலோர் ஒரு பயனும் இல்லாதபடி கற்றுவருகிருர்கள். தற்காலிக மகிழ்ச்சி கொள்ளுவதற்கும், கடினமான வேலே செய்தபின் மனத்திற்கு நெகிழ்ச்சியைக் கொடுப்பதற்கும், அல்லது பெருந் துன்பத்தினின்று அகன்று செல்வதற்கும்தான் நூல்களே எடுத்துக் கற்கிருர்கள்.

அதாவது, பொழுதுபோவதன் பொருட்டே நூல்களேக் கற்பர். காலம் என்பது விலேமதித்தற்கரிய நிதி. இந்த நிதியை இரு கைகளாலும் எடுத்து வீணே சிதறுகிருர்கள். இந்தக் காலம் அவர்களுக்கு ஒரு பாரமாக இருந்துவருகிறது. நூல்களேக் கற்ருல் இந்தச் சுமை இறங்கும் என்று கருதியும், காலத்தைச் சிறிதுசிறிதாகப் போக்கிவிடலாம் என்று கருதியும் வருகிருர்கள். வேறு எதன்பொருட்டும் இவர்கள் கற்பதாகத் தெரியவில்லே. ஏதாவது பயன் கருதியிருப்பார்களாயின், அந்தப் பயனுக்குரிய அடையாளம் சிறிதாவது அவர்களிடத்தே இருக்கும். ஏதாவது பயன் இருக்குமானுல் அது அவர்கள் அறியாதபடியே தோன்றிவிடுகிறது. அறியாத பயன்கள் நன்மையையும் விளேவிக்கலாம் ; தீமையையும்

விளைவிக்கலாம். கற்பவர்களிடத்தில் அந்தப் பயன் தங்குவதாகத் தெரியவில்லை. ஒருகால் தங்குமாயின் அது கேடு விளைவிப்பதாகவும் இருக்கலாம்.

ஏதேனும் ஒரு நூலை வாசித்தவரை எடுத்துக் கொள்வோம். 'நூலைக் கற்றீரே, என்ன பயன்?' என்று கேட்டால், அவரால் ஒன்றும் பதில் சொல்ல முடியாது. பொழுது போக்குக்காக அவர்கள் எழுதிவரும் தினசரிக் குறிப்புப் புஸ்தகத்தில் பயன் உள்ள ஒரு குறிப்பும் காணப்படாது.

"இந்தப் புத்தகத்தைப் படித்தேன். இது எனக்குப் பிடித்திருக்கின்றது, அது எனக்குப் பிடிக்கவில்லை" என்ற குறிப்புக்கள்தான் காணப்படும். புத்தகத்தை வாசித்த பிற்பாடு, அது அலமாரிக்குள் புகுந்துவிடுகிறது. அது ஒரு கதையாக இருக்குமானால் கேட்கவே வேண்டாம். வாசித்த அனுபவமெல்லாம் அந்தப் புத்தகத்தை மூடி வைப்பதோடு சரி........! இதற்கு மாறாகப் பயனுள்ளபடி வாசித்தால், அந்தப் புத்தகம் அதோடு நின்றுவிடுவதில்லை. அதைப் பற்றிச் சிந்தனை செய்வார்கள். இதனால் வாசித்துப் பயன் பெறுவதற்கும் வாசிக்க வேண்டும் என்பது தெளிவாகிறது.

வாசித்த பின், நாம் என்ன அனுபவத்தை அதிலிருந்து பெற்றுக்கொண்டோம் என்ற முடிவைத் தெரிந்துகொள்ளுதல் வேண்டும். இவ்வாறு நிகழ்வதற்குச் சில சில நியமங்கள் நமக்கு வேண்டும். அந் நியமங்களைக் குறித்துப் பின்னர் நோக்குவோம்.

## 3

பொதுப்பட, நமது வாழ்க்கையின் விழுப்பத்தை நமது மக்கள் சரியாக உணர்ந்துகொள்வது இல்லை. வாழ்க்கையின் விழுப்பம் என்றாலே அவர்களுக்குப் பொருள் விளங்குவதும் அரிது. வாழ்க்கையை ஒரு விநோத நிகழ்ச்சியாகவே அவர்கள் கொண்டுள்ளார்கள். இவ்வாறு ஏற்பட்ட மனப்பான்

மைக்கும் வாழ்க்கையின் விழுப்பத்திற்கும் வெகு தூரம். இதை ஓர் உதாரணத்தால் விளக்குகிறேன்.

பெரும்பாலோர் தினசரிப் பத்திரிகை வாசிக்கின்றனர். பலர் அதில் காணும் விநோத நிகழ்ச்சிகளைப் பார்த்து அதனோடு அமைந்துவிடுகிறார்கள். அதாவது 'அரசகுமாரன் பிச்சைக்காரியை மணந்தான்' என்ற தலைப்பில் எவ்வளவு மோகம் இருக்கிறது என்பது தினசரிப் பத்திரிகை வாசிப்பவர்களுக்குத் தெரியும். அந்தப் பகுதியைத் திரும்பத் திரும்ப வாசிப்பதிலும், தாம் வாசித்ததைப் பிறருக்கு எடுத்துச் சொல்வதிலும் மிக்க மகிழ்ச்சி கொள்கிறார்கள். இதே மனப்பான்மை மிருகக் காட்சிச் சாலைக்குச் செல்வதிலும் காணப்படுகிறது. அங்கே புதியதாக ஓர் குரங்கினம் வந்திருக்கிறது என்றால், ஆயிரக்கணக்கான மக்கள் கூடிவிடுகிறார்கள். இரண்டு தலையுள்ள ஒரு குழந்தை காட்சிச் சாலைக்கு வந்திருக்கிறது என்றால், அதைப் பார்ப்பதற்கு ஜனங்கள் லக்ஷக்கணக்கில் கூடிவிடுகிறார்கள். அந்தக் காட்சியைப் பார்ப்பதில் தங்களுக்கு எவ்வளவு கஷ்டம் நேரிட்டாலும் பொருட்படுத்துவது இல்லை. இவைகள் எல்லாம் வாழ்க்கையின் கௌரவத்தை, விழுப்பத்தைச் சிறிதும் கவனியாத குறைபாடாகும். முன் கூறியதுபோல், இம் மனப்பான்மை உடையார்க்கு உண்மையான கல்வியும், பயனும் கிடைப்பது அருமை.

வாழ்க்கையின் விழுப்பத்திற்கு ஓர் உதாரணம் கொடுக்கிறேன். ஜி. கே. செஸ்டர்டன் என்ற ஆங்கில ஆசிரியரைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள். அவர் வயிற்றுப் பசியால் மாண்டவர்களைப் பற்றி எழுதும்போது, அவ்வாறு மாண்டவர்கள் நமக்கு மிகுந்த துன்பத்தை விளைவிக்கிறார்களெனக் கூறிவிட்டு "கேவலம் மரணந்தானே அதி துக்கமானது" என்று கூறி முடிக்கின்றார். இம்முடிவு வாழ்க்கையின் விழுப்பத்தை நன்கு புலப்படுத்துகின்றது. இதேபோல ஆசிரியர் வள்ளுவர்

"பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யால்"

என்றார். இதில் ஜாதி வேற்றுமை தொழில் மூலமாக ஏற்பட்டிருப்பது ஓர் உண்மை. எல்லா உயிர்களும் பிறப்பினால் ஒத்தவை என்பது மற்றோர் உண்மை. இவ்விரண்டிலும் பிந்தியது வாழ்க்கையின் சிறப்பை எடுத்துக் காட்டுகிறது. அரசகுமாரன் பிச்சைக்காரியை மணந்தது, வாழ்வின் சிறப்பல்ல. ஆனால் திருமணம் என்பது வாழ்வின் சிறப்பிற்கு அடையாளமாக நின்று கௌரவம் அளிக்கிறது. இவைகளைப் போலப் பல உதாரணங்கள் காட்டலாம்.

நம்முடைய கல்வி பயனுடையதாய் இருக்க வேண்டுமானால் அது வாழ்வின் சிறப்பை மேற்கொண்டதாக இருக்க வேண்டும். எங்கெங்கெல்லாம் இந்த வாழ்க்கையின் விழுப்பத்தைக் காண்கிறோமோ, அங்கெல்லாம் நாம் நன்றாக அவ்விழுப்பத்தை அறிந்துகொள்வதற்குத் தவறக்கூடாது. அவ்வகை நிகழ்ச்சிகளை உண்மை வாழ்விலும் காணலாம்; நூல்களிலும் காணலாம். அவற்றைக் கண்டதும் அவற்றின் இயல்பைத் தெரிந்துகொள்வதற்கு நாம் பயிற்சி செய்துகொள்ள வேண்டும்.

இதற்குரிய நோக்கமும், திடீர் என்று ஏற்படுவதும் ஆகலாம்; ஏதேனும் ஒரு புஸ்தகத்தை வாசித்துக்கொண்டு இருக்கும்போது அதில் ஏதேனும் ஒரு வாக்கியம் நமக்கு நமது நோக்கத்தை இவ்வழியிற் செலுத்தலாம். ஒரு முறை இந்த எளிய ஆடம்பரமற்ற அடிப்படையான உண்மையைக் கண்டுகொண்டோமானால் நாம் கல்வி கற்றதின் பயனை அடைவோம் என்பது திண்ணம்.

இதிலிருந்து ஓர் உண்மை புலப்படுகிறது. நமது கல்வி மேன்மேலும் கல்வியை வளர்ப்பதற்குப் பயன்படும் என்பதே இவ்வுண்மை. ஆனால், ஒரு முக்கியமான விஷயத்தை இங்கே குறிப்பிட வேண்டும். சரியாக உள்ள மனநிலையில்

நாம் நூல்களைக் கற்றல் வேண்டும். அதாவது இலக்கியம் என்பதன் ஆத்மாவை நாம் வசீகரித்தல் வேண்டும். இவ்வாறு வசீகரிக்க வேண்டுமானால், நமது இலக்கியங்களின் பூர்வ சரித்திரம் உண்மையாகவே புலப்படுதல் வேண்டும். புராதன இலக்கியங்கள், அவை தோன்றிய காலத்து, அவற்றிற்கு இருந்த தனிப்பட்ட உயிர் ஆற்றலோடு தற்காலத்திலும் அது விளங்குதல் வேண்டும். இந்த அரிய உண்மையை நாம் எப்பொழுதும் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளுதல் அவசியம்.

இதனை விளக்குவதற்கு ஒன்று சொல்கிறேன் : அதாவது புதிய விஷயமோ, அல்லது நாம் ஆழ்ந்து அறியாத கல்விப் பொருள் ஒன்றோ நம் மனத்தில் முதன்முறை தாக்கும்போது, அந்த விஷயம், அல்லது பொருளினுடைய பூர்வ சரித்திரம் முழுவதையும் ஒன்றுசேர்த்து அறிதல் வேண்டும். காலமுறைப்படியும், பொருள் முறைப்படியும் பாகுபடுத்தி அவற்றைத் தெரிந்துகொள்கிறோம். அவ்வாறு தெரிந்துகொண்டவுடன், அவற்றிற்குத் தற்காலத்திலே உள்ள உண்மை இயல்பும் நமக்கு நன்றாக வெளியாகிறது. இப்படி வெளிப்பட்டவுடன் நம் அறிவு விரைவில் தொழில்பட்டு அப்பொருள்களை நன்றாக உணர்ந்துகொள்கின்றது.

உதாரணமாக, தமிழ் இலக்கியங்களை எடுத்துக்கொள்வோம் : அதன் அளவு மிகுதியாக உள்ளது. முதல்முதலிலே, அதன் சரித்திரத்தை வாசித்துக்கொள்வோம் என்று முற்பட நினைத்துக்கொள்வோம். பல நூற்றாண்டுகள் செல்லச் செல்ல அது வளர்ந்து வந்திருக்கிற பொது நெறியானது நமது மனத்தில் படுகிறது. இன்ன காலப் பகுதியில் இன்ன நெறியில் இது பரந்து வந்திருக்கிறது என்று தெளிவாக உணரலாம்.

முற்காலப் பகுதிக்கும், பிற்காலப் பகுதிக்கும் உள்ள தொடர்புகளும் நாம் அறிகிறோம். முற்காலப் பகுதி இலக்கியங்கள் அதற்கு அடுத்து வரும் காலப் பகுதியில் உள்ள

இலக்கியங்களை நெறிப்படுத்துகின்றன. அப்போது பொது நெறிகளும் வகுக்கப்படுகின்றன. இவற்றால் தெளிவான எல்லைப் பகுதிகளும், தலைமைக் குறிப்புக்களும் நமக்குக் கிடைக்கின்றன. இதன்மேல், பூர்வ இலக்கியங்கள் நம்முடைய காலத்து இலக்கியங்கள் போலவே நமக்கு முற்றும் உண்மையாகவே முடிகின்றன.

நமது இலக்கிய வாழ்வில் ஒரு தலைமையான பங்கு நமது பூர்வ இலக்கியங்கள் எடுத்துக்கொள்கின்றன என்று நாம் கூறலாம். ஆகவே, நாம் இலக்கியங்களைக் கற்பதில் முதலாவதாக இலக்கிய சரித்திரத்தை அறிந்துகொள்வது அவசியம். அவ்வாறான சரித்திரம் தமிழ்மொழியில் எழுதப் படவில்லை. அவசியம் என்று நினைப்பாரும்கூட மிகவும் அரியர். காலங் கடந்த ஆராய்ச்சி என்று இகழ்ந்து பேசுவோரும் பலர் உளர். உண்மையான தமிழ்த்தொண்டு ஆற்றுவதில் இலக்கிய வரலாற்று ஆராய்ச்சி மிகச் சிறந்ததாய் உள்ளது என்பதை நாம் அறிவதில் எத்தனையோ நன்மை உள்ளது.

## 4

இலக்கிய வரலாற்று ஆராய்ச்சி மிகவும் இன்றியமையாதது என்று மேற்கூறினேன். இவ்வாராய்ச்சியால் தமிழின் நிலையும், இலக்கியம் தோன்றிய காலத்தில் உண்டான தமிழின் நிலையும், சமூக நிலையும், பிற சூழ்நிலைகளும் தெரிய வரும். உதாரணமாக நெடுநல்வாடை என்ற பழைய நூலை நாம் கற்போமானால், அந்நூலில் அக்காலத்தில் உள்ள வாடைக் காற்றுக் கொடுமையும், அப்பொழுது ஜீவஜந்துக்கள் படுகிற அவஸ்தையும் மிக அழகாகக் கூறப்படுகின்றன. அரசனது மாளிகையும், அங்கே நாயகனைப் பிரிந்து தனியே வருந்தும் ராணியின் துயரமும், போருக்குப் புறப்பட்டுச் சென்று அங்கே பாசறையில் அரசன் இருக்கும் இருப்பும், பிற செய்திகளும் நமக்குப் புலப்படுகின்றன. இதனை வாசிக்கையில் ஏதோ ஒரு மரபைப் பின்பற்றி ஒரு புலவர்

பாடுகின்றார் என்ற கருத்து நமக்குப் புலப்படுவதில்லை ; உண்மையாகவே நிகழ்ந்த நிகழ்ச்சியைப் புலவர் பாடுவ தாகவே தோன்றுகிறது. வேறு ஒரு காரணமும் கூறினேன்.

நாலாயிரத் திவ்வியப் பிரபந்தத்தில் பெரியாழ்வார் பாசுரங்களைப் பலரும் வாசித்திருப்பார்கள். அவற்றின் மூலமாகக் கிருஷ்ணனது லீலைகள் தெரிவதோடு, இவ் ஆழ்வார் காலத்து மக்கள் எப்படியெல்லாம் விளையாடல் புரிந்துவந்தார்கள் என்பதையும் நாம் நன்கு அறிகிறோம். இளமையில் தற்காலத்தில் கிராமாந்திரங்களில் நிகழ்வது போன்ற நிகழ்ச்சிகளே அப்பாடல்களில் காணப்படுகின்றன. காக்கை அழைத்தல், பூச்சூட்டுதல் முதலிய செயல்கள் எல் லாம் இன்றும் நடப்பனவே.

இவ்வாறு உள்ள பாடல்களை எல்லாம் கற்று நூதன நாவல்கள் இயற்றவும் கூடும். ஸ்காட் என்ற ஆங்கில ஆசிரி யர் பல பழம்பாடல்களைக் கற்று அவற்றின் சூழ்நிலைகளை வைத்துக்கொண்டு அழகிய நாவல்கள் இயற்றியுள்ளமை நாம் எல்லோரும் அறிவோம். சரித்திர வடிவிற் புனைந்த நாவல்கள் நமது நாட்டில் மிகுதியாய் இல்லை. இப்பொழுது தான் சில சில தோன்றத் தொடங்கியிருக்கின்றன.

மேற்கூறியது ஒரு நன்மை. இரண்டாவதாக, ஆராய்ச்சி யால் விளையும் வேறொரு நன்மையைக் குறித்துச் சில வார்த்தைகள் : நமக்குப் பண்டைப் பழம்பெரும் நிதியாகக் கிடைத்திருப்பது சங்க இலக்கியங்கள் என்ற தொகுதியாம். இத் தொகுதியின் பின் பதினெண் கீழ்க்கணக்கு என்ற தொகுதி, சைவ-வைஷ்ணவ சமயத்தினர்களால் தொகுக்கப் பட்ட சில தொகுதிகள், புறத் திரட்டு என்ற அருமையான பாடல் தொகுதி நூல், பன்னூல் திரட்டு, பெருந்தொகை முதலியவைகளாம். ஆனல், இவைகளை மதிப்பிடுவதற்குக் கருவிகள் வேண்டும். ஒவ்வொன்றும் இன்னின்ன தன்மை வாய்ந்தன என்று நாம் முற்றும் கற்றுத் தெரிந்துகொண் டால் அன்றி, இவற்றை மதிப்பிட இயலாது.

கவிதை, உண்மை இல்லாதது என்பது இவ்வகை ஆராய்ச்சியினால் ஒருவாறு புலனாகும். தொகைநூல்களும் பலவேறு நெறி பற்றி, பலவாகத் தோன்றுதல் மிக அவசிய மாம். செய்யுட்கள் மாத்திரம்தான் தொகைநூல்களாக அமைக்கத் தக்கன என்று எண்ணுதல் தவறு; உரைநடை நூல்களும் இதற்குப் பயன்படுவனவே. உதாரணமாக, பாரதியின் வசன நூல் பகுதிகளில் பெருஞ் சிறப்புடையவை காணப்படுகின்றன. காலந்தோறும் இவ்வுரைநடைப் பகுதியில் சென்றிருக்கும் நெறியைப் புலப்படுத்தி உரைநடைத் தொகுதியில் அமைத்தல் வேண்டும். விஷயங்களுக்குத் தக்கபடியாகவும் இவைகள் அமையலாம். இந்த முயற்சியில் பாடப் புத்தகங்களில் வருகின்ற உரைநடைத் தொகுதிகளைத் தவிர, வேறு யாதும் வந்ததாகத் தெரியவில்லை. செய்யுள் தொகுதியை மதிப்பிடுதல் எளிதான காரியமன்று. உரை நடைத் தொகுதியை மதிப்பிடுதல் பெரும்பாலும் பொது மக்களால் இயலக் கூடியவை. தமிழின் உண்மை இயல்பையும், ஆசிரியர்களின் திறமையையும் இவ்வகைத் தொகுதி களால் நாம் எளிதில் அறியலாம்.

வேறு ஒரு பயனையும் இங்கே கூற விரும்புகிறேன். அது ஆசிரியர்களைப் பற்றியது. ஆராய்ச்சி நெறிப்படி கால அடைவுக்குப் பொருந்த அமைந்த ஆசிரியரைப் பற்றிய இக் குறிப்புக்கள் நமது நூல்களில் அங்கங்கே காணக் கிடைக் கின்றன. அவர்களைப் பற்றி ஒன்றும் தெரியாத இடத்திலும் புதியதாகக் கதைகள் புனைந்துவிடுகிறார்கள்.

உதாரணமாக அவ்வையார் சரித்திரத்தை எடுத்துக் கொள்வோம். அவரைப் பற்றி எத்தனையோ நவீனமான கதைகள் சேர்த்து ஒரு புதிய அவ்வையாரைச் சிருஷ்டித் துள்ளார்கள். உண்மையை அறிவது ஆராய்ச்சியாளர்க்குக் கஷ்டமாக இருந்தபோதிலும், பொதுமக்கள் இக்கதையினை உண்மையென நம்பி மிகவும் இன்புறுகிறார்கள். அவ்வையா ருக்கு வள்ளுவர் உடன்பிறந்தவர் என்ற கருத்தும் இந்த

நூதன சிருஷ்டியில் உள்ளது. வள்ளுவரைப் பற்றியும் உண்மையில் நமக்கு ஒன்றும் தெரியாது. ஆனுல், அவரையும் பற்றிய கதைகளோ மிகப் பலவாக உள. அக்கதைகளுள் அவரது மனைவியாகக் கூறப்படும் வாசுகியின் சரித்திரம் மிகவும் விநோதமானது. வள்ளுவரைப் போன்ற தூய உள்ளத்தையுடைய பெரியார்க்கு எல்லா வகையிலும் பரிசுத்தையாக இருக்கும் ஒரு மனைவியைத் தேடிக் கண்டு பிடித்திருக்கிருர்கள்! அவள் கணவன் சொல்லைச் சிறிதும் மீருதவள்; அவர் சொற்படியே நடப்பவள். அவளைப் பற்றி ஒரு செய்யுளும் இருக்கிறது.

அந்தச் செய்யுள் அவள் இறந்த பிற்பாடு வள்ளுவர் கூறியதாக அமைந்தது:

> அடிசிற் கினியாளே அன்புடை யாளே
> படிசொல் தவருத பாவாய்—அடிவருடிப்
> பின்தூங்கி முன்எழும் பேதையை யான்பிரிந்தால்
> என்தூங்கும் கண்கள் எனக்கு

இந்தச் செய்யுளால், அவருக்குத் திருமணமானதும், எல்லா வகையிலும் சிறந்தவளான ஒரு மனைவியை அடைந்ததும், அவள் நாயகனுக்குப் புரிந்த பணிவிடைகளின் சிறப்பும் உணர்த்தப்படுகின்றன. சொன்னசொல் தவருதவள் என்பதற்கு ஒரு செய்யுளும் கூறப்பட்டிருக்கிறது. கிணற்றில் வாசுகியம்மையார் நீரிறைத்துக் கொண்டிருந்ததாகவும், அப்போது, "இங்கே வா!" என்று வள்ளுவர் கட்டளையிட்டதாகவும், பாதிவரை வந்த வாளியை அப்படியே விட்டுவிட்டு வாசுகி வந்ததாகவும், திரும்பச் சென்று நீர் இறைக்கும் வரை அந்த வாளி நடுக் கிணற்றில் தொங்கிக்கொண்டிருந்ததாகவும் கதை புனையப்பட்டுள்ளது.

இது போன்ற கற்பனைகளால் இப்பாட்டு வள்ளுவர் பாடியதல்ல என்பதற்கு அதன்கண்ணேயே சான்று இருக்கிறது. தூங்குதல் என்பதற்கு உறங்குதல் என்ற பொருள்

வள்ளுவர் காலத்தில் இல்லை; பிற்பட்ட காலத்தே தோன்றிய தாம். ஆனால், இப் புனைகதைகளால் வள்ளுவர் வாழ்க்கை நம் மனத்தில் நன்றாகப் பதிந்து விடுகிறது ; ஒன்றும் தெரிய முடியாத சூன்யத்திலே ஓர் உருவம் நமக்குப் புலப்பட்டு விடுகிறது.

## 5

வாழ்க்கை வரலாறு தெரியாத பெரியோர்கள் ஒரு சிலரைக் குறித்தும் சில வார்த்தைகள் சொன்னேன். வரலாறுகள் தெரிந்த பெரியோர்களைக் குறித்துச் சில வார்த்தைகள் சொல்ல விரும்புகிறேன். இவ்வாறு தெரிந்தவர்கள் மிகச் சிலரே. ஒரு சிலர் தங்கள் வாழ்க்கையைக் குறித்துத் தாமே எழுதியுள்ளார்கள். ஸ்ரீ டாக்டர் உ. வே. சாமிநாத ஐயரின் 'என் சரித்திர'த்தையும், திரு. வி. க. எழுதிய வாழ்க்கை வரலாற்றையும் இங்கே குறிப்பிடலாம். சாமிநாதையர் அவர்கள் இயற்றிய மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்களுடைய சரித்திரத்தையும் நாம் இங்கே கூறலாம். இவைகள் எல்லாம் நன்றாக எழுதப்பட்டனவே. ஆனால், ஐயர் அவர்கள் எழுதியவை அவர்களுடைய உண்மை இயற்கையை நன்றாகப் புலப்படுத்துவன என்று கூற முடியவில்லை. அவர்கள் கற்ற வரலாறும், நூல்கள் அச்சிட்ட வரலாறுமே பெரும்பாலும் அவற்றில் உள்ளன. திரு. வி. க. அவர்கள் எழுதிய வரலாற்று நூலில் வரலாற்று அம்சம் மிகச் சிறந்து காணுகிறது.

சிலர் தாம் எடுத்துக்கொண்ட பெரியாரது வாழ்க்கையின் பெருமையை மட்டும் அறிவிக்க வேண்டும் என்று கருதி அவர்களது குற்றம் குறைகளை மறைத்தே விடுவர். இது உண்மையான வரலாற்று நூலுக்கு முற்றும் பொருந்தாததாம். எல்லா அம்சங்களையும் நன்கு எழுதவேண்டியதே வரலாற்று ஆசிரியரின் கடமையாகும். இன்ன செய்தியைச் சொன்னால், ஆசிரியரை இழிவாக எண்ணுவர் என்ற

எண்ணமே இருத்தல் கூடாது. உண்மையை மறைத்தல் பெரும் பிழையாகும்.

ஐயரவர்கள் இயற்றியன போன்ற நூலிலிருந்தும் சில சில முக்கியமான விஷயங்கள் நமக்குப் புலப்படுகின்றன. முற்காலத்து ஆசிரியர்கள் தாம் பாடம் சொல்வதோடு, புரா . ணம், பிரபந்தம் முதலியனவும் இயற்றி வந்தனர். அந்தப் புராணங்களைப் படிப்பவர்கள் பெரும்பாலும் அவர்களுடைய மாணாக்கர்களேயாவர். அதற்குப் பொருள் சொல்பவர் களும் அதன் ஆசிரியர்களேயாவர். சில சமயங்களில் தங்க ளுடைய பிரதம மாணாக்கரைக் கொண்டு பொருள் சொல்லு வித்தலும் உண்டு. ஒருமுறை மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர் கள் ஒரு புராணம் இயற்றி, அதற்குப் பொருள் சொல்லும் படியாகத் தமது முதல் மாணாக்கராகிய தியாகராச செட்டி யாரை நியமித்தனர். அவர் கலாசாலையில் உபாத்தியாய ராக இருந்தவர். தமக்குப் பொழுதில்லை, பொருள் சொல் வதும் மிகக் கடினம் என்ற காரணங்களாலேயே ஒதுக்கி வைத்துக்கொண்டே வந்தார். மாணாக்கர்கள் பொருள் சொல்லும்படி வற்புறுத்தினர். தியாகராச செட்டியார் சிறிது முன்கோபி. நேரே தமது ஆசிரியர் மீனாட்சிசுந்தரம் பிள்ளையிடம் சென்றார். "பொருள் விளங்காத பாடல்களை யெல்லாம் பாடிவைத்துப் புராணமாக்கி, என்னை உரை சொல்லும்படி கழுத்தறுக்கிறீர்களே ; இது நியாயமா?" என்று கேட்டார். இது மீனாட்சிசுந்தரம் பிள்ளையினுடைய இயல்பையும், தியாகராச செட்டியாரின் இயல்பையும் நன்கு எடுத்துக்காட்டுகிறதல்லவா ?

மீனாட்சிசுந்தரம் பிள்ளை என்ற பெயர் மாத்திரம்தான் நமக்குத் தெரிகின்றதே தவிர, அவர் எவ்வாறு இருந்தார், அவரது உருவ அமைப்பு எப்படி இருந்தது என்பவை எல் லாம் நமக்கு நன்கு தெரியமாட்டாது. இவற்றைப் பற்றி எல்லாம் வரலாற்று ஆசிரியர்கள் எழுத வேண்டும். ஒரு முறை மீனாட்சிசுந்தரம் பிள்ளை ஒரு வில்வண்டியில் ஏறித்

தமது மாணாக்கர்களுடன் அயலூருக்குச் சென்றார். புறப்பட்ட அப்போதே ஒரு புராணம் இயற்றத் திட்டம் போட்டுக்கொண்டார். ஒரு மாணாக்கர் இவர் சொல்லியதை எழுதி வந்தார். தாம் கருதிய ஊருக்கு வந்து சேருமுன் புராணம் முடிந்துவிட்டது. இதெல்லாம் அவர் வாக்கு வன்மையையும் பாடல் இயற்றும் திறத்தையும் நமக்குக் காட்டுகின்றன அல்லவா? டாக்டர் சாமிநாதையருடைய 'என் சரித்திர'த்தில் காணும் செய்திகள் வேறு ஒரு வகையைச் சார்ந்தவை. அவர் ஏடுகள் தேடிச் சலிப்புற்றதும், வித்வான்கள் தங்களிடம் 'அந்த நூல் இருக்கிறது, இந்த நூல் இருக்கிறது' என்று புளுகி அவரை அழைத்துச் சென்றதும், சென்ற இடங்களில் பெரும்பாலும் சிறந்த நூல்கள் இல்லாமையும், அதற்காக மனம் கோணாமல் அவர்கள் திரும்பி வந்த வரலாறுகளும் மிகுதியாகக் காணப்படும். இப்படியெல்லாம் சென்று மிக அபூர்வமாக அவர்கள் தேடிக் கொண்டுவந்த ஏடுகளை, அவர்களிடம் இருந்து தட்டிப் பறித்துக்கொண்டு போக முயன்ற முயற்சிகளும் அவருடைய சரிதத்தில் காணலாம். பெரும்பாலும் பிறர்மீதுள்ள குற்றச்சாட்டுகளே இந் நூலில் மிகுதியாகக் காணப்படும்.

ஒரு காலத்தில் மதுரையில் 'ஸ்காட்' (சுகாத்தியர்) என்ற பெயருடைய ஒரு வழக்கறிஞர் இருந்தார். அவர் தமிழிலும் - முக்கியமாக குறளில் பயிற்சி பெறவேண்டும் என்று கருதித் திருக்குறளை நன்கு கற்றார். திடீர் என்று அவருடைய அறிவிலே ஒரு ஜோதி புறப்பட்டுவிட்டது. எதுகை மோனை இல்லாது வள்ளுவர் போன்ற பெரியார் செய்யுள் இயற்றுவாரா என்பதற்கு விடை காண முயன்றார். முதற் குறளே அவருக்குத் தப்பிதம் என்று தோன்றி விட்டது. 'அகர முதல எழுத்தெல்லாம் ஆதி' என்ற அடி வள்ளுவர் செய்திருக்கலாம் என்று ஒருவாறு ஒப்புக்கொண்டார். 'பகவன் முதற்றே உலகு' என்பது முற்றும் பிழையெனக் கண்டார். ஏனென்றால், அதில் மோனையே இல்லை.

மோனையில்லாப் பாட்டை வள்ளுவர் பாடுவாரா? 'முகரம் முதற்றே உலகு' என்று இருக்கவேண்டும் என்று தீர்மானித் தார். இது 'பைபி'ளில் வரும் கருத்திற்கு மிகப் பொருத்தமா யிருந்தது. இப்படியே, பொருட்பால் முடியத் திருவள்ளுவ ரைத் திருத்தியமைத்து, தமது கருத்துப்படி ஆங்கிலத்தில் ஒரு மொழிபெயர்ப்பும் செய்து அச்சிட்டார். அச்சிட்டுப் பலருக்கும் அனுப்பினர்.

சாமிநாத ஐயர் அவர்களிடம் நேரில் கண்டு கொடுக்க வேண்டும் என்று கருதி, அவர் வசிக்கும் கும்பகோணம் வந்து, தமது 'பூட்ஸ்' முதலியவற்றைக் கழற்றிவிட்டு, அவர் வீட்டு வாசலில் வெகு நேரம் காத்திருந்தார். ஆனல், ஐய ரவர்களுக்கு இவருடைய புகழ் முன்னமேயே எட்டிவிட்டது. வெளியில் வந்திருப்பவர் யார் என்று உளவு தெரிந்து கொண்டு, வீட்டின் அகத்தே இருந்து வெளியே வரவேயில்லை. அன்று சிவ பூசை வெகுநேரம் நடைபெற்றது.

பத்து மணி சுமாருக்குக் கலாசாலைக்குப் புறப்பட வேண்டுமல்லவா? ஆகாரத்தை முடித்துச் சட்டை முதலியன தரித்து வெளியே வந்தார்கள். துரைமகனுரைப் பார்த்த தும், 'என்ன விசேஷம்?' என்று அப்போதுதான் பார்ப்பது போல் கேட்டு, தற்போது பள்ளிக்கு நேரம் ஆகிவிட்டது என்றும், வேறு ஒருசமயம் பார்க்கலாம் என்றும் சொல்லிப் போய்விட்டார். பின்னல் ஸ்காட் என்பவருக்கு ஐயரவர்கள் தரிசனமே கிடைக்கவில்லை. அவருடைய புஸ்தகங்களின் பிரதிகள் முழுதும் அச்சடித்தபடியே பெரும்பாலும் அவர் கைவசம் இருந்தன. சேதுபதி அவர்களை இத் துரைமகனுர் சென்று பார்த்து முறையிட்டுக் கொண்டார். அவர் அந் நூலைக் கொண்டுவரச் சொல்லி, அவற்றை மேற்பார்வை யிடுவதுபோலப் பார்த்து, 'எவ்வளவு பிரதிகள் தங்களிடம் இருக்கின்றன?' என்று கேட்டு, அவ்வளவு பிரதிகளையும் வாங்கி அக்னிப்பிரவேசம் செய்வித்தார் என்று கேள்வி.

இதைப் போன்றே ஒருவர் நன்னூலைச் சுருக்கிப் பள்ளி மாணவர்களுக்கு ஏற்ற முறையில் பதிப்பித்து வெளியிட்டனர். ஐயரவர்களுடைய அபிப்பிராயத்தையும் தியாகராச செட்டியாருடைய அபிப்பிராயத்தையும் பெற்றுப் போக வந்தார். அவருடைய பதிப்பில் ஏதோ ஒரு பிழையைக் காட்டி, 'நன்னூலைச் சுருக்கப் போகாதீர்கள்' என்ற ஆசியுரையுடன் விடைகொடுத்து அனுப்பினர்.

திரு. வி. க. அவர்களது வாழ்க்கை வரலாறு வேறு வகையில் நமக்கு இன்பமூட்டுகிறது. அவர்கள் சிறந்த கல்வியாளர். அதோடு, நல்ல சைவ சித்தாந்தி ; தேசியப் பற்றும் மிக உடையவர் ; அதனோடு தேசியப் பற்றுக்குச் சாதனமாகத் தொழிற் சங்கம் முதலியனவற்றில் ஈடுபட்டுத் தலைவராய் விளங்கியவர். ஒரு சிறந்த தேசியப் பத்திரிகைக்கு ஆசிரியராய் இருந்தவர் ; நல்ல எழுத்தாளர் ; நல்ல பேச்சாளர் ; எதனையும் கூர்ந்து அறியும் அறிவாளர். இவர் எழுதிய வரலாற்று நூலில் பல விஷயங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. இவர் உண்மையை மறைப்பவர் அல்லர்.

## 6

மீனாட்சிசுந்தரம் பிள்ளை அவர்கள் சரித்திரம், என் சரிதம், திரு. வி. க. வாழ்க்கை வரலாறு இவை போன்ற விரிவான சுயசரிதங்கள் நம் நாட்டில் இல்லை. நமது பெரியவர்களைக் குறித்து வெளிவந்துள்ள சில நூல்கள் மிகச் சுருக்கமாகவும், குறிப்பாகவும் மாத்திரமே அமைந்துள்ளன. சுயசரிதங்கள் நல்ல முறையில் வெளிவந்தால்தான் மக்களுடைய இயல்புகளைக் கற்று நாம் உணர முடியும். தினசரி நூல்கள் இரண்டு இருக்கின்றன. அவைகள் ஆனந்தரங்கம் பிள்ளையைப் பற்றியதும், அவருடைய புத்திரரைப் பற்றியதுமாகும். ஆனந்தரங்கம் பிள்ளையின் தினசரி, ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து 12 பகுதிகளாக வெளிவந்திருக்கின்றன. சென்னையில் ஆண்ட ஆங்கில துரைத்தனத்தார் அதை வெளி

யிட்டு மொழிபெயர்த்துப் பல ஆண்டுகள் ஆனபோதிலும் இப்பொழுதுதான் மூலத்தில் நான்கு பகுதிகள் வெளிவந்திருக்கின்றன. வெளிவரவேண்டிய பகுதிகள் பல உள்ளன.

ஆனந்தரங்கம் பிள்ளை புதுச்சேரியில் மிகப் பிரபலமாக விளங்கியவர். 200 ஆண்டுகளுக்கு முன்னர் இவரது காலம். இவரைப் பற்றிப் பல பிரபந்தங்களும் உள்ளன. சமஸ்கிருதத்திலும் இவரைப் பற்றிய ஒரு ஜீவிய சரித்திரம் உண்டு. அதனை டாக்டர் வி. ராகவன் அவர்கள் பதிப்பித்திருக்கிருர்கள். ஆனந்தரங்கம் பிள்ளையின் புத்திரர்களுடைய தினசரி, புதுவை புத்தகாலயத்திலும் பாரிஸ் புத்தகாலயத்திலும் உண்டு. அவை எக்காலத்தில் வெளிவருமோ அறியமாட்டோம்.

சில பெரியவர்களின் சரித்திரங்களை அறியவேண்டும் என்ற அவா பலருக்கும் இருக்கிறது. ஆனுல் அதனை நிறைவேற்றுவதற்குப் போதிய உபகரணங்கள் இல்லை. எழுதுவோர் தமது சொந்தக் கற்பனையினுலே பலவற்றையும் சிருஷ்டித்துக் கொள்கின்றனர். சாதுர்ய வசனங்கள் என்ற பெயரோடு 'செந்தமிழ்' பத்திரிகையில் வெளிவந்த குறிப்புக்களைப் பலரும் பார்த்திருக்கலாம். அவற்றுள் சில கற்பனை; சில உண்மை.

இந்தச் சந்தர்ப்பத்தில் நான் கேள்வியுற்ற ஒரு சரித்திரக் குறிப்பைக் கூறலாம் என்று எண்ணுகிறேன். முகவை ராமானுஜக் கவிராயர் என்ற தமிழ்ப் பெரியாரைப் பற்றிப் பலரும் அறிந்திருப்பார்கள். அவர்கள் ராமநாதபுரத்தைச் சார்ந்தவர்கள். வெகு காலமாக ராணுவத்தில் சேர்ந்து, வேலை பார்த்துவந்தார்கள். பின்பு, தமிழ் கற்று, பிரபலமான பண்டிதராக இவர் விளங்கினுர். நன்னூலுக்கு இவர் ஓர் அரிய உரை இயற்றினுர். இன்னும் எத்தனையோ நூல்களும் செய்திருக்கின்ருர். இவர் சென்னைக்கு வந்ததும் பல சிஷ்யர்கள் இவரிடத்தில் தமிழ் கற்க வேண்டும் என்ற ஆவலோடு நெருங்கிப் பழகினர். இவருடைய சிஷ்யர்களில்

ஒருவர் பிற்காலத்தில் உயர் நீதிமன்றத்து நீதிபதியாக விளங்கினார்.

ஒருமுறை இந்த நீதிபதி 'எஸ்பிளனேட்'டில் சவாரி போய்க்கொண்டிருந்தார். பாதசாரியாய் வந்த தமது ஆசிரியரை இவர் பார்க்கவில்லை. ஆகவே, வணக்கம் செய்யாது நேரே போய்விட்டார். பின்பும் ஒருமுறை அதே இடத்தில் நீதிபதி போய்க்கொண்டிருக்கும்போது, ஆசிரியரும் பாதசாரியாகவே போய்க்கொண்டிருந்தார். அப்பொழுது ஆசிரியர் தாம் எப்பொழுதும் கையில் வைத்திருந்த கம்பை எடுத்துக் காட்டி, வண்டியை நிறுத்தும்படிச் சொன்னார். வண்டி நின்றதும், நீதிபதியைக் கீழே இறங்கச் சொல்லி, அவருக்கு வணங்காமற் சென்ற தண்டனைக்காக நீதி செலுத்தினார். அதுமுதற்கொண்டு நீதிபதி ஒருநாளும் தமது ஆசிரியரை மறந்தது கிடையாது. இந்த வரலாற்றைக் கூறியவர் எனது நண்பர் காலஞ்சென்ற சி. ஆர். நமச்சிவாய முதலியார் அவர்கள்.

இது சிறிது வேடிக்கையாக இருக்கலாம். ஆனால் அக்காலத்தில் ஆசிரியர்கள் எவ்வளவு கடுமையாக இருந்தார்கள் என்பதையும், ராணுவத்தைச் சேர்ந்தவர்கள் ஒழுங்கு முறையைக் கவனித்து நீதி செலுத்தினார்கள் என்பதையும் நமக்குக் காட்டுகிறது. மக்கள் இயல்பையும் நாம் தெரிந்துகொள்கிறோம். இனிமேல் முகவை ராமானுஜக் கவிராயர் அவர்களை நாம் மறக்கமுடியுமா !

கற்பவர்களது இன்பத்திற்கும், அவர்கள் மக்களது இயல்பை உணர்ந்துகொள்வதற்கும் நூற்கல்வி பெரிதும் பயன்படும். இது மேற்கூறியவற்றால் நன்கு விளங்கும். ஆனால் ஓர் எச்சரிக்கை : ஜீவிய சரிதம் எழுதுபவர்கள் தங்களுடைய திறமையைக் காட்டுவதற்கும், தாங்கள் அறிவு முதலியவற்றால் மேம்பட்டு விளங்குகிறோம் என்பதைக் காட்டுவதற்கும் ஜீவிய சரித்திரத்தைப் பயன்படுத்தக் கூடாது. சரித்திர நாயகனுடைய ஆத்ம விளக்கம் செய்

வதற்கே ஜீவிய சரித்திரம் எழுதுதல் வேண்டும். நாயக ஞேடு பல்லாண்டுகள் பழகி, நாள்தோறும் குறிப்புகள் எடுத்துக்கொண்டு, தினசரி, கதைகள், கடிதங்கள், பிற நிகழ்ச்சிகள் முதலியவற்றை எல்லாம் பயன்படுத்தி, செவ்விய முறையிலே ஜீவிய சரிதம் எழுதப்பெறுதல் வேண்டும்.

எழுதும் ஆசிரியன், தன் இயல்புக்குத் தக்கபடி இச் சரித்திரத்தை எழுதுதல் கூடாது. நேர்மையாக, சரித்திர புருஷன் குணங்கள் விளங்கும்படி நன்ருக எழுதப்பட்ட சரித்திரமே நமக்குத் தேவை. ஒரு சிலர் நாயகனது குணங்களைக் குற்றங் கற்பிப்பதை மட்டும் நோக்கமாகக் கொண்டு மிகக் கேவலமாக எப்படி எழுத முடியுமோ அப்படி எழுதி விடுகிருர்கள். இதற்கு உதாரணம் இல்லாமற் போகவில்லை. ஆங்கிலத்தில் அலெக்ஸாண்டர் போப் என்ற கவிஞரைப் பற்றி நன்கு அறிந்திருப்பீர்கள். அவர் மசிக்குப் பதிலாகத் தம் நெஞ்சில் பேனுவைத் தொட்டு எழுதியவர் என்று கூறுவார்கள். இது உண்மை என்பது அவர் எழுதிய 'டன்ஸியாட்' (*Dunciad*) என்ற கவிதையால் புலனுகும். இது போன்ற நூல்களில் ஆசிரியர் புகழ் நிலைத்து நிற்க முடியாது. இதை நன்ருக மனத்தில் வைத்து, உண்மையான ஜீவிய சரிதங்களை எழுதத் தமிழ் மக்கள் முற்பட்டு வருதல் வேண்டும்.

ஜீவிய சரிதங்களுக்கு அடுத்தபடியாக நாம் எடுத்துக் கூறத்தக்கது நவீனங்களாகும்.

இந்தப் பெயரால் 'நாவல்ஸ்' என்று ஆங்கிலத்தில் சொல்லப்படும் நூல் வகைகளைக் குறிக்கிறேன். இதுவும் ஒரு வகையில் ஜீவிய சரித்திரமே யாகும். கதாபாத்திரங்களுடைய குண விசேஷங்கள் எப்படி விகசித்து வருகின்றன என்பதையே, நவீனங்கள் விளக்கமாகவும், வர்ணனை மூலமாகவும், சரித்திர மூலமாகவும், நிகழ்ச்சிகள் மூலமாகவும், இன்னும் பல பல வழியாகவும் வெளியிடுவதையே நோக்கமாகக் கொண்டவை. இவ்வாறு எழுதப்பட்ட நூல்களும் தமிழில் அதிகமாக இல்லை என்றுதான் கூறவேண்டும்.

முதன் முதலாகப் பிரதாப முதலியார் சரித்திரம், கமலாம்பாள் சரித்திரம், பத்மாவதி சரித்திரம் முதலியவை வெளிவந்தன. இவற்றுள் பிரதாப முதலியார் சரித்திரத்தில் பல வேடிக்கைகளுடன் முக்கியமாக நீதிகளும் விளக்கப்பட்டிருக்கின்றன. கமலாம்பாள் சரித்திரத்தில், சரித்திரம் மிக அழகாக அமைந்தபோதிலும், பல வேதாந்த விஷயங்கள் இடையிடையே சேர்க்கப்பட்டுள்ளன. பத்மாவதி சரித்திரம் ஆரம்பமுதல் இறுதிவரை அழகாகச் சென்றுகொண்டிருக்கும் கதையாகும்.

இவற்றிலெல்லாம் கதாபாத்திரங்களின் ஆத்மவிளக்கம் நன்கு காணப்படும். மேற்கூறிய நூல்களை இயற்றியவர்கள், ஆங்கிலம் முதலியன கற்று, விரிந்த மனப்பான்மை உடையவராய் இருந்தனர். இவர்களுக்குப் பின்னல் சில புலவர்கள் இவ்வித நூல்களை இயற்றத் தொடங்கினர். இவர்கள் நூலினகத்தே வேறு புலவர்களைப் பாத்திரங்களாக அமைத்துத் தங்களுடைய ஆவலைத் தீர்த்துக்கொண்டார்கள். 'அஷ்டநாக பந்தங்கள்', 'கமல பந்தங்கள்', 'ரத பந்தங்கள்' முதலியன இவர்கள் நூல்களில் பல இடங்களில் காணப்படும். சரித்திரத்திற்கும் இவற்றிற்கும் தொடர்பு இல்லாமல் போனுல், பரவாயில்லை அல்லவா? நவீனத்தின் வரலாறு மிக விநோதமாக உள்ளது. அதைப் பற்றித் தனியாக எழுதுவதுதான் உசிதம். நவீனங்கள் தோன்றி வெகு காலத்திற்குப் பிற்பாடு இப்போது பிரபலமாய் விளங்கும் சிறு கதைகள் எழுதப்பட்டன.

இவ்வகை நூல்களும் முதல் முதலில் சிறு குழந்தைகளுக்கும், அவர்களைப் போன்ற அறிவுநிலையில் இருக்கும் பிற மக்களுக்கும் உதவக்கூடியபடி நீதி நிறைந்த சிறு கதைகள் முதலியன தோன்றின. இந்நீதிகளை எத்தனை முறைதான் வற்புறுத்திச் சொல்வது? எத்தனை வகையில்தான் சொல்வது? எத்தனை காலமாகச் சொல்வது? ஏதேனும் பலன் உண்டா? மக்களுக்கு நீதி என்று சொன்னவுடன் அலுத்துப்

போய்விட்டது. இங்கிலேயில் அந்நிய நாட்டுப் பிறவியாகச் சிறு கதை இனங்கள் தோன்றத் தொடங்கின. இதன் இயல்பும், எழுதும் முறையும் மக்களை வசீகரித்தன. மக்கட்குரிய பண்பும் இவற்றில் மிகுதியாகக் காணப்பட்டது. எனவே, இவைகளுடைய வாழ்க்கை மிக நீடித்ததாய் இருக்கும் என்பதில் ஐயமில்லே. இவைகளும் கற்றதனுல் ஆய பலன் என்பதற்கு ஓர் அம்சமாக விளங்குகின்றன.

# சிறு குழந்தைகளுக்குச் செய்யுட் பாடங்கள்

சில காலத்திற்கு முன்வரை தமிழ்ச் செய்யுட்கள் என்ருல் நம்மில் பலருக்கும் பெரும் பயந்தான். கல்வி வல்லவர்கள்கூட அவற்றைத் தாமே கற்றுப் பயன் பெறுவதில்லை. பிறர் வாசித்துக் கேட்டலே போதும் என்ற கொள்கையுடையரா யிருந்தனர். பள்ளி மாணவர் தமிழையும் தமிழ்ச் செய்யுட்களையும் பயத்துடனும் இகழ்ச்சியுடனும் நோக்கி வந்தனர். பி. ஏ. பட்டம் பெற்று ஓர் உயர்ந்த உத்தியோகத்திலிருந்து ஓய்வு பெற்றவர் ஒருவர், 'பெருங்கதை' என்ற காவியம் வசனத்திலுள்ள ஒரு பெரிய கதையாகும் என்று எண்ணினர். கம்பராமாயணம் வசன நூலென்று கருதியிருந்தனர்; செய்யுளிலிருப்பதைக் கண்டு வியப்படைந்தனர். இவர் பி. ஏ.யில் தமிழ்ப் பாடம் எடுத்துக்கொண்டவராம்! இப்படியாக இருந்தது செய்யுள் பற்றிய அச்சமும் அறியாமையும். இப்பொழுதுதான் அச்சம் படிப்படியாக நீங்கி வருகின்றது. செய்யுட்களையும் ஒருவாறு கற்றுவிடலாம் என்று துணிவு ஏற்பட்டு வருகிறது.

இங்கிலையில் கல்வித் துறையிலே பலபல சீர்திருத்தங்கள் இப்போது செய்யப்பட்டு வருகின்றன. முதல் பாரத்திலிருந்தே மாணவர்கள் திருக்குறளைக் கற்கவேண்டும் என்று கருதி கல்வியிலாகாவிலிருந்து உத்தரவு பிறந்திருக்கிறது. இந் நீதிநூலைப் பாடமாகக் கற்பது ஒருபுறமிருக்கட்டும். பொதுப்படச் செய்யுட் பாடங்களை இளமாணவர்கள் கற்க வேண்டியது அவசியந்தானு? நமது சிறுவர் சிறுமியர்களுக்குச் செய்யுட் பாடங்கள் வைத்து அவர்களைத் துன்புறுத்தல் தகுதியா? இக் கேள்விகளுக்கு ஆராய்ந்து விடை காணுவது இன்றியமையாததாகும்.

கவிதை உணரப்பட வேண்டியதொன்று. அதனைக் குறித்து விவாதம் செய்தல் பயனற்ற தொழிலாகும். நமது அறிவினைக் காட்டிலும் உணர்ச்சியையே அது குறித்துச் செல்லுகிறது. அதன் இயல்புகளை வரையறுக்க முயன்ற லக்ஷணங்களெல்லாம் திருப்திகரமானவை யல்ல. கவிதையைக் கற்று அனுபவித்தவன் ஒருவன், எவ்வாறு தான் அதனுல் இன்பமும் பயனும் பெற்றுள்ளான் என்று விளக்க முயல்வானுனல், தனது நோக்கத்தை நிறைவேற்றும் வழி இன்னது என்பதை அவன் தெரிந்துகொள்ளுதல் அருமை. எனவே, கவிதையைக் கற்பித்தல் மிகக் கடினமான காரியம் என்று பொதுப்படக் கூறலாம்.

நமது பள்ளிக்கூடங்களில் கவிதைகள் எவ்வாறு கற்பிக்கப்படுகின்றன என்பதை நாம் சிறிது நோக்குவோம். அது பற்றித் தோன்றும் கருத்துக்களை வெளியிடுவது மிகவும் அவசியமாகும். ஒவ்வொரு வகுப்பிலும் இத்தனை செய்யுட்கள் மனனம் செய்யப்படுதல் வேண்டும் என்று குறித்திருக்கிருர்கள். இது ஒரு நல்ல முறையேயாகும். ஆனுல் மனனம் செய்தற்குரிய பாடலின் அளவு சுருக்கமாகவே இருத்தல் கூடும். மேல்வகுப்புக்களில் அந்த அளவு சுருங்கியிருந்த போதிலும், மனனஞ் செய்யாது பொதுப்பட வாசித்தற்குரிய செய்யுளின் அளவு மிகுதியாக இருத்தல் வேண்டும். பெரும்பாலும், ஆண்டு முடிவில் நிகழும் பரீட்சைகளுக்குச் சற்று முன்புதான் மாணவர்கள் செய்யுட்களைக் கற்பார்கள். மற்றக் காலங்களில் அவற்றைக் குறித்துக் கவலையே கொள்வதில்லை. ஆண்டு முழுவதிலும் செய்யுட் பாடங்களைக் கற்பதாய் இருந்தாலும் ஒரே செய்யுட் பகுதியை அவர்கள் திரும்பத் திரும்பக் கற்கிருர்கள். இதனுல் அவர்களுக்கு அருவருப்பு உண்டாகி, செய்யுளென்ருலே தொடவும் மறுக்கிருர்கள். எப்படி நோக்கினுலும் செய்யுட் பாடம் வகுத்ததன் பயன் முற்றுப் பெருமலே போய்விடுகிறது. ஆதலால், ஆண்டு முழுவதிலும் இச் செய்யுட் பாடங்கள் முறையாக

நிகழ்தல் வேண்டும். ஒரு பாடத்தை நன்கு கற்ற பின்புதான் அடுத்த பாடத்திற்குச் செல்லுதல் வேண்டும். பழம் பாடங் களைப் போற்றுதலும் அவசியமாகும். குழந்தைகளுடைய மனத்தைக் கவரும்படியான முறையில் இப் பாடங்கள் அமை தல் வேண்டும். கிளிப்பிள்ளைகளைப்போல் பாடங்களைத் திருப் பித் திருப்பி ஒப்பிப்பதனால் பயன் யாதும் இல்லை. கண் டவற்றையெல்லாம் மனனம் செய்யும்படி குழந்தைகளை வற் புறுத்துதல் கூடாது. மேற்கூறிய முறையில் கடினமான இச்செய்யுட் பாடம் நடைபெற்றால்தான், பயனுண்டாகும்.

செய்யுட் பாடங்களைக் கற்பதனால் விளையும் பயன்களை இனி நோக்குவோம். முதலாவது பாவனா சக்தியை அவை வளரச் செய்கின்றன. ஞாபக சக்தியை அவை விருத்தி செய் கின்றன என்பதை ஒருவரும் மறுக்க மாட்டார்கள். இவை இரண்டோடு சிந்தனா சக்தியும் (*Reflection*) இப் பாடங் களால் வளர்கின்றது. நமது குழந்தைகள் பல பொருள்களை யும் பற்றிச் சிந்தித்தல் அவசியம். சிந்தித்தல் என்றால் பாவனா சக்தியும் உடன் நிகழ்வதேயாகும். சிந்தித்தலோடு நிகழுகின்ற பாவனா சக்தி தவிர, தனிப்பட்ட நிலையிலேயும் இப் பாவனா சக்தி நேராக வளர்ச்சியுறச் செய்தல் இன்றி யமையாததாம். அழகுணர்ச்சியோடு கூடிய பாவனா சக்தி யில் நம் குழந்தைகள் பயிற்சி பெறுவதானால் அவர்கள் வளர்ந்த பிற்பாடு எத்தனையோ வகையான கெடுதிகளினின் றும் விடுதி பெறுவார்கள். அவர்களுடைய நேரம் ஒருபொழு தும் வீணாகக் கழியாது. கிராமாந்திரப் பிரதேசங்களில் உல்லாஸப் பிரயாணம் செய்வதிலும், சித்திரசாலை, காட்சிச் சாலை முதலியவற்றிற்குச் செல்வதிலும், சங்கீதக் கச்சேரி களை அனுபவிப்பதிலும் அவர்கள் நேரம் இனிதாய்க் கழியும். எல்லாவற்றிற்கும் மேலாக நல்ல நூல்களைக் கற்று அனு பவிப்பதில் அவர்களது அருமையான காலம் பயன்படுவ தாகும். அவர்கள் நோயினாலும், வலி முதலியவற்றினாலும் துன்புறும்பொழுது, பாவனா சக்தியின் உதவியால் அவற்றி

னின்றும் தப்பி, கற்பனையுலகில் சஞ்சரித்துத் துன்பத்தைப் போக்கிக்கொள்வார்கள். ஜேம்ஸ் ரஸ்ஸல் லவல் என்பவர் சாகுந்தறுவாயில் இருந்தார். அவரிடம் ஒருவர் சென்று, அவரது மனநிலை எப்படியிருக்கிறது என்று கேட்டனர். தமக்குச் சரீர உபாதை ஒன்றும் இல்லை என்றும், ராப் ராய் (Rob Roy) என்ற கதையின் நிகழ்ச்சிகளில் தாம் ஆழ்ந்து ஈடுபட்டு வருகிறாரென்றும் அவர் கூறினாராம். ராப் ராய் முதலிய கதைகள் போலவே, கவிதையும் துன்பத்தை மறக்கச் செய்கின்றது. ஒரு கற்பனையுலகத்தில் நாம் சஞ்சரித்து மகிழும்படியாக நம்மைச் செலுத்துகின்றது.

ஆகவே குழந்தைகள் செய்யுட் பாடத்தைக் கற்பதனால் விளையும் முதற்பயன் அவர்களுடைய பாவனா சக்தி வளர்ச்சியுறுவதாகும். இரண்டாவது பயன் பாவனா சக்தியோடு தொடர்ந்து பிணைந்து செல்லும் சிந்தனா சக்தியும் அதனால் வளர்ச்சி எய்துகிறது. குழந்தைகள் தாங்களே விஷயங்களைச் சிந்தித்தற்குரிய அவசியங்கள் பல நேரிடும். ஆசிரியர் கூறியவற்றின் பொருளைச் சிந்திக்கும் அவசியங்களும் பல நேரிடும். இவ்வாறாக அவர்களுடைய சிந்தனா சக்தியும் அறிவாற்றலும் செய்யுட் பாடங்களால் உரம் பெறுவதற்கு இடமுண்டு. மூன்றாவதாக ஒரு பயனும் உண்டு. கவிதைகள் நமது அறிவையும் உணர்ச்சியையும் மாத்திரம் வளர்ப்பன என்று கருதுதல் கூடாது. நல்ல நீதிகளையும் சிறந்த வாழ்க்கை நெறிகளையும் அவை குழந்தைகளுக்குப் புகட்டுகின்றன. இயற்கையையும் அதனை இயற்றிய தெய்வத்தையும் அன்போடு போற்றும்படியாகச் செய்கின்றன. நாட்டுப் பற்றை உண்டாக்குகின்றன. தைரியம், அகமலர்ச்சி, சுயநலமின்மை, நியாய உணர்ச்சி, விடாமுயற்சி முதலிய அருங்குணங்களைச் சிறு குழந்தைகளுக்கு அவை உணர்த்துகின்றன. குழந்தைப் பருவத்திலேயே செய்யுட்களைக் கற்று இன்புறும் பழக்கம் ஏற்பட்டால், பிற்காலங்களில் அவர்களை வாழ்விற்குத் தகுதியுடையவராக அவை செய்தல் உறுதி.

இங்கே குறித்த விளைவுகளை நோக்கினால் செய்யுட் பாடம் குழந்தைகளுக்கு அவசியம் என்பதை எளிதில் உணரலாம்.

மேலே குறித்த பயன்களைத் தரவேண்டுமானால் குழந்தைகள் கற்கும் செய்யுட்கள் எத்தன்மையனவாய் இருத்தல் வேண்டும்? முதலாவது, செய்யுட் பாட விஷயம் குழந்தைகளுடைய அனுபவத்திற்கு அப்பாற்பட்டதா யிருத்தல் கூடாது. உதாரணமாக, மிக அழகான கவிதைகள் காதலைப் பற்றியனவாயுள்ளன. ஆனால், காதல் விஷயங்கள் குழந்தைகளின் மனநிலையைக் கடந்தவை. ஆகவே, காதல் பற்றிய பாடல்களைப் பாடங்களில் சேர்த்தல் தக்கதன்று. இன்னுமொன்று: பல அழகிய செய்யுட்கள், வாழ்வு துன்ப மயமாயுள்ளது என்பதையே பொருளாகக் கொண்டுள்ளன. இதன் உண்மையை வயது முதிர்ந்தவர்கள் உணர்வார்கள். ஆனால், குழந்தைகள் உணரவே முடியாது. உணர முடியாததும் ஒரு நன்மையேயாகும். வாழ்வில் இன்பவுணர்ச்சியும் உத்ஸாகமும் தரக்கூடிய பாடல்களே அவர்களுக்கு வேண்டும். எனவே துக்கம் பற்றிய பாடல்களும் பள்ளிப் பாடப் புத்தகங்களினின்றும் நீக்கத் தக்கனவே.

இரண்டாவதாக, செய்யுளின் மொழியும் நடையும் எளிமையாகவும் தெளிவாகவும் இருத்தல் வேண்டும். வாக்கிய அமைப்பு குழப்பமின்றி நேர்படச் செல்வதா யிருத்தல் வேண்டும். வழக்கொழிந்த சொற்களும், திசைச் சொற்களும், கொடுந் தமிழ்ச் சொற்களும், திருத்தமற்ற சொற்களும் விரவாத பாடல்களே குழந்தைகளுக்கு ஏற்றன. ஆனால், ஒரு விஷயத்தை மறந்துவிடக் கூடாது. பொருள் விளங்காமல் போனாலும் தனிப்பட்ட ஓசையின் இனிமையிலும் அழகிலும் செய்யுளோசையின் நயத்திலும் குழந்தைகள் ஈடுபடுவார்கள். தென்னாட்டில் பலருக்கு வடமொழியுணர்ச்சி கிடையாது என்றாலும் வடமொழிச் சுலோகங்களையும் காதம்பரியின் உரைநடையையும் கேட்டு அவற்றின் ஓசை நயத்தில் ஈடுபடுவோர் பலருண்டு. குழந்தைப் பருவத்தில் பொருள்

விளங்காமல் போனாலும் அழகான உயரிய கவிதைகள்மீது அவர்களுக்கு அன்பு ஏற்படும். அக் கவிதைகள் அவர்களது உள்ளத்திலே புகுந்து தாழ்ந்து படிந்துவிடும். அவர்கள் பெரியவர்களான பிற்பாடு, ஓசை இனிமை மட்டும் கருதி அவர்கள் முன்பு கற்ற பாடல்கள் பொருட்பொலிவோடு அவர்கள் வாழ்க்கையில் இன்பம் விளைத்து ஒளி தந்து நிலவும்.

மூன்றாவதாகச் செய்யுட் பாடங்களின்மீது குழந்தைகளுக்கு அவாவுண்டாகும்படி செய்தல் வேண்டும். இது அழகான கதைப் பாட்டுக்களினாலேதான் இயலும். சரித்திர நிகழ்ச்சிகளைப் பற்றிய பாடல்கள் மிகப் பல வேண்டும். சரித்திரம் பற்றிய 'நாவல்களையும்' 'பாடல்களையும்' தொடர்புபடுத்திக் குழந்தைகளைக் கற்கும்படி செய்தல் வேண்டும். இங்ஙனம் செய்தால் சரித்திரப் பாடத்தைக் குழந்தைகள் மிகவும் விரும்பிக் கற்பார்கள். இப்பாடல்களே யன்றி கடல், மலை, நாட்டு வளம் முதலிய இயற்கை வளங்களைக் குறித்து வரும் பாடல்களையும், பறவை விலங்கினம் முதலியன பற்றி வரும் பாடல்களையும் குழந்தைகள் விரும்புவர். இவற்றையும் பாடங்களில் பயன்படுத்துதல் வேண்டும். நான்காவதாக, குழந்தைகளின் மன நிலைக்குத் தக்கபடி அவர்கள் பாடி மகிழ்தற்கு உரியனவாய் அவர்களின் பொருட்டு இயற்றிய பாடல்களே பாடப் புத்தகங்களில் இடம் பெறுதல் வேண்டும். இப்படி அவர்களுக்கு உரியவையன்றி, அவர்களைப் பற்றி யெழுதிய பாடல்கள் இடம்பெறத் தகாதவை. பிள்ளைத் தமிழ்ப் பாடல்களால் குழந்தைகளை மகிழ்விக்க முடியுமா ?

இறுதியாகக் கூறவேண்டுவது மேற்கூறிய அனைத்திலும் மிக முக்கியமானதாகும். செய்யுட் பாடங்கள் உண்மையிலே பயன்பட வேண்டுமாயின் அவற்றைக் கற்பிக்கும் ஆசிரியரும் செய்யுட்களைப் பேராவல் கொண்டு கற்றவராக இருத்தல் வேண்டும். அப்பொழுதுதான் அவர்

தாம் பெற்ற இன்பத்தையும் ஊக்கத்தையும் குழந்தைகளுக்கும் ஊட்ட வல்லவராவர். செய்யுட்களின் நயத்தை உணர்ந்து அவர் இன்புருமல், அவற்றைத் திவசமந்திரம் ஓதுவதுபோல் சொல்லிக்கொண்டு, இங்குமங்குமாகச் சில சொற்களுக்குப் பொருளையும் விளக்கிக்கொண்டு செய்யுட் பாடங்களை அவர் நடத்துவாராயின், குழந்தைகள் செய்யுட் பாடங்களைச் சிறிதும் கவனிக்கமாட்டார்கள். அவர்களுக்குச் செய்யுட்களின்மீது அவா எழுவதற்குப் பதிலாக அருவருப்புத்தான் உண்டாகும். கற்பிக்கும் ஆசிரியர், மாணவர்களின் ஆவலைத் தூண்டிவிடுதல் மட்டும் போதாது; செய்யுட்களின் நயத்தை அவர்கள் சுவைத்தறியும்படியாகவும் செய்தல் வேண்டும். அழகானது இது, சாதாரணமானது இது என்று பகுத்தறியும்படியாக மாணவர்களுக்குப் போதித்தல் வேண்டும். செய்யுட்களைச் சுவைத்து அறிந்தால்தான் சிறந்த கவிதையை உண்மையாக மதிப்பிட முடியும். இதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டெனத் தோன்றுகிறது. உயர்ந்த தரத்திலுள்ள செய்யுட்களைத் திரும்பத் திரும்பக் கற்றல்தான் அவ்வழி. இவ்வாறு கற்ருல் அச்செய்யுட்கள் நமது ஆன்மாவிலேயே ஊறி நின்று மற்றச் செய்யுட்களை ஒப்பிட்டு மதித்தற்குக் கட்டளையாக உதவும். குழந்தைப் பருவத்திலே இப்பயிற்சியைப் பெறுதல் பெரும் பயன் விளைப்பதாகும்.

# பண்டைத் தமிழ்நாடும் சமயமும்

தெய்வ நம்பிக்கை எக்காலத்தும் மக்கள் உள்ளத்தில் தூண்டா மணிவிளக்காக ஒளிர்ந்துதான் வரும். இதற்கு எத்தனை பிரதிகூலங்கள் இருந்தாலும் அத்தனையையும் அது வெற்றிகொண்டுதான் வந்திருக்கிறது. நம்முடைய உள்ளத்திலேயே எப்பொழுதும் லௌகிக நாட்டம் இருந்து வருவதினின்று சிறிதேனும் விடுதலை பெற்றுப் பரந்த மேல்நோக்குடன் முயற்சி தோன்றுவது இயற்கை. உள்ளமும் மலினமற்றுத் தூய்மை எய்தி விளங்கும். மக்கள் பருவமும் ஒரு நிலையில் நின்று லட்சியங்களைப் பின்பற்றவும் இந்த நம்பிக்கை துணைபுரியும். இவைபோன்ற பல காரணங்களால் தெய்வ நம்பிக்கை நித்தியமாக உள்ளது என்றே கூறிவிடலாம்.

இதற்கு எதிரிடையாக ஆதிகாலம் தொடங்கி இன்று வரை பலரும் முயற்சிகள் செய்து வந்திருக்கின்றனர். மிகப் பண்டைக் காலத்தில் நாஸ்திகர்கள் என்ற சார்வாகர்கள் பற் பல காரணங்களை எழுதி, தெய்வம் என்பதே இல்லை என்று வாதம் புரிந்தனர். அவர்களது வாதங்களின் நெறி பண்டைக் காலத்துக் கொள்கைகளோடு நெருங்கிய தொடர்புடையதாய் இருந்தது. ஆகவே, வெகு சீக்கிரத்தில் அது மறைந்து ஒழிந்தது. சுமார் ஒரு நூற்றாண்டிற்கு முன்னர் மேலைத் தேசங்களில் விஞ்ஞான வளர்ச்சி மிகவாய்ப் பெருகிவந்தது. அதன் நிமித்தமாக ஆஸ்திகக் கொள்கைகளை மறுத்துப் பல பெரியவர்கள் எழுதி உள்ளார்கள். ஆனால், தெய்வம் என்பது மனித முயற்சியினால் கண்டுபிடிக்கப்படும் ஒரு பொருள் அல்ல. அதன் வியாபகம் இவ்வுலகிற்கும் அப்பாற்பட்டதாய், எங்கும் நிறைந்துள்ளது. எனினும் அணுவுக்குள் அணுவாகவும் அது அடங்கி யிருக்கிறது. விஞ்ஞான முறை

களுக்கு அது அப்பாற்பட்டது. எனவே, விஞ்ஞானப் பெரியோர்களினுடைய கொள்கையும் விரைவில் மறைந்து விட்டது. தெய்வ சாந்நித்தியம் முன்போலவே எங்கும் நிரம்பி ஒளிவிட்டுக் கொண்டிருக்கிறது. இந்தத் தெய்வ நம்பிக்கை பற்றி எழுதியவர்கள் எல்லாரும் பெரும்பாலும் அவர்களுடைய மனோ பாவனையை மிகவாகப் பயன்படுத்தி முடிவு கட்டினார்கள். இந்தக் காரணத்தினாலேயும் அவர்களுடைய முடிவு கொள்ளத்தகாதனவாய் இருக்கின்றன.

இவ்வகை ஆராய்ச்சிகளைக் காட்டிலும் மிக முக்கியமானது என்று நான் கருதுவது, ஒவ்வொரு தெய்வத்தினுடைய வரலாறேயாகும். மக்களுடைய பக்குவ நிலைகளுக்குத் தக்கபடி இவ்வரலாறுகள் பெருகி வந்திருக்கின்றன. இவ்வரலாறுகளைச் சான்றுகள் மூலமாக நாம் துணிதலும் இயலும். இத்தகைய வரலாறுகளை எங்கே நாம் காணலாம்? நமது இலக்கியங்களில்தான் காண வேண்டும். சுமார் இரண்டாயிரம் ஆண்டுகளாக வளர்ந்து பெருகி வந்திருக்கிற நமது இலக்கியங்கள் இத் தெய்வ வரலாறுகளையும் அங்கங்கே குறிப்பிட்டுச் சொல்கின்றன. மிகப் பண்டைக் காலத்துத் தோன்றிய இலக்கியங்களை சங்க இலக்கியம் என்பர். இவ் விலக்கியங்களை இயற்றிய புலவர்கள் ஒரு சமயத்தார் அல்லர்; ஒருகாலத்து வாழ்ந்தாரும் அல்லர். குறித்த ஒரு தேசப் பகுதியினரும் அல்லர். நாம் பொதுப்படச் சங்க இலக்கியம் என நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, புறநானூறு என்பவற்றையே கொள்ளுவோம். பரிபாடல், கலித்தொகை இந்த இரண்டும் சிறிது பிற்பட்டது. பத்துப்பாட்டும் சங்க இலக்கியமேயாம். ஆனால், முருகாற்றுப்படையை அதினின்றும் நீக்கிவிடல் வேண்டும். அது மிகப் பிற்பட்ட ஒரு நூலாகும். மேற்குறித்தவாறு சங்க இலக்கியங்களில் மட்டும் வருகின்ற தெய்வங்கள், பின்வரும் தொல்காப்பியச் சூத்திரத்தில் கொடுக்கப்பட்டுள்ளன :

மாயோன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தல்எனச்
சொல்லிய முறையால் சொல்லவும் படுமே.

இங்கே மாயோன் என்றது கிருஷ்ணன். சேயோன் என்றது முருகக்கடவுள். வேந்தன் என்றது இந்திரன். இத்தகைய தெய்வங்களில் முருகன் தவிர பிறர் எல்லாம் வடநாட்டுத் தெய்வங்கள் என்பது நாம் அறியத்தக்கது. இதனால் ஓர் உண்மை விளங்குகிறது: தெய்வக் கொள்கையொடு வடநாட்டிற்கும் தென்னாட்டிற்கும் மிக நெருங்கிய தொடர்பு ஆதிகாலம் முதற்கொண்டே இருந்து வந்திருக்கிறது என்பதே அவ்வுண்மை. முருகக் கடவுள் ஒருவர்தான் தமிழ்நாட்டுக்குத் தனித்து உரிய தெய்வம். மேற்குறித்தவர்களே அன்றி, சிவபிரான், உமாதேவி, லட்சுமிதேவி, பலராமன் முதலிய சில தெய்வங்களும் நமது பண்டைய இலக்கியங்களில் காணப்படுகின்றனர். சிவபிரான் அவர் திரிபுரம் எரித்த சரித்திரத்தோடு புலப்படுத்தப்படுகிறார். உமாதேவி அவருடைய ஒருபாகத்திலே உள்ளவர் என்பதும், அவரது தோற்றம், வடிவு முதலியவைகளும் புறநானூற்றுக் காப்புச் செய்யுளாலும், அகநானூற்றுக் காப்புச் செய்யுளாலும் விளங்கும். கண்ணபிரானைக் குறித்து நற்றிணையில்,

வேத முதல்வன் என்ப
தீதற விளங்கிய திகிரி யோனே

என்று புகழுரை கூறப்படுகிறது. அவர் துவராவதி (துவாரகை) ஆண்டவர் என்பதும், அஞ்சன வண்ணர் என்பதும், சூரியனைச் சக்கரத்தால் மறைத்தார் என்பதும் புறநானூற்றில் விளங்குகின்றன. அவருக்கு மூத்தவரான பலராமர்

நாஞ்சில் படையை உடையவர் எனக் குறிக்கப்படுகின்றார். முருகக் கடவுள் சூரனேடு போர் புரிந்த சரித்திரமும் ஒரு வகையாகக் கூறப்படுகிறது. முருகக் கடவுள், திருச்செந்தில் கோயில் கொண்டிருந்தனர். இது ஓர் அரிய செய்யுளால் விளங்குகிறது :

வெண் தலைப் புணரி அலைக்கும் செந்தில்
நெடுவேள் நிலைஇய காமர் வியன்துறை.

(பு. நா. 55)

மேற்குறித்த தெய்வங்கள் எல்லாம் வைதிகச் சார்புடையவை. ஜைனம், பௌத்தம் முதலிய சமயங்களும் ஆதி காலத்திலேயே தமிழ்நாட்டில் புகுந்துவிட்டன. ஆனல், அம் மதத்தினர்களில் துறவிகளே தென்னட்டிற்கு மிகுதியாக வந்தவர்கள். ஊர்களுக்கு வெளிப்புறத்தேயும், மலைக்குகை முதலியவற்றிலேயும் வசித்துவந்தனர். அருகன் என்ற ஒரு தெய்வமும், புத்தன் என்ற ஒரு தெய்வமும், நாம் நினைக்கிற படி தெய்வங்கள் அல்ல. ஜீவாத்மாக்களே படிப்படியாயும், தங்களுடைய அனுஷ்டானத்திலும், ஒழுக்க மேம்பாட்டினலும், ஞான உயர்விலும், தவத்தாலும் சிறந்து பரிபூர்ணத்வம் பெற்று விளங்கிய பெரியோர்கள் என்பது நாம் அறியத் தக்கது. எனவே இவ்விரு மதங்களும், மக்களுடைய இகவாழ்வை முக்கியமாகப் பேணி வந்தனவேயன்றி, கோவில்கள் எடுத்தல், விழா எடுத்தல் முதலிய நெறிகளை ஆதியில் பின்பற்றவில்லை. வைதிகச் சமயத்தவர்கள் நாளடைவில் பெருகினர். அரசர்களும் மக்களும் அதனையே பெரிதும் போற்றிவந்தனர். பல அரசர்கள் யாகம் செய்வித்து வந்தனர். இதனல் அந்தண வகுப்பினர் இன்றியமையாதவர்கள் ஆயினர். சுமார் கி. பி. ஆறும் நூற்றண்டு முடிய இந்த நிலையில்தான் தமிழ்நாடு, சமயம் பற்றிய அளவில், இருந்து வந்திருக்கிறது.

ஆனால், வெகு சீக்கிரத்தில் ஜைன சமயம் மேம்பட்டு வருவதாயிற்று. அரசர்களாலும், மக்களாலும் பெரிதும் போற்றப்படும் நிலையை எய்தியது. இதற்குரிய காரணங்கள் பல. இவர்கள் மந்திர சக்தியிலும், தர்க்கத்திலும் சிறந்து விளங்கினார்கள். ஆகவே, மற்ற வைதிக மதத்தை எளிதில் வெற்றி கொண்டனர். அரசர்களும், அவர்களுக்கு விளங்காத பிராகிருத மொழிகளில் இவர்கள் செய்து வந்த தர்க்கத்தைக் கண்டு பிரமித்து, இவர்கள் சமயமே உயர்ந்தது என்ற முடிவுக்கு வந்தனர். நாட்டு மக்களும் இவர்களுடைய ஒழுக்கத்தையும், அதனை வற்புறுத்தி வந்த செய்யுட்களையும் பார்த்து, இவர்கள் சமயம் சிறந்ததுதான் என்று கண்டனர். கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் ஞானசம்பந்தரும் அப்பரும் விளங்கிவந்த காலத்தில் சமண சமயத்தின் நிலை இவ்வாறாக இருந்தது. 7-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் ஜைன சமயம் சிறிது நிலைகுலையத் தொடங்கிற்று. இதற்குக் காரணம் ஞானசம்பந்தர் முதலியோரது பக்தி நெறியே என்பது உறுதி.

சைவம், வைஷ்ணவம் முதலிய வைதிகச் சமயங்களின் முயற்சியும், தெய்வ வரலாறுகளின் பெருக்கமும் இதன் பின்னரே தமிழ்நாட்டில் தோன்றின. இத்தோற்றத்தின் விளைவாக முருகக் கடவுள், கண்ணன் முதலிய தெய்வங்களின் சிறப்பு, மக்களால் எவ்வாறு உணரப்பட்டது என்பதைப் பின்னர் விளக்குவேன்.

# பக்தியும் தெய்வ வரலாறுகளும்

நமது தெய்வங்களின் பெருமைகள் பலவகையாலும் பெருகி வளர்வதற்குக் காரணம், நமது முன்னோர்களது பக்தியே என்று குறிப்பிட்டேன். இந்தப் பக்தி விளைவதற்கு நமது தமிழகம் பண்பட்டிருந்தது. சங்க காலத்துப் புலவர் பெருமக்கள், தங்களை ஆதரித்துவந்த அரசர்களையும், குறுநில மன்னர்களையும், வள்ளல்களையும் அழகாகப் பாராட்டி வந்தார்கள். புகழ்வது என்பது சாதாரணமாக நாம் நினைப்பதுபோல் எளிய காரியமல்ல; நேரடியாக முகத்துக்கு முகமாய்ப் புகழ்வது மனிதத்தன்மையும் அல்ல. பலருக்கும் சுவைக்கேடு உண்டாகும். எனவே புகழ வேண்டிய முறை நேரடியாக அல்ல; மறைமுகமாகவே தமது புகழ்ச்சிகளைப் பண்டைப் புலவர்கள் வெளியிட்டு வந்தார்கள். உதாரணமாக, கீழ்வரும் செய்யுளை நோக்குங்கள் :

> பாரி பாரி என்று பல ஏத்தி
> ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
> பாரி ஒருவனும் அல்லன்
> மாரியும் உண்டு ஈண்(டு) உலகு புரப்பதுவே.

இதில் உபமானப் பொருளைக் கொண்டு உபமேயப் பொருளின் சிறப்புக்கள் அனைத்தையும் புலவர் வெளியிட்டிருக்கின்றார். இவ் வுபமான உபமேயமும் நேரடியாகச் சொல்லப்படவில்லை.

உபமேயப் பொருள் உலகத்தைக் காத்துவருதல் எவ்வளவு அழகாக எடுத்துக் கூறப்படுகிறது என்பது நாம் செய்யுளை வாசித்து வாசித்து அறிந்துகொள்ளக் கூடியது.

பலரும் பல இடங்களில், பலவாறு புகழ்ந்து வருகிறார்கள் என்பதை, 'பாரி, பாரி' என்று இருமுறை பெயரைச்

சொல்லி அழைத்து, தமது அன்புடைமையையும், ஆராமையையும் புலவர் குறிப்பிக்கும் அழகு தனிப்பட்டது. பாரி என்று சாதாரணமான ஒருவனைக் குறிக்கிறார்கள் எனப் பலரும் நினைத்தல் கூடும். பலர் வாயிலும் அப்பெயர் வழங்குவதாயினும், அவன் சாதாரணமானவன் அல்ல. அவன் பெயரைச் சொன்னவுடனேயே அவனுக்கு நிகரானது மாரி என்பது நமக்கு உடனே தோன்றுகிறது. இப்படி எத்தனையோ நயங்கள் இச்செய்யுளில் உள்ளன.

இவ்வாறு புகழ்ந்து புகழ்ந்து பழகிய நாவையுடையவர்கள் நமது பண்டைப் புலவர்கள். பழைய இலக்கண ஆசிரியர்களும் இவர்களுக்குத் துணை புரிந்து வந்திருக்கிறார்கள். அரசர்கள் முதலியோர்களைத் தெய்வங்களோடு ஒப்பிட்டுக் கூறும் மரபைப் "பூவை நிலை" என்று இலக்கணம் கூறும். இவ்வகையாகப் பாடுபவர்கள் புகழ்மொழியில் மிகுதியும் பயின்று வந்தவர்களே.

ஆனால், அக்காலத்தில் தமிழ்நாட்டில் விளக்கமுற்றிருந்த தெய்வங்கள் சிலவே. அவைகளுடைய பெருமைகளும் பிற வரலாறுகளும் மிகுதியாகப் பரவவில்லை. ஆகவே, தமிழ் நாடு சம்பந்தப்பட்ட அளவில் அந்தத் தெய்வங்களின் வரலாறு மிகமிகச் சுருக்கமாகவே இருந்தன. மக்களைப் பாடிப் பாடிப் புலவர்கள் பலருக்கும் அருவருப்பு உண்டாயிற்று என்று தோன்றுகிறது. சில அரசர்கள் அவ்வாறு அருவருப்பு உண்டாவதற்குக் காரணமாகவும் இருந்தார்கள்.

புலவர்கள், அவர்களைப் பாடாதபடி தெய்வங்களைப் பாடுதல் ஆத்ம லாபத்திற்காகவாவது பயன்படுமென்று கருதலானார்கள். எப்பொழுதும், ஒரேபடித்தான தெய்வ வரலாறுகளைக் கூறிக் கூறி, அலுத்துப்போகும் பருவமும் வந்தது. எனவே, தெய்வங்களின் பெருமை பலபட விரிந்து வளர்ந்து ஓங்கவேண்டும் என்ற கருத்து புலவர்களுக்கு உண்டாயிற்று.

அக்காலத்தில்தான் மகாபாரதம் முதலிய இதிகாசக் கதைகள் தமிழ்நாட்டில் பரவத் தொடங்கின. அவைகளையும்

புலவர்கள் பயன்படுத்தினார்கள். ஆனால், வணக்க முறையில் அல்ல. அவர்கள் தெய்வ வரலாறுகளைப் பயன்படுத்தியது. இங்கும் அங்குமாக ஒரு சில இடங்களில் இதிகாச விஷயங் களை இவர்கள் குறிப்பிட்டுச் சென்றனர். ஆனால், வரலாறு களைப் பெருக்குவதில் இவ்விதிகாசக் கதைகளால் தமிழ் மக்களுக்கும் புலவர்களுக்கும் ருசி ஏற்பட்டது. பல வரலாறு களும் புதிதாகத் தோன்றலாயின.

வேறொரு முக்கியமான விஷயமும் இத்தகைய வரலாறு கள் பெருகுவதற்குக் காரணமாயிற்று. அரசர்கள் பலர் அங்கங்கே கோயில்கள் அமைக்கத் தொடங்கினார்கள். ஒவ் வொரு கோயிலிலும் விக்கிரகங்கள் நிரம்ப ஏற்பட்டன. விக்கிரகங்கள் ஏற்படவே, தெய்வங்களின் வரலாறுகளும் விரிவாகி வளர்ந்தன. சிற்பிகள் கோயில்கள் அமைத்ததோடு, விக்கிரகங்களுக்குப் பலவகையான உருவங்களைக் கொடுத்து, அவற்றின் மூலமாகவும் தெய்வ வரலாறுகள் பெருகிவரச் செய்தனர்.

முருகக் கடவுளின் வரலாற்றை எடுத்துக்கொண்டு, அவரது சரித்திரம் எவ்வாறு வளர்ந்துள்ளது என்பதை இனி நோக்குவோம்.

அவர் குறிஞ்சி நிலக் கடவுள் என்பது சங்க நூல்களால் புலப்படுகின்றது. பெண்களின் காதல்நோயைக் குறித்து நிகழ்ந்து வந்த வெறி-ஆடல்களில் இக்கடவுள் பூசகர் மூல மாக ஆவேசித்து நிற்பர். இதுவும் சங்க நூல்களில் காணப் படுவதே. இவ்வெறியாடல் 'வேலனாடல்' என்றும் வழங்கப் பட்டது. முருகக்கடவுளும் வேலன் என்ற பேர் கொண்டனர். 'வேல்' என்ற ஆயுதமும் இவர்க்கு உரித்தாயிற்று.

மலையாள அகராதியில் காட்டுத் தெய்வம் என்று இவரைக் குறிப்பிட்டிருக்கிறது. இவருக்குச் சேயோன் என்ற பெயர் வழங்கியது. இப்பெயரிலிருந்து பலவகையான பெருமைகள் கொள்ளப்பட்டன. சேய் என்றால் குமாரன் என்று பொருள்.

ஆகவே, இவரைக் குமரக் கடவுள் என்று கொண்டனர். குமரக் கடவுளானால், இவரது பிதா யார் என்ற கேள்வி எழுவது இயல்பே. ஆகவே சிவபெருமானின் புத்திரர் என்ற ஒரு வரலாறு தோன்றிற்று. குமரக் கடவுள் என்ற பெயருக்கும் சேய் என்ற பெயருக்கும் பொருத்தமாக வடிவு, அழகு, இளமை முதலியன இத் தெய்வத்திற்கு உரிமையாக்கப்பட்டன. இவரது பிறப்புப் பற்றிய வரலாறுகளும் பல தோன்றின.

இவ்வரலாறுகளுள் ஒன்று பரிபாடல் ஐந்தாம் பாடலில் குறிக்கப்பட்டுள்ளது. நச்சினார்க்கினியரும் இவ்வரலாற்றைக் குறித்து எழுதியுள்ளார். இவ்வரலாற்றில் சிவபெருமானது புத்திரர் என்றும், சரவணப் பொய்கையில் கார்த்திகை மகளிர் அறுவரால் வளர்க்கப்பட்டவர் என்றும் விளங்குகிறது. இக்காரணங்களினாலேயே தமது தந்தையைக் காட்டிலும் இவர் சிறந்தவர் என்ற கருத்து முருக பக்தர்களுக்கு உண்டாயிற்று. தந்தைக்கே உபதேசம் செய்தார் என்ற வரலாற்றிற்கு இது காரணமாயிற்று.

சிவபெருமானுக்கு ஐந்து முகங்களே கூறப்பட்டுள்ளன. முருகப்பெருமான் ஆறுமுகங்கள் உடையவரென வர்ணிக்கப்படுகின்றார். இவருக்குச் சரவணபவன் என்ற பெயரும், கார்த்திகேயன் என்ற பெயரும் உண்டாயின. இவருடைய அருஞ் செயல்களில் ஒன்று சூரபத்மனின் வதை. இவன் ஓர் அவுணன். இவனைப் பற்றிய வரலாறு வடமொழி நூல்களில் விசேஷமாக உரைக்கப்படவில்லை. அங்கே பிரசித்தமாக வழங்கி வந்தது 'தாரக வதம்' ஆகும். ஸ்கந்த புராணத்தை விரித்து எழுதியவர் சூரபத்மனையும் தாருகனையும் பிணைத்து எழுதிவிட்டார்.

ஆகவே, முருகக் கடவுள், இவ் அவுணனை வதம் செய்து 'தாரகாரி' என்ற பெயரையும் பெற்றார். சூரபத்மனோடு நிகழ்த்திய போரில் முருகக் கடவுள் படை எடுத்துச் சென்று, வழியில் ஆறு ஸ்தலங்களில் தங்கினர் என்று கொண்டனர்.

இதனால் ஆறுபடைவீடுகள் முருக பக்தர்களான நமக்குக் கிடைத்தன. அவைகள் திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய் (திருச்செந்தூர்), திருவாவினன்குடி (பழனி), திருவேரகம், பழமுதிர்சோலை (திருமாலிருஞ்சோலை)க் குன்றுகள்.

இவருக்குத் தேவியாய் முதலில் அமைந்தவர் மலைக் குறவர் மகளான வள்ளி அம்மை. இத்தொடர்பு இவரது தெய்வத் தன்மைக்குப் பொருந்தவில்லை ; இந்திரனது மகளாகிய தெய்வயானையை மணந்தார் என்ற சரித்திர வரலாறு பொருத்தமாயிற்று.

இவருக்குச் சிறப்பாக உரியது கடம்ப மரம். பூர்வ காலத்தில் ஒவ்வோர் அரசரது வம்சத்திற்கும் தனிப்பட உரிய காவல்-மரங்கள் இருந்தன. இவ்வழக்கத்தோடு ஒட்டி, முருகக் கடவுளுக்கும் கடம்ப மரத்திற்கும் தொடர்பு ஏற்படலாயிற்று. ஆனால், ஸ்தல புராணக்காரர்கள் கடம்ப வனத்தில் (அதாவது, மதுரையில்) எழுந்தருளியவர் என்று வரலாறு கூறினர். இவருக்குக் கொடியாயுள்ளது சேவல். காடுகளில் குறவர்களிடையே சேவல் மிகுதியாய் உள்ளமையினால், அது கொடியாய்க் கொள்ளப்பட்டது.

அவ்வாறே மயில்களும் ஏராளமாக மலையில் உண்டு. ஆகவே, மயிலை வாகனமாகவும் கொடியாகவும் கொண்டனர். இவரது வாகனமாகப் பண்டை நூல்களில் யானையும் கூறப்படுகிறது. அந்த யானைக்குப் 'பிணிமுகம்' என்று பெயர். 'பிணிமுகம்' என்றால் மயில் என்று பொருள். ஆகவே, மயில் வாகனமாவதற்குப் பொருத்தமும் அமைந்துவிட்டது. வரலாற்றிலே இவற்றை இசைப்பதற்கு, சூரன் இவ்வடிவுகளை அந்தியகாலத்தில் எடுத்தான் என்று கருதலாயினர்.

இச்சரித்திரங்கள் எல்லாம், சொல்வதற்குக் கற்பனை போல் தோன்றினாலும், நாளடைவில் மக்களது உள்ளத்தில் சிறிது சிறிதாக ஊறி வளர்ந்து வளர்ந்து, ஆதிகாலந் தொட்டே ஏற்பட்டுள்ளன என்ற நினைப்பே நம் மனத்தில் முளைத்து நிற்கின்றது. இவற்றிற்கு ஏற்க, சிற்பிகளும் இவ்

வரலாறுகளைக் கல்லில் செதுக்கி வடிவங்களை அமைத்து வந்தனர்.

சங்க நூல்களில் திருச்செந்தூரைத் தவிர, மற்றைய ஸ்தலங்களைப் பற்றி யாதும் கூறப்படவில்லை. சிறிது பிற்பட்டு, திருப்பரங்குன்றத்திற்கும் உரியன் என்ற வரலாறு பிறந்தது. இவர் சிவகுமாரர், அறுமுகம் உடையவர் முதலிய கருத்துக்களெல்லாம் பிற்பட்ட பரிபாடல், முருகாற்றுப் படை முதலியவற்றிலன்றி முற்பட்ட சங்க இலக்கியங்களில் காணப்படவில்லை.

புலவர்கள் இந்த வரலாற்றுப் பெருக்கத்தோடு அமைந்துவிடவில்லை. தங்கள் உயிரைக் காட்டிலும் சிறந்ததாகப் போற்றிவந்த தமிழ்மொழிக்கும் முருகக் கடவுளுக்கும் தொடர்பு உண்டு என்ற வரலாற்றையும் கண்டுகொண்டனர். தமிழ் இலக்கணம் முதல் முதலிற் செய்தவர் அகத்தியர். இந்தக் காரணம் பற்றி உபசாரமாக இவரைத் 'தமிழின் தந்தை' என்று கூறலாயினர்.

" அகத்தியன் பயந்த செஞ்சொல் ஆரணங்கு " என்று வில்லிபுத்தூரார் பாடியுள்ளார். அகத்தியரின் குரு முருகக் கடவுள் என்றும், இந்தத் தெய்வத்தினுல் இயற்றப்பட்ட இலக்கணம் உண்டு என்றும், அவ் இலக்கணத்தின் பெயர் 'குமரம்' என்றும் பாவனைகளைப் பெருக்கினர். இவ்வாறு இலக்கண நூல் செய்வித்தார் என்ற செய்தியோடு நில்லாமல், வேறு ஒரு புதிய செய்தியையும் அமைத்தனர்.

இறையனுர் என்றவர் பண்டைக் காலத்துப் புலவர்களில் ஒருவர். இவர் ஓர் அகப்பொருள் நூல் இயற்றினுர். அதற்கு 'இறையனுர் அகப்பொருள்' என்று பெயர். ஆனுல், இறையனுர் என்பது சிவபெருமானுக்கும் ஒரு பெயர் என்று நாம் அறிவோம். எனவே, அவரே இந்நூல் செய்தாரென்று கொள்ளப்பட்டது. அவரது நூலுக்கு உரை கேட்கத் தகுந்தவர் அவருடைய குமாரர் அன்றி வேறு இருக்கமுடியாதல்லவா ?

ஆகவே முருகக் கடவுளே, ''உருத்திரசன்மன்'' என்ற பெயரோடு வாழ்ந்தனர் என்றும், அவரே உரை கேட்டனர் என்றும் ஒரு வரலாறு தோன்றியது. இவ்வரலாறு இறையனார் அகப்பொருள் முன்னுரையில் காணப்படுகிறது. இதனால் தமிழோடு முருகக் கடவுள் தொடர்பு உடையவ ரென்று புலவர்கள் பாராட்டிவருகின்றனர்.

முருகக் கடவுளின் சரித்திரங்களைப் பாரதத்திலும், வட மொழியில் வால்மீகி ராமாயணத்திலும், குமார சம்பவத்தி லும் காணலாம். தமிழில் பரிபாடல், முருகாற்றுப்படை, தேவாரம், திருப்புகழ், கந்தபுராணம் முதலியவற்றில் விரி வாகக் கூறப்படுகின்றன. காவடிச் சிந்தில் இவருடைய வரலாறு மிகவும் ரஸ பாவத்துடன் காணப்படுகிறது.

பக்தி இயக்கமானது 7-ஆம் நூற்றூண்டில் தொடங்கிச் சிறப்பாக வளர்ந்து வந்திருப்பதற்கு முக்கிய காரணங்கள் இவ் வரலாறுகளேயாகும். வரலாறுகளைப் பக்தியும், பக்தியை வரலாறுகளும் ஒன்றை ஒன்று புஷ்டியாக்கி, நமது உள்ளத்திலே பெரியதோர் தெய்வ உணர்ச்சியை உண்டாக்கி விட்டன. கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகக் கடவுளே என்று போற்றிவருகிறோம்; அவரைப் பற்றிய சிறந்த பாடலாகிய திருமுருகாற்றுப்படையைப் பக்தியோடு பாராயணம் செய்துவருகிறோம்.

# பக்திப் பெருவெள்ளம்

இறைவன் அளவில்லா ஆற்றல் உள்ளவன். அவனிடம் எல்லாம் அடக்கம். அணுவுக்கு அணுவாகவும், மேருவுக்கு மேருவாகவும் இருப்பவன். அவனன்றி உலகத்தில் ஓர் அணுவும் அசைவதில்லை. அவன் இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்று எழுதிக் காட்ட முடியாது. எவ்வாறு நாம் வர்ணித்தாலும், அவ் வர்ணனைகளுக்கு எல்லாம் லட்சியமாகவே இருப்பவன். அப்பேர்ப்பட்ட இறைவனை முன்கூறியவாறு ஆறுமுகம் முதலியனவுடைய முருகக் கடவுளாக நாம் பாவிப்பதில் யாது ஒரு கற்பனையும் இல்லை. நமது மனத்திற்கு உகந்ததாகவும், மனத்தைக் கனிய வைப்பதாகவும் உள்ள எந்த வடிவத்திலும் நாம் இறைவனைக் கண்டு, அவனுடைய பேரழகுக்கும் பேராற்றலுக்கும் அடிமையாகலாம். ஆகவே, நமது முன்னோர்கள் முருகக் கடவுளைப் பல வடிவாகப் பாவனை செய்து, மேன்மேலும் அவரது பெருமையை விளங்க வைத்தது முற்றிலும் இயல்புடையதேயாகும்.

இப்பெருமையின் வளர்ச்சி மானஸிகம், பாஷ்மம் என்ற இரண்டு கூறுகத் தோன்றி வந்திருக்கிறது என்று கருதலாம்.

ஒன்று, மானஸிக வளர்ச்சி. இந்த வளர்ச்சி நம்முடைய மனத்திலே பல வடிவாக அவனை நினைந்து நினைந்து, அவனுடைய உண்மைப் பெருமைகளை அளந்து அறிய முயலும் முயற்சிகளால் ஏற்படுவது. இந்த முயற்சிகளில் ஒரு பகுதி தத்துவ முறையை அனுசரித்தும், மற்றொரு பகுதி பௌராணிக முறையை அனுசரித்தும் இருக்கும். முருகக் கடவுளின் ஆறு முகம் இன்னின்ன தத்துவங்களை விளக்குவது என்று முடிவுகட்டுவது தத்துவ முறை; ஒவ்வொரு முகமும் இன்னின்னபடி இருக்கும், இன்னின்னவற்றைச் செய்யும், ஆறு

முகங்கள் எப்படி ஏற்பட்டன என்றெல்லாம் புராண வாயிலாக அறிய முயல்வது புராண முயற்சி.

இப் புராண முயற்சிக்கும், பாஷ்ய வளர்ச்சிக்கும் நெருங்கிய தொடர்பு உண்டு. பாஷ்ய வளர்ச்சி புராணத்தைக் கூறும் வரலாறுகளையும், புராண வரலாறுகள் பாஷ்ய வளர்ச்சியையும் பெருகச் செய்தன.

இப் புராண வளர்ச்சிக்கும் பாஷ்ய வளர்ச்சிக்கும் முக்கிய காரணமாய் இருந்தவை, கி. பி. 7-ஆம் நூற்றாண்டு அளவில் இருந்த அரசியல் நிலைகள் முதலியனவாம். அக் காலத்தில் பல்லவ அரசர்கள் மேலோங்கி யிருந்தனர். பிற்காலச் சோழர்கள் தோன்றிச் செழித்தது பிற்காலத்தில்தான். இவர்களுடைய உச்ச நிலை தஞ்சைப் பிரதேசங்களில் 9-ஆம் நூற்றாண்டின் இடைப்பகுதியில் வெளியாயிற்று. பாண்டிய அரசர்கள் ஓர் முக்கிய நிலையை அடைந்திருந்தார்கள். அவர்களுள் சிலர் சோழர்களை அடிக்கடி போரில் வெற்றி கண்டும், பல்லவ அரசர்களையும்கூடப் பலமுறை தாக்கியும் வந்தனர். எனவே, முக்கியமாக அக்காலத்தில் சொல்லக்கூடியவர்கள் பாண்டியர்களும், பல்லவர்களுமேயாவர்.

இவ் அரசர்கள் அடிக்கடி தம்முள் போர் செய்து வந்தனர். தாம் வெற்றி யடையவேண்டுமானால் தெய்வானுக்கிரகம் இருக்க வேண்டும் என்று கொண்டனர். வெற்றி பெற்ற பின்னரும் அவற்றைக் கொண்டாடுவதற்கு இறைவனை வணக்கம் செய்து போற்றுவது வழக்கமாயிற்று. இக் காரணங்களால் பல கோயில்கள் பல இடங்களிலும் எடுக்கலாயினர். பல்லவ அரசன் எடுப்பித்த கோயில் மகாபலிபுரம் என்பதை யாவரும் அறிவர். கோயில்களை அமைத்து, அங்கே விக்கிரக ஸ்தாபனமும் செய்து; நித்திய நைமித்திக பூஜைக்காக நிபந்தங்களும் விட்டுக்கொடுத்தனர். இதனால் கோயில்கள் மிக நன்றாகப் பாதுகாக்கப்பட்டுச் செழிப்புற்றுப் பெருகின. அக்கோயில்களிலே அரசர்கள் நேரில் வந்திருந்து தான தருமங்கள் செய்வதும் உண்டு. அரசர்க

ளுடைய பத்தினியர்கள், உறவினர்களும் கோயிலில் எழுந் தருளியிருக்கும் சுவாமிக்கு திருநந்தா விளக்கு முதலியன அமைத்தற்கு வேண்டும் மான்யங்களை விட்டுக்கொடுத்தனர். இவர்களேயன்றி, அரசர்களுக்கு அணுக்கர் ஆகவும், அவர் களுடைய பிரீதியைப் பெறவேண்டியவர்களாகவும் உள்ள வர்களும் கோயிலுக்கு வேண்டும் நிபந்தங்களை அடிக்கடி ஏற்படுத்திவந்தனர். கோயில்கள் மிகுதிப்படவே, அவற்றின் சுற்றுப்பிராகாரத்திலும் மற்ற இடங்களிலும் பற்பல தெய் வங்கள் சிற்ப வடிவில் வைக்கப்பட்டன. அத் தெய்வங் களுக்கும் நிபந்தங்கள் ஏற்படுத்துவது வழக்கமாயிற்று. இத் திருக்கோயில்களில் பூஜை முதலியவற்றிற்கு அன்னிய இடங்களில் இருந்து புரோகிதர்கள், தீக்ஷிதர்கள் முதலான வர்களை வரவழைத்தனர். அவர்கள் தங்குவதற்கு என வீடு முதலிய பல சௌகரியங்களைச் செய்து கொடுப்பதற்கு அரசர்கள் உதவி வந்தனர்.

அரசியல் நிலை இவ்வாறாக, கோயில்களின் பெருமையும் நாடு எங்கும் பரவலாயிற்று. கோயில் இருக்கும் ஊரில் உள்ளாரே தவிர, அயல் ஊர்களில் உள்ளவர்களும் சுவாமி தரிசனத்தின் பொருட்டுக் கோயில்களுக்கு வருவது வழக்கமா யிருந்தது. ஆனால், அக்காலத்தில் பாதைகள் செம்மையாய் இல்லை. செல்லவேண்டிய தூரமும் மிகுதியாக இருந்தது. நாடுகாவலும் ஓர் அளவு குறை உள்ளதாகவே இருந்தது. இக்காரணங்களால் ஓர் ஊரிலிருந்து மற்றை ஊர்களுக்குச் செல்பவர்கள், கூட்டம் கூட்டமாகவே சென்று வந்தனர். பக்தர் குழாங்கள் பெருகியது இவ்வாறே. ஞானசம்பந்த சுவாமிகள் சிறுவராய் இருக்கும்போதே அவரை எடுத்துக் கொண்டு அவரது தந்தையார் தோள்மீதும் பிற்காலத்தில் பொற்சிவிகையின்மீதும் ஆரோகணித்துச் சென்றும், மற் றைய பக்தர்கள் எல்லாம் உடன் வர, சிவ கோஷத்துடன் ஊர் ஊராகச் சென்று சுவாமி தரிசனம் செய்து, அங்கங்கே திருப்பதிகம் பாடின வரலாறு பெரியபுராணத்தில் நன்றாக

விளங்கும். அப்பர் சுவாமிகளும் இப்படியே பக்த குழாத்துடன் சென்று வந்தனர். இவ்வகைக் குழாங்கள் ஒன்றோடு ஒன்று கூடும்போது எத்தனை குதூகலிப்பும், ஆரவாரமும் இருந்திருக்கும் என்பதை நாம் ஊகித்துக்கொள்ளலாம். இந்தப் பக்தர்கள் குழாம் குழாமாகக் கோயிலிருக்கும் ஊர்களுக்குச் செல்வதையே பெரியதோர் பேருகக் கருதிவந்தனர்.

ஏடு நிலத்தில் இடுவதன் முன்னம் வந்து
எங்கள் குழாம் புகுந்து

என்பது பெரியாழ்வார் வாக்கு. இங்ஙனமே இக் குழாங்கள் தொன்றுதொட்டு எத்தனையோ தலைமுறையாகப் பக்தி பூண்டு வந்திருப்பதாகக் கருதிக் கொண்டனர். இதனை நாயன்மார்கள், ஆழ்வார்கள் முதலியோர்கள் மிகவும் அழகு படக் கூறியிருக்கின்றார்கள். "பழ, அடியோம்" என்று மாணிக்கவாசகர் வழங்குகின்றார். பக்த குழாங்கள் பெருகவே, பக்திவெள்ளமும் ஓங்கிப் பெருகுவதாயிற்று.

சமய வாதங்கள் இவ்வெள்ளத்தை மிகுதிப்படுத்துவதற்கு ஒருவாறு பயன்பட்டன என்று கூறலாம். முக்கியமாக, பௌத்தம், ஜைனம் முதலிய அவைதிக சமயங்களும், சைவம், வைஷ்ணவம் முதலிய வைதிக சமயங்களும் அடிக்கடி வாதங்கள் நிகழ்த்திவந்தன. இவ்வாதங்களில் வெற்றி தோல்வி காண்பது முடியாதது. பௌத்த, ஜைன சமயத்தார் தங்கள் சமயமேதான் உலகில் மேம்பட்டவை என்று கூறி வந்தார்கள்.

அவ்வாறே சைவ வைஷ்ணவ சமயத்தாரும் தங்கள் சமயமே உலகத்தில் சிறந்தவை என்று கூறிவந்தார்கள். ஆனால், ஒரு விளைவு கவனித்தற்குரியது. ஒவ்வொரு சமயத்தவனும் தன் சமயத்தில் மிக மிக ஆழ்ந்து ஈடுபட்டுவந்தனன். ஆகவே, தமது சமயத்தை எவ்வாறெல்லாம் மூர்த்தி விசேஷங்களாலும், வரலாற்றுப் பெருமையினாலும் அலங்கரிக்க முடியுமோ, அவ்வாறெல்லாம் மக்கள் அலங்கரித்துவந்தனர்.

இவ்வரலாறுகளில் தெய்வங்கள் ஒன்ருெடொன்று போர்புரிதலும் காணப்படும். சைவ சமயத்தின் மேம்பாட்டைக் காட்டுவதற்கு வைணவ தெய்வமாகிய திருமால் அவருக்கு ஆற்றலில் அடங்கியவர் என்றும், அவ்வாறே திருமாலின் ஏற்றத்தைப் புலப்படுத்துவதற்குச் சிவபெருமானை ஆற்றலில் குறைந்தவர் என்றும் கதைகள் புனைதல் வழக்கமாயிருந்தது.

கோயில்களும் சித்திரசாலையாகவும், கீத வாத்திய நிருத்தங்களின் அரங்காகவும், வேதம் ஓதும் பாடசாலையாகவும், கல்வி பயிலும் கழகமாகவும், ஊர்ப் பொது மன்றமாகவும் பிற்காலத்தில் சிறப்பு எய்தின. இச்சிறப்புக்களாலும் பக்தி பலபடியாக வளர்ந்து வந்தது. இங்ஙனம் பலவாருகப் பக்தி கரைபுரண்டு பெருகுவதாயிற்று. அரசர்கள் தங்கள் பெருமைக்கும் செல்வ நிலைக்கும் ஏற்க, திருக்கோவில்களைப் பெரிதாக அமைத்து, சமய வழிபாட்டை நிலைநிறுத்தி வந்தனர். 7-ஆம் நூற்ருண்டில் தொடங்கி நாயன்மார்கள், ஆழ்வார்கள் காலம் முடிய நமது நாடு புண்ணிய நாடு என்ற பேருக்கு ஏற்றபடி பக்தியில் திளைத்தெழுந்து அனைவராலும் போற்றற்குரிய தெய்வப் பாடல்களால் நிரம்பி விளங்கியது.

# பக்தி வெள்ளத்தின் விளைவு

*நிலத்தியல்பால் நீர்திரிந் தற்றாகும்*

என்றனர் வள்ளுவர். இதை ஒப்ப, பக்தி வெள்ளம் பாய்ந்து பரந்த இடங்களில் எல்லாம் அந்த இடங்களுக்குத் தக்கபடி விளைவுகளும் வேறுபட்டன. சிற்ப நூல்களின் விளைவை எடுத்துக்கொள்வோம். இவைகள், பலவேறு சமயங்களின் தன்மைக்கும் தக்கபடி, வேறு வேறு கருத்துக்கள் அமைந்த நூல்களாய் அமைந்தன. கோவில்களின் எடுப்பு நிலைகளும் கூட இவ்வாறுதான் வேறுபட்டன. மூர்த்தி லக்ஷணங்களின் வேற்றுமைகளைக் குறித்து நாம் சொல்ல வேண்டியதில்லை.

முதலாவது, மிகப் பண்டைக்காலம் தொட்டு நமது நாட்டில் விளங்கிய பௌத்த ஜைன சமயங்களைப் பார்ப்போம். புத்தருடைய விக்கிரகம் தனிப்பட்ட கலையுடன் தியானமூர்த்தியாயும் சாந்தமூர்த்தியாயும் விளங்குவதைக் காணலாம். பௌத்த சமயத்தில், 'பௌத்த ஜாதகம்' என்ற ஓர் அரிய நூல் தோன்றியது. புத்தரின் பூர்வ ஜன்ம வரலாறு பற்றிய கதைகளை இந்நூல் கூறுகிறது. இதற்கு மிக விரிந்த ஓர் வியாக்கியானமும் உண்டு. ஜைன சமயத்திலும் இவ்வாறே அருகக் கடவுளின் மூர்த்தி விசேஷம் சாந்த சொரூபியாய் விளங்குகிறது. பல அருகர்களுடைய பிறப்பு வரலாறுகளும் தோன்றுவன வாயின. இவற்றின் நோக்கமாக, அதாவது பௌத்த ஜாதகங்களுக்கும், அருகர் பிறப்பு வரலாற்றிற்கும் அடிப்படையாக உள்ள ஒரு கொள்கை உண்டு. உலகத்தில் நிகழ்வது எல்லாம் கர்மானுசாரத்தைப் பற்றியது என்பதே அக் கொள்கை. நிகழும் ஜன்மத்தில் ஒருவனுக்கு ஏதாவது குறைகள் ஏற்படுமானால், அக்குறைகளுக்கு அவனது முந்திய ஜன்மத்தில் அவன் செய்த தவறுகளே காரணமாகும். அங்

னமே அதற்கு முன்புள்ள பூர்வ ஜன்மத்தில் தவறு செய்வதற்குரிய காரணத்தைக் காணுதல் வேண்டும். இக்கொள்கையை நுட்பமாகக் கடைசிவரை கொண்டுசென்று நிலை நிறுத்துவர். ஒருவனுக்கு இந்த ஜன்மத்தில் நிகழும் நன்மைகளும் இங்ஙனமேயாகும். எனவே, இவ்விரு சமயத்தினரும் நன்மை, தீமை என்ற பாகுபாட்டை மிக முக்கியமாகக் கொண்டு, மக்களது நல்லொழுக்கத்தையே மிகவும் போற்றி வந்தனர். பௌத்த சமயத்தில் புத்த நிலையை அடைவதற்கு அடுத்து முன்புள்ள நிலையைப் 'போதி சத்துவ' நிலை என்பர். இந்தப் போதி சத்துவர்களுடைய சரித்திரம் மிகவும் சுவையுள்ளது; பொருட் பொலிவுள்ளது. இவைகளை எல்லாம் பௌத்த ஜாதகக் கதைகள் நன்கு விளக்குகின்றன. இக்கதைகள் பாலி மொழியில் உள்ளன. இவற்றை மொழிபெயர்த்து ஆங்கிலத்தில் பலர் பல தொகுதிகளாக வெளியிட்டிருக்கிறார்கள். சுமார் ஐந்நூறு கதைகள் வரை நமக்குக் கிடைக்கின்றன. இக்கதைகளும் சிற்பத்துக்குரிய பொருளாய் அமைந்துவிட்டன.

ஜைன சமய வரலாறு, பௌத்த சமய வரலாற்றோடு மிக நெருங்கிய ஒப்புமையுடையது. எனினும், இரு சமயத்தினரிடையேயும் அடிக்கடி தர்க்கம் நிகழ்ந்துவந்தது. இவர்களது கடவுளரின் பூர்வ வரலாற்றில் பல அம்சங்களும் புதிதாகக் காணப்படுகின்றன. நாம் 'நாகர்' என்று வழிபடும் தெய்வம், 'பார்சுவ நாதர்' என்ற அருகக் கடவுளுக்கு நிழல் செய்து நின்ற நாகத்தையே என்று சொல்லலாம். இவ்வரலாறுகளில் புராணக் கதைகள் மிகவாய்ப் புகுந்துவிட்டன. இக்கதைகளும் சிற்பத்திற்குரிய பொருள்களாய்த் திகழ்ந்தன.

அருகக் கடவுளரின் வரலாறுகளைத் தவிர, அந்தச் சமயத்திற்குரிய பெரியோர்களது வரலாறுகளும் பலவாய்த் தோன்றின. இவர்களை 'அறுபத்துமூவர்' என்று கணக்கிடுவர். 'திரிஷஷ்டி சலாகா புருஷர்கள்' என்று இவர்களை

வழங்குவார்கள். இவர் வரலாறுகள் 'அர்த்தமாகதி' என்ற பிராகிருத மொழியில் முதன் முதலில் எழுதப்பட்டன; பின்னர் வடமொழியிலும் கன்னட மொழியிலும் மொழி பெயர்க்கப்பட்டன. இதன் பௌராணிகத் தன்மையை நோக்கி, 'ஸ்ரீபுராணம்' என இச் சரித்திரத் தொகுதியை வழங்குவர். இவ்வரலாறுகளைப் பற்றி எல்லாம் சிற்பங்கள் நமது நாட்டில் பல இடங்களிலும் காணப்படுகின்றன.

மக்கள் வாழ்வு எப்படி நிலையற்றதோ, அதுபோலத் தான் சமயங்களின் வாழ்வும் என நினைக்க வேண்டியிருக் கிறது. பௌத்த சமயம் நமது தென்னாட்டில் மறைந்து போயிற்று. ஒருவாறாக ஜைன சமயம் ஒரு சில இடங்களில் உயிர் வாழ்ந்திருக்கிறது. பௌத்த, ஜைன மூர்த்திகள் சிவ, விஷ்ணு மூர்த்திகளாக இப்பொழுது பல இடங்களிலும் வணங்கப்பட்டு வருகின்றன.

நமது தென்னாட்டில் முக்கியமாய்ச் சிறந்து விளங்கும் சமயம் சைவம், வைஷ்ணவம் என்பவையாம். இவ்விரு சமயங்களிலும் தெய்வ வரலாறுகளும் உள்ளன; அடியவர் கள் வரலாறுகளும் உள்ளன. தெய்வ வரலாறுகள் சிவ புராணம், ஸ்காந்தம் முதலியவற்றிலும், விஷ்ணு புராணம், பாகவதம் முதலியவற்றிலும் காணப்படுகின்றன. அடியவர் களின் வரலாறுகள் பெரியபுராணம் முதலியவற்றிலும், திவ்ய சூரி சரிதம், குருபரம்பராப் பிரபாவம் முதலியவற்றி லும் விளக்கப்படுகின்றன. சைவ, வைஷ்ணவ தெய்வங் களின் வரலாறுகளில் முறையே உக்கிர பாவமும், சாந்த பாவமும் நிலவக் காணலாம். இத் தெய்வங்களின் அடியார் கள் சரித்திரங்களிலும் இந்த பாவ வேறுபாடுகள் பலவகை யாக வெளிப்படுகின்றன. சிற்பிகள் இவ் வேறுபாடுகளை உணர்ந்து அவற்றிற்கு ஏற்றபடி மூர்த்தி விசேஷங்களை அமைத்துவந்தனர்.

தெய்வங்களில் முருகக் கடவுளும், கண்ணபிரானும், இராமபிரானும் நம்மால் என்றென்றும் போற்றி அனு

பவிக்கத்தக்க பெருமை வாய்ந்தவர்கள். முருகக் கடவுள் வள்ளியைய மணம் புரிந்த வரலாறு புராணங்களில் கூறப் படுவது தவிர, தனிப்பட நாடகத்திலும் வெள்ளித் திரையி லும் காட்டப்படுகின்றன. அவரது இளமையும், வள்ளியை மணம்புரிவதற்கு வேண்டி அவர் எடுத்துக்கொண்ட முதுமை யும், சாகசங்களும் நம் மனத்திலே என்றும் இனிமை தரத் தக்க காட்சிகளாக உள்ளன. அவர் ஆரோகணித்து வரும் மயிலும், பிற சின்னங்களும் ஓவியக் கலைஞர்களுக்கு என்றும் கவர்ச்சி தரும் லட்சியமாக அமைந்தவை. அவரது வீரச் செயல்களும் நமது பாவனைக்கு உகந்தவையாக விளங்கு கின்றன. அவரது இளமையும், அழகும், முதுமையும்,

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருள்

ஆகவும்,

பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியன்

ஆகவும், அவர் உள்ளமையைப் புலப்படுத்துகின்றன. தமி ழிலே அவரது பிறப்பு, திருவிளையாடல், அருளாட்சி முத லியவற்றை நமக்கு உணர்த்தும் பண்டை நூல்கள் பரிபாட லும், திருமுருகாற்றுப்படையுமாம். இந்நூல்கள் தோன்றிய காலம் 7-ஆம் நூற்றாண்டு என்று கொள்ளலாம். இவரது வரலாற்றைக் கூறுவது கந்தபுராணமாகும். இவரது பெரு மையை இனிய சந்த சித்திரங்களால் நமக்கு அருளிச் செய் துள்ளது திருப்புகழ் ஆகும். இதனை இயற்றியவர் அருண கிரிநாதர்; 15-ஆம் நூற்றாண்டில் பிரபுட தேவராயர் காலத் தில் வாழ்ந்தவர்.

வைஷ்ணவ தெய்வங்களை எடுத்துக்கொண்டால், இராமாயணம் என்னும் இதிகாசத்தின் தலைவனாகிய ஸ்ரீராம னும், பகவத்கீதை செய்த கண்ணபிரானும் இங்கே சிறப்பாக எடுத்துக் கூறத்தக்கவர்கள். ஸ்ரீராமர், அவரது சொல்லுக் கும் வில்லுக்கும் பெயர் சிறந்தவர்; தக்க கௌமாரப்

பருவத்திலே முடி சூட்டச் சென்று, மாற்றாந்தாயின் கட்டளையாலும், அவள் வயப்பட்ட தந்தையின் சொல்லாலும் காட்டுக்குச் சென்றவர். அங்கே நிகழ்ந்த சோக சம்பவங்கள் மக்கள் உள்ளத்தில் என்றென்றும் எதிரொலித்துக் கொண்டிருக்கும். இந்தச் சோகத்தை மிகுதிப்படுத்துவதற்கு அவரது இளம் மனைவி சீதை, அவரது தம்பியாகிய லக்ஷ்மணன் முதலியோர் அடைந்த இன்னல்கள் இராமசரிதத்தில் முக்கியமான இடம் பெற்றுவிட்டன. ஒன்றன்மேல் ஒன்றாக நிகழும் சம்பவங்கள் அனைத்தும் சோக சிகரத்தை எட்டிப் பிடிக்கும் படிகளாகவே உள்ளன. இவைகள் இளைஞர்கள் முதல் முதியோர்வரை அனைவரையும் தன் வசப்படுத்தும் தன்மையன. 'கற்பார் இராமபிரானை யல்லால் மற்றுங் கற்பரோ ?' என்றார் நம்மாழ்வார்.

குலசேகராழ்வார் இந்த இராமசரிதம் பற்றி அருளிச் செய்துள்ள பாசுரங்கள் கற்போர் உள்ளத்தைச் சோகம் பெருகிப் பொங்கிவரும் ஊற்றுக் கண்ணாக மாற்றிவிடுகின்றன. இதனைப் போன்ற வரலாறு வேறு தேசத்து நூல்களில் காணப்படுமோ என்பது மிகவும் ஐயப்படத்தக்கதே. கம்பன், வால்மீகி என்ற இரு பெரும் புலவோர்களது உள்ளங்களையும் கவர்ந்து ஈர்க்கும் பெரும் சிறப்புப் பெற்றது இவ்வரலாறு.

ஆனால், மேற்கூறியது கௌமாரப் பருவத்து வரலாறுகளைப் புலப்படுத்துவது. இளமைப் பருவத்தை இவ்வரலாறு நமக்குத் தெரிவிக்க மாட்டாது. இப்பருவத்தைத் தெரிவிப்பது கண்ணபிரானது திவ்விய சரித்திரமேயாம். பக்தி வெள்ளத்தின் விளைவாக, சிவபெருமான், முருகக் கடவுள், இராமபிரான், கண்ணபிரான் என்ற நால்வரும் சிறந்து மேம்பட்டு விளங்குகின்றனர். இவர்களைப் பற்றிய சிற்பங்களும் இலக்கியங்களும் பக்திப் பாடல்களும் தமிழ் நாட்டுக்கு என்றும் அணி செய்வனவாகும்.

# பக்திக் கனியின் தீஞ்சாறு

பக்தியின் விளைவுகளை முற்பகுதியில் நோக்கினோம். அந்தப் பக்திக் கனியின் தீஞ்சாறு எனக் கருதவேண்டுவது கண்ணன் என்னும் "கரும் தெய்வம்." இவ்வாறு கொள்வதற்குரிய காரணத்தை நாம் நோக்குதல் வேண்டும். குழந்தைப் பருவம் முதல், மேலுள்ள எல்லாப் பருவங்களிலும் இத்தெய்வத்தின்பால் மக்கட் பண்பு மிகுதியாய்க் காணப் படுகிறது. இவ்வாறு வேறு எந்தத் தெய்வத்தினிடமும் காணப்படவில்லை. ஆகவே, கண்ணனது குழந்தைப் பருவம் முதல் இறுதிவரை அவன்மீது அன்பு கொண்டு மக்கள் போற்றி வந்தனர். யார் குழந்தையாய் இருந்தாலும், குழந்தை என்ற சொல்லளவிலேயே நாம் மகிழ்ந்துவிடு கிறோம். அழகுள்ள குழந்தை என்றால் நம் அன்பிற்கு எல்லை இருக்குமா?

குழல்இனிது யாழ்இனி(து) என்பதம் மக்கள்
மழலைச்சொல் கேளா தவர்

என்றனர் வள்ளுவர். மழலைச் சொல்லின் இனிமையினைக் கண்டு இவ்வாறு மகிழ்ந்தனர் என்றால், அதன் உள்ளத்தில் இனிமையும் ஹாஸ்யமும் எப்போதும் கனிந்து கொண் டிருக்குமானால், எவ்வளவு தூரம் தமிழ்மறை எழுதிய இவர் மகிழ்ந்திருப்பார் என்று நம்மால் கணக்கிட முடியாது. கண்ணன் அரசுபுரிந்து வரும் பருவத்திலும் குழந்தை உள்ளம் அவனிடமிருந்து நீங்கிவிடவில்லை. அவன்கூட ஒரு சாலை மாணாக்கனாக இருந்த குசேலனுடைய சரித்திரத்தை நோக்கினால் இது விளங்கும்.

ஆனால், தமிழ் உலகில் இவன் முதன் முதலில் நமக்குக் காட்சி அளிப்பது குழந்தைப் பருவத்தில் அன்று; சிறந்த தோர் தெய்வீக வீரனாகவே இவன் நமக்குப் புலப்படு

கின்ருன். சூரியனை அவுணர்கள் கைக்கொண்டு ஒளித்ததை, இவன் மீட்டு வந்தான் என ஒரு புறநானூற்றுச் செய்யுள் கூறுகிறது. வேருெரு செய்யுள் இவன் இடைப் பெண்களோடு விளையாடியிருந்த யௌவனப் பருவத்தைக் குறிக்கிறது. நீராடச் சென்ற கோபியர்கள் ஒரு சமயம் தங்கள் புடைவைகளை யமுனை நதியின் கரையில் அவிழ்த்து வைத்துவிட்டு நீராடிக்கொண்டிருந்தனர். அப்போது, விளையாட்டுப் பிரியனை கிருஷ்ணன் அங்கே வந்து புடைவைகளை எடுத்துக்கொண்டு கரையிலிருந்த குருந்தமரத்தில் ஏறிப் பதுங்கிக்கொண்டிருந்தான். கோபியர்கள் அரையளவு நீரில் நின்று எவ்வளவோ வேண்டியும் புடைவைகளைக் கொடுக்கவில்லை. இச்செய்தி இவனது மூத்தவரான பலராமருக்கு எட்டியதும், அவர் கோபித்து வந்துகொண்டிருந்தார். இதைக் கண்ணன் அறிந்தான். ஒரு பக்கம் தமையனரது கோபம்; மற்ருெரு பக்கம் விளையாட்டுத் தோழியர்து மானம் போதல். சமயோசிதமாக, ஓர் யுக்தி தோன்றிற்று. இலை தழைகள் செறிந்த குருந்த மரக்கிளைகளைத் தாழ்த்திக் கொடுத்தான். புடைவைகளை யாசித்துக் கொண்டிருந்த கோபியர்களது மானம் காப்பாற்றப்பட்டது. தமையனர் கோபியர்களைப் பார்க்கவில்லை; தாம் கேள்வியுற்றது பிழையெனக் கண்டு, தம்பியிடம் குற்றம் காணுதவராய், கோபம் நீங்கி மீண்டனர். இது ஓர் அழகிய வரலாறு அல்லவா? இந்த வரலாறு அகநானூற்றில்,

> வண்டனல் தொழுநை வார்மணல் அகன்துறை
> அண்டர் மகளிர் தண்தழை உடீஇயர்
> மரம்செல மிதித்த மாஅல் போல

என அழகுற எடுத்துக் கூறப்பட்டுள்ளது.

கண்ணன் கம்சனது மருமகன் என்பது முதல் முதலில் கலித்தொகையில்தான் வெளிப்படுகிறது. அவ்விடத்திலும் 'கம்சன்' என்ற பெயர் தரப்படவில்லை. அவன் கண்ணனைக்

கொல்லும் பொருட்டுக் குதிரையின் முகத்தோடு வந்த கேசீ என்ற அசுரனை வதைத்தான் என்ற இடத்து மறைமுகமாகத் தான் கம்சன் குறிக்கப்படுகிறான். கேசவன் என்ற பெயர் இவ்வரலாற்றினால் ஏற்பட்டது என்பர். எவ்வாறாயினும் அவனது குழந்தைப் பருவத்தை ஒருவாறு இதினின்று ஊகித்தல் தகும். சிறிது பின்னர், பலவகை வரலாறுகளும் காணப்படுகின்றன. முக்கியமாக, பரிபாடல் என்ற நூலில் பல சரித்திரங்களைக் காணலாம். ஒன்றில் இவன் ஆல், கடம்பு, யாற்றிடைக்குறை, மலை முதலிய இடங்களில் வேறு வேறு பெயரைப் பெற்றிருந்தான் என்றுள்ளது. இது முருகக் கடவுளின் வாழ்விடங்கள் போல் தோன்றுகிற தல்லவா? பிற வரலாறுகளைத் தொகுத்து நோக்கினால், இவன் கருடனது செருக்கை நீக்கினான் என்றும், துழாய் மாலையை உடையான் என்றும், நீலமணி, காயாம்பூ முதலிய வற்றின் நிறத்தை ஒப்பான் என்றும், திருமாலிருஞ்சோலை முதலிய இடங்களில் இவன் வாழும் தெய்வமாக உள்ளான் என்றும், இவன் மார்பில் உள்ள மறு லட்சுமி என்றும் நாம் அறிகிறோம். இவையே அன்றி, இவன் பல தத்துவங்களுக் கும் நாதன் என்ற ஞானப்பொருளையும் இந்நூல் நமக்குத் தெரிவிக்கிறது. அன்றியும் பிரகலாத ஆழ்வானின் சரித் திரமும் இதில் விரிவாகக் கூறப்படுகிறது. ஆனால் கண்ண னது குழந்தைப் பருவத்தைக் குறித்து யாதும் காணப்பட வில்லை.

இந்நிலையிலே நமது நாட்டில் பக்திப் பெருவெள்ளம் கரை புரண்டோடுவதாயிற்று. இப் பிரவாகத்தில் முதல் முதல் மூழ்கி ஈடுபட்டவர்கள், பெரியாழ்வாரும் அவரது புத்திரியாராகிய ஆண்டாளும் ஆவர். முதல் மூன்று ஆழ் வார்களும் யோகத்தில் வல்லவர்கள் என்று கூறுவர். குலசேகர ஆழ்வார் ஸ்ரீராமனது வரலாற்றை அனுபவித்துப் பாடினார் என்று முன்னர்க் குறித்தேன். இதுபோலவே, பெரியாழ்வார் கண்ணனைக் குழந்தைக் கடவுளாகவும், ஆண்

டாள், அவனை யௌவனப் பருவத்தில் உள்ள நாயகனுகவும் பாடி மகிழ்ந்து பக்தியை வளம்படுத்தினுர்கள். பெரியாழ்வார் இடைச்சேரியில் கண்ணன் பிறந்தது தொடங்கியே அவனை வர்ணித்து, அவன்மீது அனைவரும் கனிந்து அன்பு கொள்ளும்படி செய்திருக்கின்றனர்.

வண்ண மாடங்கள் சூழ்திருக் கோட்டியூர்
கண்ணன் கேசவன் நம்பி பிறந்தினில்
எண்ணெய் சுண்ண மெதிரெதிர் தாவிடக்
கண்ணன் முற்றம் கலந்தள ருயிற்றே.

ஓடுவார் விழுவா ருகந்து ஆலிப்பார்
நாடுவார் நம்பிரா னெங்குற்ரு னென்பார்
பாடுவார்களும் பலபறை கொட்ட நின்று
ஆடுவார்களு மாயிற்ருய்ப் பாடியே.

கிடக்கில் தொட்டில் கிழிய உதைத்திடும்
எடுத்துக் கொள்ளில் மருங்கை யிறுத்திடும்
ஒடுக்கிப் புல்கி லுதரத்தே பாய்ந்திடும்
மிடுக்கி லாமையால் நான்மெலிந் தேன்நங்காய்.

இவ் இளம் பருவத்தில் அவனது அழகு, அவனைத் தாலாட்டுதல், அம்புலியை விளையாட வா என்று அவன் அழைத்தல், ஏதேனும் கேட்பவர்களுக்கு அவன் உட்கார்ந்து கொண்டு தலையை அசைத்தல், அவன் கைகொட்டிச் சிரித்தல், தட்டுண்டு தடுமாறி நடத்தல், தாயின் முதுகுப்புறத்தைக் கட்டிக்கொள்ளுதல், அவன் அப்பூச்சி காட்டி பயப்படுத்தல், அவன் தாய்ப்பால் குடித்தல், அவனுக்குக் காது குத்துதல், அவனை நீராட்டுதல், அவனது முடியை வாரும் போது காக்கையை அழைத்தல், அவன் ஆனிரைக்குப் பின் சென்று மேய்த்து வருவதற்காகக் கையில் கோல் கொடுத்தல், அவனுக்குப் பூச் சூட்டுதல், அவனுக்கு ரட்சா பந்தனம் செய்தல் முதலிய எல்லாம் இனிய அழகிய பாடல்களில்

கேட்போர் மனம் கனிந்துருகுமாறு இவ் ஆழ்வார் பாடியுள்ளார். அன்றியும், இளமையிலே காணப்படும் சேஷ்டைகளையும் பல வகையாக வகுத்துக்கொண்டு இவ் ஆழ்வார் நமக்கு விளக்குகிறார்.

இளமைப் பருவத்திலேயே தெய்வத் தன்மை காட்டி, கோவர்த்தன கிரி எடுத்தல் முதலிய அருஞ் செயல்களை இவன் செய்தமை நமக்கு உணர்த்தப்படுகிறது. கண்ணன் யௌவனப் பருவம் எய்துகிறான். ஆனிரை மேய்க்கப் போன இடத்தில் புல்லாங்குழல் எடுத்து ஊதி, அனைத்துயிரையும் பரவசப்படுத்திய அருஞ் செய்தி ஒரு பதிகத்தில் இசை இனிமை ததும்பக் கூறப்படுகிறது. பின்னர் இவன் கோபிகளோடு செய்த சிறு விளையாட்டுக்களும் சேஷ்டைகளும் வர்ணிக்கப்படுகின்றன. இவ்வாறெல்லாம் கண்ணபிரானது இளமைப் பருவம் நமது காட்சியில் புலப்பட்டு, நம்மை அன்பினால் குழைந்துருகச் செய்கின்றது. ஆண்டாளும் தனது பாசுரங்களின் ஆற்றலினாலேயே இவனை மணவாளனாகப் பெறுகின்றாள். நாமும் பக்தியின் பேரெல்லையை அடைகின்றோம். அதனுடைய இன்சுவைக் கனியின் தீஞ்சாற்றைப் பருகிக் களிப்புக் கொள்கின்றோம்.

பின்னர், பக்தி புரண்டோடிய நமது தமிழ் நாடு வறண்டு போய்விட்டது. வேறு பலவகையான பொருட் குவியல்கள் நிரம்பின. பின் கம்பன் தோன்றி 'படிகொண்ட கீர்த்தி இராமாயண மென்னும் பக்தி வெள்ளம்' மீண்டும் செழிப்புற்றுப் பெருக்கெடுத்து நாடெங்கும் பரவியோடச் செய்தனன். பின்பு நமது தேசிய கவி பாரதி வரும்வரை ஒரே வறட்சி நிலைதான்.

பாரதி கண்ணனுடைய பேரழகைக் கண்டான். அவனது சிறு சேஷ்டைகளுடைய இன்பத்தை உணர்ந்தான். அவனைப் பல லீலைகளிலும் பார்க்கலானான். அவற்றையெல்லாம் கண்ணன் பாட்டு என்ற இனிய செய்யுள் தொகுதியில் நாம் பாடி அனுபவிக்கலாம்.

# வடநாட்டில் கண்ணன்

கண்ணன் தமிழ்நாட்டில் புரிந்த திருவிளையாடல்களை முன்னர்க் கண்டோம். இனி வடநாட்டிற்குச் சென்று கால முறைப்படி அவன் லீலைகளை உணர முயலுவோம். 'கண்ணன்' என்ற பெயர் பிராகிருதச் சொல். அதற்கு உரிய வடமொழிச் சொல் 'கிருஷ்ணன்' என்பது. 'கண்ணன்' என்ற பிராகிருதப் பெயரை வைத்துக்கொண்டு கம்பன் இயற்றிய அருமையான செய்யுளை இங்கே ஞாபகப்படுத்திக் கொள்ளலாம்:

**யாதினும் உயர்ந்தோன் தன்னை யாவர்க்கும் கண்ணனென்றே**
**ஓதிய பெயர்க்குத் தானே உறுபொருள் உணர்த்தி விட்டான்.**

'கண்ணன்' என்பதைப் பிராகிருதம் என்று கொள்வதைக் காட்டிலும், 'யாவர்க்கும் கண் போன்றவன்' என்ற பொருளைக் கம்பன் போற்றுகின்றான் என்பது வெளிப்படை.

'கிருஷ்ணன்' என்ற பெயர் மிக மிகப் பண்டைக் காலத்து வடமொழி இலக்கியத்தில் அறியப்படாதது அன்று.

ரிக்வேதத்தில் (VIII. 74) ஒரு சிறு சுலோகத்தை இப் பெயருடையார் இயற்றியுள்ளார். இவரைக் கிருஷ்ண ஆங்கீரஸர் என்று ஒரு பிராம்மணம் கூறும். இது வேத காலத்தைச் சார்ந்தது.

சாந்தோக்கிய உபநிஷத்தில் (III. 17·6) கிருஷ்ணனை, 'தேவகி புத்திரன்' என்றும், கோர ஆங்கீரஸ என்ற முனிவரது மாணவன் என்றும் குறிக்கப்பட்டிருக்கிறது. இந்த உபநிஷத்தின் காலம் சுமார் கி. மு. 700 என்பர்.

மகா பாரதம் ஒரே காலத்தில் இயற்றப்பட்டது அன்று. அதன் முற்பகுதிகள் சுமார் கி. மு. 400-இல் இருந்து எழுதப்பட்டன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்ற

னர். இதில் கிருஷ்ணனைத் தெய்வமாகக் கொள்ளவில்லை; வீர புருஷனுகவே கொண்டிருக்கிருர்கள்.

வடமொழி வியாகரணம் இயற்றிய பாணினி முனிவர் (IV. 3·98-இல்) வாசுதேவனும் அர்ச்சுனனும் வணக்கத்திற்கு உரியர் என்று கூறியிருக்கிருர். ஆனுல், இந்த வணக்கத்திற்கு என்ன பொருள் என்பது அறியப்படவில்லை. பெரும்பாலும் க்ஷத்திரிய வீரர்களைத் தெய்வாம்சம் உடையவர்களாகக் கருதியதாகவே இருக்கலாம்.

சந்திரகுப்த மௌரியன் என்ற அரசன் காலத்தில் வந்த மேலை நாட்டுத் தூதுவராகிய மெகஸ்தனீஸ், மதுரை கிருஷ்ணபுரம் என்ற இரண்டு நகரங்களும் அடங்கிய 'சௌரசேன' என்ற நாட்டில், 'இராக்கிலிஸ்' வணங்கப் படுகிருர் என்று கூறுகிருர். இந்த 'இராக்கிலீ'ஸைக் கிருஷ்ணன் என்று ஆராய்ச்சியாளர் கொள்கின்றனர். மெகஸ்தனீஸ் இந்தியாவிற்கு வந்த காலம் கி. மு. 320.

கஸுண்டி என்ற இடத்தில் சுமார் கி. மு. 200-இல் எழுதிய ஒரு கல்வெட்டு இருக்கிறது. இதில் சங்கர்ஷண வாசுதேவர்களுக்கு உரிய கோயிலின் பிராகாரம் அமைத்ததைப் பற்றிக் கூறியிருக்கிறது.

சுமார் கி. மு. 180-இல் பெஸ் நகரில் ஒரு கல்வெட்டிருக்கிறது. இதில் வாசுதேவனை 'தேவதேவன்' என்றும், அந்தத் தெய்வத்திற்குத் தட்சசிலையில் உள்ள பாகவத எலிய டோரஸ் என்பவன் ஒரு கருடத்வஜம் அமைத்தான் என்றும் சொல்லப்பட்டிருக்கிறது.

சுமார் கி. மு. 200-இல் எழுதிய மகாபாரதப் பகுதி கிருஷ்ணனை 'அதிமானுஷ்ய வியக்தி' என்று கூறுகிறது. இன்றும் முற்றும் தெய்வத் தன்மை தோன்றியதாகக் காணப் படவில்லை.

சுமார் கி. மு. 150-இல் பதஞ்சலி, தமது மகா பாஷ்யத்தில், வாசுதேவனின் பக்தர்களைக் கூறுவதோடு அவன் 'பகவான்' என்றும், கேவலம் க்ஷத்திரிய வீரன்

அல்ல என்றும் கூறுகிருர். அன்றியும், கிருஷ்ணனைச் சங்கர்ஷணரோடு நெருங்கிய தொடர்புடையவராகக் கொண்டு, அவரது லீலைகளை அமைத்த நாடகங்கள் உள்ளன என்றும் குறிப்பிடுகிருர். இந்த நாடகங்கள் கலிபந்தத்தையும் கம்ச வதத்தையும் முக்கியமாக உணர்த்துகின்றன.

நாஞகாட் குகையில் உள்ள ஒரு கல்வெட்டு, சங்கர்ஷணரையும் வாசுதேவரையும் தொடர்புபடுத்திக் கூறுகிறது.

மகாபாரதத்தின் பிற்பகுதிகளும், அதர்வண வேதத்தைச் சேர்ந்த உபநிஷத்துக்களும், சில புராணங்களும் கிருஷ்ண வாசுதேவனைப் பரம்பொருளாகக் கூறுகின்றன.

கிருஷ்ணனைப் பற்றிய பழங்காலச் சான்றுகள் இத்தனையே உள்ளன. கிறிஸ்து பிறப்பதற்குச் சுமார் 1000 ஆண்டுகளுக்கு முன்னர், ஆரியர்கள் தங்கள் பூர்வ வாழ்வு இடத்தை விட்டு, கிழக்கே பிரயாணம் செய்து, சரஸ்வதி நதியைக் கடந்து, யமுனையும் கங்கையும் கூடுமிடத்திற்குக் கிழக்கே வந்து தம் புதிய வாழ்வைத் தொடங்கினர். இந்த இரு எல்லைகளுக்கும் இடையிலே குருக்ஷேத்திரம் என்ற புண்ணிய பூமி இருந்தது. இங்கேதான் குரு வம்சத்தினருக்கும், பாஞ்சால வம்சத்தினருக்கும் மகாபாரதம் எனும் பெரும் போர் நிகழ்ந்தது. இதுவே 'மகாபாரதம்' என்னும் இதிகாசத்திற்கு மூலமாக உள்ளது.

இந்த இதிகாசத்தில் உண்மை நிகழ்ச்சிகளையும், பூர்வ கதைகளையும் பிரித்து உணர்தல் அருமையாம். ஆனல், இந்த யுத்தத்தில் கலந்துகொண்டவர்களுடைய பெயர்கள் மிகப் பூர்விகக் காலத்தில் உள்ள இலக்கியங்களிலேயே காணப்படுகின்றன.

மகாபாரத இதிகாசத்தில் மிக முக்கியமான பாத்திரமாக விளங்குகிற கிருஷ்ணன், உண்மையிலேயே குருக்ஷேத்திரத்தில் போர் புரிந்த ஒரு க்ஷத்திரியனுக இருக்கலாம்.

இது உண்மையானால் இந்தப் பிரதேசத்தை அடுத்துள்ள இடம் ஒன்றில் பாரத யுத்த காலத்தில் கிருஷ்ணன் பிறந்தான் என்று கொள்ளலாம். அவனுடைய தந்தையின் பெயர் வாசுதேவர் ; அன்னையின் பெயர் தேவகி. அவனது அண்ணாவின் பெயர் பலராமர் அல்லது சங்கர்ஷணர் என்பது. அவன் யது வம்சத்தின் ஒரு கிளையாகிய 'விருஷ்ணி' அல்லது 'சாத்துவத்' குடும்பத்தில் பிறந்தவன். இக் குடும்பம் வடமதுரைப் பிரதேசத்தை அடுத்து வாழ்ந்து வந்தது என்றும் ஊகிக்கலாம். இந்நகரத்தைத்தான் சரித்திரமும் புராணக் கதைகளும் கிருஷ்ணனது வரலாற்றோடு இணைத்துக் கூறுகின்றன.

அந்தக் காலத்தில் சமயங்களும், சமயக் கொள்கைகளும் அந்தண வகுப்பினர் சிலரது கையில் அகப்பட்டுத் தத்தளித்தன.

இவர்களுக்கு எதிரிடையான கொள்கைகளைப் போதித்தவர்கள் க்ஷத்திரிய வீரர்கள். இவ்வீரர்கள், அந்தணர் அல்லாதாரிடத்தே தாம் கற்கவேண்டிய வித்தைகளைக் கற்று வந்தனர். உதாரணமாக, துரோணாச்சாரியிடத்தில் அர்ச்சுனன் முதலியோர் வில்வித்தை பயின்றனர். சமயத்தைப் போதித்து வந்த முனிவர்களிடத்தேயும் இவர்கள் சில காலம் உபதேசம் பெற்றுவந்தனர். சாந்தோக்கிய உபநிஷத்தில் கூறுவது இதுபோன்ற நிகழ்ச்சி என்றே கருதலாம். கோர ஆங்கீரஸர் என்னும் முனிவரிடத்தில் கிருஷ்ணன் பெற்ற தத்துவ உபதேசங்களை இங்கே குறிப்பிடுகின்றேன். ஆகவே, கிருஷ்ணன் தனது நண்பர்களுக்குக் குருக்ஷேத்திர யுத்தத்தில் உதவி புரிந்த க்ஷத்திரிய வீரனாகவும், முனிவர்களிடமிருந்து தத்துவ உபதேசம் பெற்ற மாணவனாகவும் நமக்குக் காட்சியளிக்கின்றான். கம்ச வதம் ஒருவேளை உண்மை நிகழ்ச்சியாகவும் இருக்கலாம்.

கிருஷ்ணவாசுதேவன் சூரிய வணக்கத்தைச் சாத்துவதர்களுக்கு உபதேசித்தான் என்று சொல்லப்படுகிறது. பின்

னர், கிருஷ்ணனே அவ்வணக்கத்திற்குரியவனாக மாறிவிடு கிறான். இதுபோன்ற வரலாறுகள் பௌத்த சரித்திரத்திலும் ஜைன சரித்திரத்திலும் நிரம்பக் காணப்படுகின்றன. இவ் விரு சமயத்தவரும் உண்மையில் ஒரு சில அந்தணர்களு டைய கொடுங்கோன்மையை வெறுத்து, உண்மை ஞானத்தை வேண்டி வெளியேறியவர்கள் தாம். ஆனால், வணங்குவதற்கு ஒரு கடவுள் இல்லாமல் அவர்களால் இருக்க முடியவில்லை. அந்தச் சூன்யமான இடத்தில் தங்கள் மத ஸ்தாபகர்களையே வைத்துப் பூஜித்து வந்தனர். இது போன்றதுதான் கிருஷ் ணனைச் சூரியனுக்குப் பதிலாக வணங்கிவந்ததும்.

கி. மு. நான்காம் நூற்றாண்டில் வாசுதேவ சமயம் நன்கு நிறுவப்பட்டிருந்தது. ஆனால், பரம்பொருளாக அவனை இன் னும் கொள்ளவில்லை. ஏனெனில், அவனை அர்ச்சுனனோடு ஒத்த நிலையிற் சேர்த்து வணக்கத்திற்கு உரியவன் என்று பாணினி கூறுகின்றார். இந்த வாசுதேவ சமயத்தின் முக்கிய ஸ்தானம் வடமதுரைப் பிரதேசமெனவே யூகித்தல் வேண் டும். கி. மு. 2-ஆம் நூற்றாண்டளவில் வாசுதேவனைத் தேவ தேவனாகக் கொண்டனர். பதஞ்சலி தமது பாஷ்யத்தில் இதைத் தெளிவாக்குகின்றார். ஆனால், கிருஷ்ணனை இவ்வாறு பரம்பொருளாகக் கொள்வதை அக்காலத்திலிருந்த அனைவ ரும் ஒப்புக்கொண்டிருந்தனர் என்று நினைக்க முடியவில்லை. சிவபெருமானுக்கு அடுத்த ஸ்தானம்தான் அவனுக்கு உரியது என்று அவனை இழித்துரைக்கவும் சிலர் தலைப்பட்டனர். இவ் வாறு தலைப்பட்டவர்களில் முக்கியமானவர்கள் பிராம்மணர் கள் என்று சிலர் கூறுகின்றனர். "ஜாதிக் கட்டுப்பாடுகள் ஒழிந்துவிடும்; வேதங்கள் மறக்கப்பட்டு ஒழியும்; ஞான யோகம், பக்தியோகத்தால் கபளீகரிக்கப்படும்" என்று இவர்கள் கருதினார்கள். இந்தக் காலத்தில்தான் அவதாரம் என்ற கொள்கை ஏற்பட்டிருக்கவேண்டும் என்று ஆராய்ச்சி யாளர்கள் கூறுகின்றார்கள்.

# அவதாரங்களும் தென்னாட்டுத் தொடர்பும்

சைவ சமயம் பற்றிய அளவில் அவதாரம் என்பதே இல்லை. பிற்காலத்தார் சிலர், தம்மைச் சுப்பிரமணியம் முதலிய கடவுளர்களோடு ஒப்பிட்டு, அவர்களுக்குத் தாங்கள் சமம் என்று கண்டு, அபரசுப்பிரமண்யம் என்பது முதலாகத் தம்மைத் தாமே பெயரிட்டு அழைத்துக்கொண்டனர். இது அவதாரம் அன்று என்பதை எளிதில் உணரலாம்.

திருமால் (அதாவது: வைஷ்ணவ) சமயத்தவர்கள்தான் அவதாரத்தை உடன்பட்டவர்கள். தங்களுக்குரிய கடவுளாகிய திருமால்தாமே உலகின் ரட்சணத்தின் பொருட்டுப் பலவேறு அவதாரங்கள் எடுத்ததாக இவர்கள் கூறுவர். பிற்காலத்தவர்கள் பத்து அவதாரங்கள் உள்ளன எனக் கணக்கிட்டிருக்கின்றனர்.

மீனே ஆமை வராக நரசிங்கம்
வாமனன் பரசுராமன் இராமன்
பலதேவன் வாசுதேவன் வருகற்கி என்று
ஆகும் ஈரைந்தும் அரி அவதாரம்

என்பது திவாகரம்.

தேவுடைய மீனமாய், ஆமையாய்
ஏனம்அரி குறளும் ஆகி
மூவுருவி லிராமனாய்க் கண்ணனாய்க்
கற்கியாய் முடிப்பான் கோயில்

என்று பெரியாழ்வாரும் அருளிச் செய்திருக்கின்றனர். இவ் அவதாரங்கள் ஒவ்வொன்றின் கதைகளை நோக்கினால், இவை எல்லாம் உலக ரட்சணத்தின் பொருட்டு நிகழ்ந்தன என்பது

தெளிவாம். இவ் அவதாரங்களுள் மிக முக்கியமானவை இராமாவதாரமும் கிருஷ்ணுவதாரமும் என்று சொல்ல வேண்டா. இராமன் ராமாயணத்திற்குக் கதாநாயகன். கிருஷ்ணன் பாரத யுத்தத்திற்கு அடிப்படையாய் இருந்து, அதனை முற்றும் நிகழ்வித்தவன். இருவரும் வடநாட்டிலும் தென்னுட்டிலும் போற்றி வணங்கும் தெய்வங்களாகி விட்டனர்.

இவர்களைப் பற்றிய சரித்திரங்கள் வளர்ந்துகொண்டே வந்தன. ஒவ்வொரு நாட்டிலும் அங்கங்கே முக்கியமாக வழங்கிய வரலாறுகள், இவர்களைப் பற்றிய இதிகாசத்தில் சேர்ந்துவிட்டன. ஆகவே, இராமன் நமது பரத கண்டம் முழுமைக்கும் உரிய ஓர் சம்பூர்ண ராமனுக உருவெடுத்து விளங்குகின்ருன்.

இதுபோலவே கிருஷ்ண சரிதமும் வளர்ந்து பெருகி வந்தது. இவனும் இராமனைப் போலவே அகில இந்தியாவுக்கும் உரிய பழம்பெரும் தெய்வமாக முதிர்ந்துவிட்டான்.

இவ்வரலாறுகள், வேறு சில காரணங்களாலும் மிகுந்து கொண்டே வந்தன. வைதிக சமயம் ஒரே சமயமாக நம்மால் கருதப்பட்டபோதிலும், அதிலே பல உட்கிளைகள் உள்ளன. சைவம், வைஷ்ணவம் முதலியவற்றையே இங்கே குறிக்கிறேன். ஒவ்வொரு கிளைச் சமயமும், தன் தன் தெய்வமே பரம்பொருள் என்று பாவித்தது. ஆகவே, ஏதேனும் ஒரு தெய்வத்திற்கு இழுக்குத் தருவதாகப் புராணங்களில் ஒரு கதை காணப்படுமானுல், அந்த இழுக்கை நீக்குவதற்கு வேறு கதைகள் புனையப்பட்டன. உதாரணமாக, திருமால் பிரகலாதனின் பொருட்டுத் தூணினும் உளனுய் நரசிம்ம வடிவத்தில் தோன்றினுன். இது தோன்றிய தோற்றத்தைக் கம்பன் மிகத் திறம்பட வர்ணிக்கிருன்.

நகைதிறந் திலங்கப் பொங்கி நன்றுநன் றென்ன நக்கு
விசைபிறந் துருமு வீழ்ந்த தென்னவோர் தூணின் வென்றி

இசைதிறந் தமர்ந்த கையால் எற்றினன் எற்ற லோடும்
திசைதிறந் தண்டங் கீறிச் சிரித்தது செங்கட் சீயம்

என்பது அந்த வர்ணனை. இவ்வாறு தோன்றிய நரசிங்கம், இரணியனது மார்பைப் பிளந்து ரத்தத்தைக் குடித்து, ரத்த வெறியால் மற்றும் உலகத்தை எல்லாம் அழிப்பதற்கு ஒருப் பட்டு நின்றது. அச்சமயத்தில் தேவர்கள் லட்சுமிதேவியை வேண்ட, அவள் நம் சிம்மத்தின் அருகில் சென்றதும் ரத்த வெறி தீர்ந்தது என்று வைஷ்ணவர்கள் கூறுவர். ஆனால், சைவ சமயத்தைச் சார்ந்தவர்கள், தேவர்கள் எல்லோரும் சிவபிரானிடம் சென்று முறையிட, அவர் சரப வடிவில் வந்து, நரசிம்மத்தின் கொட்டத்தை அடக்கினர் என்று கூறுவர். 'சரப புராணம்' என்று ஒரு புராணமும் தமிழில் உண்டு.

இங்ஙனமே கிளைச் சமயங்களின் விரோத மனப்பான்மையால் கதைகள் வளர்ந்துகொண்டே சென்றன.

கிளைச் சமயங்களைத் தவிர, புறச் சமயங்களும் இத்தகைய வரலாறுகள் பெருகுவதற்குக் காரணமாய் இருந்தன. உதாரணமாக, பௌத்த சமயத்தையும் ஜைன சமயத்தையும் கூறலாம். பௌத்தர்கள் ராமனைப் பற்றியும் தசரதரைப் பற்றியும் புராணங்கள் எழுதி, அவர்கள் இருவரும் தங்கள் போதிசத்துவர்கள் ஆவார்கள் என்று எழுதி வைத்தனர். இச்சரிதங்கள், 'தசரத ஜாதகம்', 'இராம ஜாதகம்' என்ற ஜாதகக் கதைகளில் உள்ளன.

ஜைனர்களும் பின்வாங்கவில்லை. அவர்கள் 'பௌம சரிதம்' என்ற நூலில், ராமாயணம் முழுவதையும் அமைத்திருக்கின்றனர். இதில் இராமன் ஒரு ஜைன அரசனாக இருந்தான் என்று கூறப்படுகிறது. கண்ணன் என்பது பிராகிருதச் சொல் என்றேன். இந்த ஜைனர்கள் கண்ணன் சரித்திரத்தில் பல பகுதிகளையும் தங்களுக்கு உரியனவாகக் கொண்டு, கிருஷ்ணனை ஒரு ஜைன முனிவனாகவும் ஜைன அரசனாகவும் கொண்டு கதை வளர்த்தனர்.

இவ்வாறெல்லாம் தெய்வ சரிதங்கள் வளர்ந்து, மேலும் மேலும் பெருகிக்கொண்டே போயின. அகச் சமயம், புறச் சமயம் என்பவற்றின் தெய்வ வரலாறுகள் தவிர, இந்தச் சமயங்களுக்குரிய பக்தி நெறியும், வரலாறுகளும் பெருகின. இத்தெய்வங்கள் அடியார்களுக்கு அருள்புரிந்த சரித்திரங்கள், இவர்கள் அடியார் பொருட்டுச் செய்துள்ள அற்புதங்கள், அடியார்கள் செய்துள்ள அற்புதங்கள் இவை எல்லாம் இவ்வித பக்தியின் விளைவே.

தெய்வ வரலாறுகளில் வடநாட்டில் கிருஷ்ணன்-ராதை இவர்கள் இடையில் உள்ள காதற் கதைகளும் சிறப்பாகக் கூறத்தக்கன. இவ்விருவரும் நிகழ்த்திய நாட்டியம் 'ராசக் கிரீடை' என்று சொல்வது. இந்நாட்டியத்தில் அமைந்த காதற் பாட்டுக்கள் மகாராஷ்டிர மொழியில் மிகவும் பிரசித்தமாய் உள்ளவை. 'ராசக் கிரீடை'யின் அநுபவத்தில் மீராபாய் சிறந்து விளங்கிய செய்தி, இன்றும் நமது மனத்தை உருக்குகிறது. பக்தியின் ஓர் அம்சமாக உள்ள இவ்வகைப் பாட்டுக்கள் நாடெங்கும் பரந்தன.

தென்னாட்டிலும் இதனோடு ஒத்த சரித்திரம் ஒன்று தோன்றிவிட்டது. இங்கே கண்ணனின் காதலுக்குரியவளாக விளங்கியது நப்பின்னை பிராட்டி. இவருடைய சரித்திரங்கள் பொதுவாக நன்கு அறியப்படவில்லை என்றுதான் சொல்ல வேண்டும். இந்தப் பெயரும் வடநாட்டில் கிடையாது. பின்னை என்ற பெயர்க் காரணமும் அறியக்கூடவில்லை. பின்னைப் பிராட்டியாரைக் குறித்து நம்மாழ்வார்,

> **பின்னைகொல்? நிலமா மகள்கொல்?**
> **திருமகள்கொல்? பிறந்திட்டாள்**

என்று பாடியுள்ளார்.

இந்தச் சரித்திரம் தவிர, ஸ்ரீ ஆண்டாள் சரித்திரமும் நாம் இங்கே கவனிக்கத் தக்கது. வடநாட்டில் ராதை என்ற காதலியின் கதையோடு மீராபாய் என்ற சரித்திரம் அறிந்த

ஒரு பெண்ணின் கதையும் சேர்ந்து வருவதுபோல, நப் பின்னையின் சரித்திரத்தோடு உண்மையில் வாழ்ந்த ஆண் டாளின் 'சரித்திரமும்' சேர்ந்துள்ளது என நாம் அறிந்து மகிழலாம்.

ஆண்டாள் மிக அருமையான காதற் பாடல்களைக் கண் ணன்மீது பாடியிருக்கிறார். ஆனால், இக் காதற் கவிதைகளைத் தொடங்கியவர் பெரியாழ்வார் என்று கூறுதல் வேண்டும். இவ்விருவருந்தாம் கண்ணபிரானின் சரித்திரம் தமிழ்நாட்டில் பரக்க வழங்குவதற்கும், அவன்மீது உள்ள பக்தி சிறந்து ஓங்குவதற்கும் காரணமாய் உள்ளவர்கள்.

பின்வரும் பாடல்களைப் பாடி நோக்குக :

பாலைக் கறந்தடுப் பேறவைத்துப்
  பல்வளையாள் என்மகள் இருப்ப
மேலை அகத்தே நெருப்பு வேண்டிச்
  சென்று இறைப் பொழுதங்கே பேசிநின்றேன்
சாலக் கிராமம் உடைய நம்பி
  சாய்த்துப் பருகிட்டுப் போந்துநின்றான்;
ஆலைக் கரும்பின் மொழியனைய
  அசோதை நங்காய், உன்மகனைக் கூவாய்

என்பது பெரியாழ்வார் பாசுரம்.

நீரி லேநின் றயர்கின்றோம் நீதி யல்லா தன்செய்தாய்;
ஊரகம் சாலவும் சேய்த்தால் ஊழி யெல்லாம் உணர்வானே
ஆர்வ முனக்கே உடையோம் அம்மனை மார்காணில் ஒட்டார்
போர விடாயெங்கள் பட்டைப் பூங்குருந் தேறியி ராதே

என்பது ஆண்டாள் பாசுரம். இவைகளைப் படிக்குந்தோறும் பக்தியும் காதலும் ஒன்றுபட்டு நம் மனத்தை அள்ளு கின்றன.

# ராதாவும் கிருஷ்ணனும்

வடநாட்டுக் கிருஷ்ண சரித்திரங்களிலே பிரபலமாய் விளங்கும் ராதாவைக் குறித்துத் தென்னாட்டில் ஒன்றும் அறியமாட்டோம். இச்சொல்லுக்குச் செல்வம் அல்லது வெற்றி என்பது பொருள். இப்பெயர் கோபியர்களில் ஒருத்திக்கு வழங்கிவந்தது. இவள் நந்தகோபாலனுக்குத் தங்கை முறையினள். எனவே, இவளைப் *'பின்னை' என்றும் 'நப்பின்னை' என்றும் தமிழ் மக்கள் வழங்கினர். இவளைப் பற்றித்தான்,

> துப்புடையாயர்கள் தம்சொல் வழுவா தொருகால்
> தூய கருங்குழல் நற்றேகை மயிலனைய
> நப்பினை தன்திறமா நல்விடை யேழவிய
> நல்ல திறலுடைய நாதனு மானவனே

என்றார் பெரியாழ்வார்.

இவளைத்தான் கிருஷ்ணன் மிக மிக மோகித்து, இவளோடு அன்பு லீலைகள் புரிந்துவந்தான் என்று சொல்வார்கள். இந்த லீலைகளைக் குறித்து ஜயதேவர் என்ற வடமொழி ஆசிரியர், 'கீதகோவிந்தம்' என்ற அழகிய, இனிய செய்யுளைப் பாடியுள்ளார். இசை இனிமையிலும், தாள அமைப்பிலும், சொற்களின் இனிமையிலும் இதை வெல்லக்கூடிய நூல்கள் மிகச் சிலவே உள்ளன. 12-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் இது இயற்றப்பட்டது என்பர். இதற்குத் தமிழில் ஓர் அழகிய மொழிபெயர்ப்பு வருமாயின் அது மிகவும் போற்றத்தக்கதா யிருக்கும். கிருஷ்ணனை எப்படி விஷ்ணுவின் அவதாரம் என்று கொண்டிருக்கிறோமோ,

---

*பின்னை - பின் பிறந்தவள்.

அதேபோல ராதையையும் லட்சுமியின் அவதாரம் என்று கூறுவோர் உண்டு.

வேறு ஒரு விஷயமும் இங்குக் கூறத்தக்கது. ராதா-கிருஷ்ண லீலைகள் சாதாரணமாகக் கருதும் சரீர சுகத்தைப் பற்றியது அன்று என்பர். இறைவனுக்கும் உயிர்களுக்கும் உரிய தொடர்பை இச்சரிதம் வெளியிடுகின்றது என உட்கிடையான பொருள் ஒன்றைக் கற்பிப்பார்கள். இதனை முற்றும் கற்பிதம் என்று சொல்லுவதற்கும் இல்லை. அதற்கு உரிய குறிப்புக்களும் ஏகதேசமாக அங்கங்கே காணப்படுகின்றன.

நமக்குப் புலனாவதெல்லாம் வெளிப்படையான பொருள் தான். கோபிகா ஸ்திரீகள் பலரையும் கிருஷ்ணன் தனது காதலிகளாகக் கொண்டு, வடமதுரையை அடுத்துள்ள முல்லைக் காடுகளில் திரிந்துவந்தான் என்று சரித்திரம் கூறும். இக்காதலுக்கு வரம்பு முறையும்கூட இல்லை என்றே தோன்றுகிறது. கிருஷ்ணனுக்கு அத்தைமுறை ராதை என்று ஒரு சரித்திரம் கூறும். இந்தச் சரித்திரமும் இங்கே நாம் அறிதற்குரியது. இச்சரித்திரம் முழுவதும் ‘பாகவத புராண’த்தில் விரிவாகக் கூறப்படுகிறது. நமது பாரத நாட்டிலே பிருந்தாவனம் என ஓர் இடம் இருக்கிறது. அது கிருஷ்ணனுக்குப் பூலோகத்தில் மிக உகந்த இடமாக இருந்தது. அதில் அனுபவிக்கத் தக்க இன்பங்களுக்கு எல்லையே இல்லை. அது சுவர்க்கத்தைக் காட்டிலும் பெரிது. அதன் அழகு சொல்லி முடியாதது. அந்த இடத்திலே எத்தனையோ இடையர் குலங்கள் வசித்துவந்தன. இடையர் குலங்களுக்கெல்லாம் தலைவன் நந்தன் என்பவன். இவன் தான் கிருஷ்ணனைத் தனது வளர்ப்புப் பிள்ளையாகக் கொண்டு வளர்த்துவந்தவன். பிருந்தாவனத்திற்கு வடக்கே வடமதுரை இருந்தது. அதை உக்கிரசேனன் என்ற அரசன் ஆண்டுவந்தான். அவனுக்குக் கம்சன் என்ற புத்திரன் இருந்தான். இந்தப் புத்திரன் தனது நாட்டினின்றும் தன்

தந்தையை விரட்டிவிட்டுச் சிம்மாசனத்தில் வலிந்து ஏறிக் கொடுங்கோன்மை புரிந்துவந்தான். அவன் செய்து வந்த அநீதிகளுக்கும், தீய செயல்களுக்கும் கணக்கே இல்லை.

பூதேவியால் இந்தக் கொடுங்கோன்மை சகிக்க முடியவில்லை. பசு வடிவம் தாங்கி, நான்முகனுகிய பிரம்மாவினிடத்தில் சென்று வணங்கி, தனது குறைகளைக் கூறினுள். "எல்லாவற்றையும் படைத்த தெய்வமே! நான் இருப்பது உன்னுல்தான். ஆகவே, என்னைக் காப்பாற்றும் பொறுப்பு உன்னைச் சார்ந்தது. கம்சன் என்ற அரசன் பாபச் செயல்களில் முழுதும் ஈடுபட்டு, என்னை மிக மிக வருத்தி நைவிக்கிறுன். இந்தக் கொடுங்கோன்மையை இனி என்னுல் பொறுக்க முடியாது. இவனைப் படைத்தது நீதான். ஆகவே, இவனை அடக்குவதையும் நீதான் செய்துவிட வேண்டும்" என்று முறையிட்டாள்.

பிரம்மாவிற்கு மிகவும் கோபம் வந்தது. பூதேவியோடு கூடச் சிவபெருமானிடத்திற்குச் சென்றுர். தம்மிடம் வந்த பூதேவியிடமிருந்து தாம் கேள்வியுற்ற கொடூரச் செயல்களைப் பற்றிக் கூறினுர். பின், சிவனும் ஏனை இருவரும் சேர்ந்து பரம்பொருளாகிய விஷ்ணுவிடம் சென்றுர்கள். அவனை வணங்கிய பின், பசு வடிவில் வந்த பூதேவி பின்வருமாறு கூறத் தொடங்கினுள்: "தேவ தேவனே! நீ எங்கள் பிரார்த்தனைகளை எல்லாம் அன்போடு கேட்டு, எப்பொழுதும் அருள்புரிகின்றுய். என்னுடைய துக்கத்தை உன்பாற் சொல்லி, உன்னிடம் இருந்து ரக்ஷை பெறும்பொருட்டு இங்கு வந்துள்ளேன். மிகக் கொடியோனுன கம்சன், இதுவரை கண்டும் கேட்டுமிராத கொடூரச் செயல்களைச் செய்துவருகிறுன். அநீதியை நீக்கி, நீதியை நிலைநிறுத்திச் சிஷ்ட பரிபாலனம் செய்யும்படி, உனது திருவடிகளில் தலைவைத்து வணங்குகிறேன்."

இதைக் கேட்டதும் விஷ்ணு பிரம்மாவை நோக்கி, "கம்சனுக்கு ஏதாவது தனிப்பட்ட வரம் அளித்திருக்கிறீரா?"

என்று கேட்டார். பிரம்மா, ''நான் அளித்த வரம் இது: கம்சனை அவனது மருகன் அல்லாமல் வேறு ஒருவனும் வதைக்க முடியாது. ஆதலால், தேவரீர் அவனது தங்கை யாகிய தேவகியின் வயிற்றில் பிறக்க வேண்டும். இதைத் தவிர வேறு வழி இல்லை'' என்றார். எனவே, பிரம்மாவின் கூற்றுப்படி, விஷ்ணு தேவகியின் புத்திரனாக அவதாரம் செய்தார். இந்தத் தேவகி, வாசுதேவன் என்பவனது மனைவி. கம்சன் இவற்றை எல்லாம் அறிந்து எங்கும் ஒற்றர் களை நியமித்தான். வாசுதேவனையும் தேவகியையும் விலங் கிட்டுச் சிறையிலிட்டான். ஆனால், வெகு சீக்கிரத்திலேயே ஓர் அஷ்டமியில் கிருஷ்ணன் பிறந்தான். இதைத் தெரிந்த வுடன், இந்தக் குழந்தையைக் கொன்றுவிடுவது என்று கம்சன் தீர்மானித்துக்கொண்டான். ஆனால், தேவகி காவ லாட்களின் கடுமைக்குத் தப்பி, கோகுலம் என்ற நகரத் திற்குக் குழந்தையை அனுப்பிவிட்டாள்.

அதே காலத்தில், நந்தனின் மனைவியான யசோதைக்கு ஒரு பெண்குழந்தை பிறந்தது. கம்சனது நோக்கத்தைத் தவிர்ப்பதற்காக இந்த இரண்டு குழந்தைகளும் மாற்றப் பட்டன. யசோதைக்குத் தான் பெற்ற குழந்தை ஆணா பெண்ணா என்பது நிச்சயம் இல்லாமல் இருந்தது. ஆகவே, அவளுக்குக் குழந்தைகளை மாற்றிவிட்டது தெரியாது. கிருஷ்ணனைத் தான் பெற்றெடுத்த மகனாகவே பாவித்தாள்.

கம்சன் தன் தங்கை பிரசவித்தாள் என்று தெரிந்ததும், குழந்தையைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டான். ஆனால், குழந்தையோ வெகு தூரத்தில் நந்தன் வீட்டில் சௌக்கிய மாக வளர்ந்துவந்தது. கம்சன் தன் கோபத்தைக் கிருஷ்ண னுக்குப் பதிலாக மாற்றப்பட்ட பெண்குழந்தையிடத்தில் தீர்த்துக்கொள்ள நினைத்தான். இந்தக் குழந்தையும் தெய் வாம்சம் பொருந்தியது. இந்தக் குழந்தையிடம் 'பத்திர காளி'யின் அம்சம் இருந்தது என்பர்.

குழந்தைப் பருவத்தில், பருவத்திற்கேற்ற பலவகையான விளையாட்டுக்களைக் கிருஷ்ணன் செய்துவந்தான். பொதுப்பட அவன் செய்துவந்தது, பால், வெண்ணெய் முதலியவைகளைத் திருடித் தன் தோழிப் பெண்களோடு பகிர்ந்துகொள்வது. இவ்வாறாக, முல்லை நில வாழ்க்கையை அவன் வாழ்ந்துவந்தான். வேய்ங்குழல் ஊதுவதும் அவனுடைய முக்கியத் தொழிலாக இருந்தது.

மணப்பருவம் அடைந்ததும், எல்லையற்ற இன்பக் கேளிக்கையிலேயே அவன் பொழுதுபோக்கினான். இந்தக் கேளிக்கையில் உறவு முறைகூட அவனைத் தடைப்படுத்தவில்லை என்று கூறுவர். பெண்களை வலிந்து எடுத்துக் கொண்டு செல்வதும், அவர்களைத் தனக்குரிய பெண்களாக வைத்து அவர்களோடு கொஞ்சி லீலைகள் புரிவதும்தான் அவன் மேற்கொண்ட செயல்கள்.

மின்னொத்த நுண்ணிடையாளைக் கொண்டு
வீங்கிருள்வாய் என்தன் வீதியூடே
பொன்னொத்த வாடைக்குக் கூடலிட்டுப்
போகின்றபோது நான் கண்டுநின்றேன்
கண்ணுற் றவளை நீ கண்ணாலிட்டுக்
கைவிளிக்கின்றதும் கண்டே நின்றேன்
என்னுக்கு அவளைவிட்டு இங்கு வந்தாய் ?
இன்னும் அங்கே நட நம்பி! நீயே

என்று குலசேகர ஆழ்வார் பாடுவதை இங்கே படித்து நாம் இன்புறலாம்.

இதன் இடையிலே தனது மாமனாகிய கம்சன்மீது போர் தொடுத்தான். அவனை வென்று கொன்று அரசியலை உக்கிர சேனரிடம் ஒப்படைத்தான்.

கோபியரோடு லீலை புரிந்தது காணாது என்று, திருமணம் செய்துகொள்ள வேண்டும் என்றும் இச்சைப் பட்டான். இதன்பொருட்டு ருக்மிணி முதலிய பல பெண்

களைப் பிடித்துக்கொண்டு வந்தான். இப் பத்தினியர்களே பதினாயிரம் பேர் இருந்தார்களாம்! அவனுடைய சந்ததிகளுக்கு எல்லையுண்டா? போர் முயற்சியிலும் அவன் குறைந்தவனாகக் காணப்படவில்லை. பாணாசுரன் முதலியோரைப் போரில் எதிர்த்தான். பாணாசுரனின் புத்திரியாகிய உஷா, கிருஷ்ணனுடைய பௌத்திரனான அநிருத்தனைக் காதலித்து இருவருக்கும் களவொழுக்கம் நிகழ்ந்த காலத்து, பாணாசுரன் இதனையறிந்து, அநிருத்தனைச் சிறையிலிடுவித்தான். கிருஷ்ணன் சிவபிரான் முதலியோர் பாணாசுரனோடு மிக நீண்ட காலமாகப் போர் புரிந்ததன் பயனாக அநிருத்தனுக்குச் சிறைமீட்சி ஏற்பட்டது. பின்பு காதலர்களுக்குள் திருமணம் நிகழ்ந்தது. இப்போர்களுக்குப் பின்னர் சமுத்திரத்தினிடையில் துவாரகை என்ற நகரைக் கட்டித் தன் பெரிய குடும்பத்தை அங்கே ஸ்தாபித்தான். அவனது குழந்தைகள் எல்லாரும் அவன் கண் முன்னாலேயே ஒவ்வொருவராக இறந்தனர். அவனும் ஒரு சாபத்தினால் ஒரு வேட்டுவனுடைய அம்பு பட்டு இறந்தான்.

கிருஷ்ணன் சரித்திரம்போல் நமது மனத்தைக் கவரக்கூடிய வேறு தெய்வ சரித்திரம் இல்லை. ஒருவேளை ஆறுமுகக் கடவுளின் சரித்திரத்தைத்தான் சொல்லலாம். நாம் இன்று அவனைத் தெய்வமாக வழிபடுகிறோம் என்றால், அவனிடம் தெய்வத் தன்மை முற்றிலும் விளங்குகிறது. அவனிடம் உள்ள குறைகள் மக்களினத்திற்குரிய குறைகள். இக் குறைகளே நாம் அவனை அன்பு செய்யும்படித் தூண்டுகின்றன. மகாபாரதத்தில் அர்ச்சுனனுக்குக் கீதையை உபதேசித்தான் என்ற சரித்திரம் உண்டு. இந்தக் கீதைதான் 'பகவத்கீதை' என்று பிரசித்தமாய் விளங்குவது. இக் கீதையைப் போற்றாத மக்கள் இல்லை. இதைப்பற்றி ஆழ்வார்கள் பாசுரங்களில் யாது ஒரு குறிப்பும் கிடையாது என்பது இங்கே மனங்கொள்ளத் தக்கது.

# தமிழ்மொழிப் பற்றும் பிற மொழி வெறுப்பும்

நமது தேசத்தில் மொழிப் பிரச்னைகள் நாளுக்கு நாள் வலுவடைந்து பலராலும் விவாதிக்கப்பட்டு வருகின்றன. இப் பிரச்னைகளுக்கெல்லாம் ஆதாரமாய் நிற்பது தாய்மொழிப் பற்று. காலம், இடம் முதலிய எல்லைகளின்றி, எல்லாக் காலங்களிலும், எல்லா இடங்களிலும் இம் மொழிப்பற்று வெளியாகி வந்துள்ளது. இது புலப்படும் நெறிகளும் எத்தனையோ வகையாகும்.

ஒவ்வொருவனும் தனது தாய்மொழியே உலகிற் சிறந்தது என்று நினைக்கிறான். வடமொழி தனக்கு உரியதாகும் எனக் கருதும் ஓர் இனத்தவன், அதனைத் 'தேவபாஷை' என அழைக்கிறான். தான் இங்ஙனம் அழைப்பது மட்டுமின்றி, அம்மொழியின் இயல்போடு யாதொரு தொடர்புமற்ற 'தமிழ்மொழியைப் பேசும் இனத்தவனும் அதனை ஒப்புக் கொள்ள வேண்டும்' என்கிறான். தமிழனும் தனது தாய் மொழி 'வடமொழி'யோடு ஒத்த பெருமையுடையதாக இறைவனால் படைக்கப்பட்டதெனக் கூறுகிறான்.

விடை யுகைத்தவன் பாணினிக் கிலக்கண மேனாள்
வட மொழிக்குரைத் தாங்கியல் மலயமா முனிக்குத்
திட முறுத்தியம் மொழிக்கெதி ராக்கிய தென்சொல்

என்பது திருவிளையாடற் புராணம். வடமொழியோடு ஒப்பிடுதலை விரும்பாத தற்காலத்தே இறைவனைப்போல எக் காலமும் அழிவின்றியுள்ளது கன்னித் தமிழ் என்ற கருத்துப் பிறந்தது.

பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்

க்ன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே

என்றனர் பேராசிரியர் சுந்தரம் பிள்ளை. சிலர் தமிழ்தான் இயற்கை மொழி என்பர். கருத்தளவில் நிற்கும் இந்நிலைமை மாறித் தற்பொழுது காரிய அளவிற்கு வந்துவிட்டது. 'தமிழனாய்ப் பிறந்தவனுக்குத் தமிழ்தான் மூச்சு; அவன் உயிர்ப்பது தமிழ்; அவன் நினைப்பது தமிழில்; எழுதுவது தமிழில். தமிழ் பேசும் இனத்தவரிடையேதான் எளிதாக மூச்சு விட்டு வாழமுடியும்' என்று இவ்வாறான உணர்ச்சியோடு செயலில் இறங்கவும் தமிழ் மக்கள் முற்பட்டுள்ளனர்.

இச்செயல் பெரும்பாலும் பிறமொழி மீதும், பிறமொழி பேசுவோர் மீதும் வெறுப்பாக முற்றிவிட்டது. தமிழ்மொழி இலக்கண வரம்புடையது; பிற மொழிகளிற் சில இலக்கண வரம்பு அற்றவையெனத் திருவிளையாடற் புராண ஆசிரியர் கூறினர். ஆரியர்கள் பிற மொழி பேசும் மக்களை 'மிலேச்சர்' என்று இகழ்ந்தனர். இந்தச் சொல்லுக்குத் 'திருந்தாத மொழியைப் பேசுபவர்' என்று பொருள். வடமொழி திருந்துவதற்கு முன்னிருந்த மூலமொழிக்குப் 'பிராகிருதம்' என்று பெயரிட்டனர். இதற்கு அநாகரிக மொழி என்று பொருள். ஒரு பிராகிருத மொழியைப் பைசாச மொழி என்ற பெயரால் வழங்கினர். தமிழையும் சிறிது இகழ்ச்சியோடு வழங்கியும் குறிப்பிட்டும் வந்தனர் என்று கருத இடம் உண்டு. தமிழ் மக்களும் பின்வாங்கவில்லை. 'ஆரியர்'*

*ஆரியரை அவ்வாறு கூறுதல் தகாதென்று கருதி, சூடாமணி நிகண்டினைப் பிரதி செய்தோர் ஆரியர் என்றதனை அநாரியர் என்று திருத்தி விட்டனர். திவாகர நிகண்டைப் பதிப்பித்தவர் இச் சூத்திரத்தையே ஒழித்துவிட்டார். மிகப் பழைய ஏட்டுச் சுவடிகளில் இது காணப்படுகிறது. நகைச்சுவைக்கு உதாரணமாக 'ஆரியர் கூறும்' தமிழ்ப் பேச்சைச் செயிற்றியனார் என்ற ஆசிரியர் தந்துள்ளனர்.

என்ற சொல்லுக்கே மிலேச்சர் என்று தமிழ் நிகண்டுகள் பொருள் கூறுகின்றன.

தெலுங்கர் தமது மொழியைத் 'தெளிந்த தேன்' (தேட) என்றும், தமிழ்மொழியை அரவம் (பொருள் அற்ற ஒலி) என்றதனோடு அமையாது நீர்ப்பசையற்ற பாலைநிலம் (அத்வாநமு) என்றும் குறிப்பித்தனர். வடுகர் முதலியோரை நெருங்குதல் கூடாதென்று ஒரு பழைய செய்யுள் கூறுகிறது:

வடுக ரருவாளர் வான்கரு நாடர்
சுடுகாடு பேயருமை என்றிவை யாரும்
குறுகார் அறிவுடையார்.

பிற தேசங்களிலும் இது போன்ற சுயமொழிப் பற்றும் அந்நியமொழி வெறுப்பும் காணப்படுகின்றன. கிரேக்கர்கள் பிற மொழி பேசும் மக்களைப் *"பார்பெராய்" (*Barbaroi*) என்று குறித்தனர். சீன மக்கள் தெற்குச் சீனத்தில் வாழ்ந்துவந்த சில வகையினரைத் 'தென் மிலேச்சர்கள்', 'அப்பாவிகள்' என்று பொருள்படும் சொற்களால் வழங்கினர்.

மேலே கூறிய விருப்பு வெறுப்புக்களின் காரணமாக, மொழி பற்றிய ஜாதியமும், தேசியமும் விளைகின்றன. ஆனால் இது குறித்து நாம் அதிகமாக வெட்கப்பட அவசியமில்லை. உலகில் தேசிய இனத்தவர் எல்லாரிடத்திலும் இது காணப்படுவதே.

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே

என்றார் பாரதி. ஒவ்வொரு வகுப்பினரும் அவரவர் மொழி தான் உலகிற் சிறந்தது என்று எண்ணுதல் முற்றும்

---

*Babblers - உளறுபவர்.

இயல்பே. பிரெஞ்சுக்காரர் தங்களுடைய அழகிய பிரெஞ்சு மொழியொன்றே உலகில் கற்கத் தகுந்தது என்று கருது கிறார்கள். உலகிலே இனிய மொழியாவது தமிழ் ஒன்றே என்பார் தமிழ்மக்கள். தமிழ் என்ற சொல்லுக்கே இனிமை என்று பொருள் கொண்டனர். ஸங்கீதத்திற்கு ஏற்ற மொழி தெலுங்கு ஒன்றே என்பர் தெலுங்கரும் பிறரும். இத்தாலி யரும் தமது மொழியைக் குறித்து இவ்வாறே கூறுவர். ஸ்பானிஷ் மொழி பேசுவோர், உலகிலுள்ள பல ஜாதியாருங் கலந்த கலவை ஜாதியார். இக்கலவை உற்பத்தியை முற் றும் மறந்து, தாம் பேசிவரும் மொழியினையே ஆதாரமாகக் கொண்டு தாம் தனிப்பட்ட ஒரு வகுப்பினரென்று கருதி விட்டனர்.

மொழி பற்றிய ஜாதீய உணர்ச்சி பலவகையாக வெளிப்படுகிறது. தூய மொழிக் கிளர்ச்சி இவ்வகைகளுள் ஒன்று. இது பெரும்பாலும் மொழிநூற் பயிற்சி இல்லா தவரால் தொடங்கப்படுகிறது. ஆனால் அடிக்கடி மொழி மாற்றத்திற்குக் காரணமாகிறது. தமிழில் வடசொல் முத லிய பிற மொழிச் சொற்கள் கலத்தல் கூடாதென நம்மவர் களில் சிலர் விலக்கிவருகின்றனர். ஐரேனியர் தமது பார ஸீக மொழியினின்றும் துருக்கி, அராபியச் சொற்களை விலக்க முற்பட்டு வருகின்றனர். ஜெர்மானியர் அந்நிய மொழிப் பதங்களைக் கடன் கொள்ளாது அவற்றை மொழி பெயர்த்து வழங்குதலை விரும்புகின்றனர். நெருப்பின் பெயராகிய 'ஆஸ்ரயாஸ' என்றதனைச் 'சேர்ந்தாரைக் கொல்லி' என வள்ளுவர் வழங்கியது இங்கே ஒப்பிடற்குரி யது. ஒரு சில தமிழ் அறிஞர்கள் தமது பெயர்களிற்கூட வடசொல் இருத்தல் கூடாது என்று எண்ணி, அவற்றையும் மொழிபெயர்த்து வருகின்றனர். மணவழகு (கல்யாணசுந்த ரம்), மதியழகன் (சோமசுந்தரம்) முதலியன உதாரணங்கள்.

ஒரு தேசீய மொழியே ஒரு நாடு முழுவதிலும் பரந்து வழங்க வேண்டுமென்று அரசாங்கத்தினர் முயற்சி செய்வ

தும் இவ்வகையைச் சார்ந்ததே. ஒரு நாட்டில் அங்கங்கே வழங்கும் பிராதேசிக மொழிகளையும் (*Dialects*), சிறுபான்மை மொழிகளையும் (*Minority Languages*) ஒழித்துவிட வேண்டு மென்று இவர்கள் முயல்கின்றனர். நமது நாட்டில் இப் போது அரசாங்கத்தினர் ஹிந்தியைத் தேசீய மொழியாக்க அரும்பாடு படுகின்றனர். இது போன்ற முயற்சிகள் பல தேசங்களில் நடைபெற்று வந்திருக்கின்றன. அவற்றின் வர லாறுகள் ஓரளவு பயன்படலாம். முஸ்ஸோலினி தமது நாட்டில் அங்கங்கேயுள்ள பிராதேசிக சபைகளை ஒழிய வைத் தனர். மொழி விளக்க-ஐரோப்பா படமொன்று (*Linguistic Map of Europe*) வரைய ஆணையிட்டு அதில் மற்றைத் தேசங்களிலுள்ள பிராதேசிக மொழிப் பகுதிகளை விடாமற் குறிப்பிட்டு, இத்தாலி தேசத்தில் மட்டும் மொழிப் பிரிவினை யாதும் இல்லாததுபோல் ஒரே மொழி வழங்கும் நாடாகக் காட்டச் செய்தனர். பிரான்ஸ் தேசம் பொதுப்பட விரிந்த மனப்பான்மை உடையது. ஆனாலும் அதன் உட்பகுதியான பிரிட்டானியிலுள்ள கலாசாலைகளில் 'பிரெட்டன்' (*Breton*) மொழியைக் கற்பிக்கக் கூடாதென ஆணை பிறப்பித்தது. பிரெட்டன் மொழியில் விலாசம் எழுதிய கடிதங்களைக்கூடப் 'பிரிட்டன் மொழியில் விலாசம் தயாரிக்கப்பட்டுள்ளது' என்று முத்திரை குத்தி, பிரெஞ்சு தபால் இலாகாவினர் திருப்பிவிடுகின்றனராம். மொழி யடக்குமுறை ஐரோப்பா வில் வெகு காலமாக நிகழ்ந்து வருவது. பிரெஞ்சுப் புரட்சி யின் பிற்பாடு 1790-இல் அதன் அரசாங்க ஆணை அந் நாட்டிலுள்ள எல்லாப் பாஷைகளிலும் மொழிபெயர்க்கப் பட்டது. அம்மொழிகள் அபிவிருத்தி அடைவதற்கு அனு கூலங்களும் செய்யப்பட்டன. ஆனால் சிறிது காலம் கழித்து 'விடுதலை தந்த மொழி பிரெஞ்சுதான்; அதனால் அம் மொழியே உலகமொழி ஆதற்குரியது. அப்படி ஆவதற்கு முன் பிரான்ஸ் தேச முழுவதற்கும் அது தேசீய மொழி யாகுக' என்ற மறுதலைக் கருத்துத் தோன்றிவிட்டது.

நூருண்டு யுத்தத்திற்குப் பின், அதன் விளைவால் எழுந்த தேசீயவுணர்ச்சியால் இங்கிலாந்தில் பார்லிமெண்டு நடவடிக்கைகள் முதலியன ஆங்கில மொழியில் எழுதப்பட்டன. அக்காலம் வரையிலும் அவைகள் நார்மன்-பிரெஞ்சில் எழுதப்பெற்று வந்தன.

ருஷ்யா தேசத்தில் ட்ஸார்கள் காலத்தில் போலிஷ், லேட்டிஷ், லிதுவேனியன் முதலிய சிறுபான்மை மொழிகள் ஈவிரக்கமின்றி அடக்கப்பட்டன. சோவியத் ஆட்சியில், இதற்கு எதிரான முறை கையாளப்பட்டது. ஸ்டாலின், சோவியத் எல்லைக்கு அப்பாலும் வழங்கிய சிறுபான்மை மொழிகளை ஆதரித்து வந்தனர். தமது கொள்கை பிற இடங்களிலும் பரவுவதற்கு இது அனுகூலமாயிருந்தது. ஆனல் இச் சிறுபான்மை மொழிகளில் ஏதேனும் ஒன்று தேசீய மொழியாக முற்றிவிடும் நிலைமை நேர்ந்தால் அல்லது அது வழங்கிவரும் பிரதேசங்கள் அனைத்தும் ஒன்றுபட்டுத் தனிப்பட்ட தேசமாவதற்கு முயலும் நிலை ஏற்பட்டால், உடனே அடக்குமுறையைக் கையாண்டு அம்மொழி ஒதுக்கப்பட்டது. மலையாள தேசத்தில் தமிழ் படும்பாடு இத்தகையதுதான்.

ஒரு ஜாதீய மொழி பிரிதொரு ஜாதீய மொழியோடு போட்டியிடுங் காலத்தில், அவ்விரண்டு ஜாதியினருக்கும் மொழி பற்றிய தற்பெருமை உண்டாகிறது. 'ஹிந்தி ஒழிக, தமிழ் வாழ்க' முதலிய கூக்குரல்கள் இத் தற்பெருமையின் விளைவே. இது வளர்ந்து முதிருமாயின், பெருங் கேடுகள் உண்டாதல் கூடும். அரசாங்கத்தினர் இதில் தலையிடுவதில் மிக்க விழிப்புடையராயிருத்தல் வேண்டும். அவர்கள் தலையிட்டால், இயற்கையிலே கால அடைவில் மாய்ந்து போகக் கூடிய சில்லறை மொழிகள் பெரிதும் வலுவடைந்து ஜாதீய உணர்ச்சியை மிதமிஞ்சி வளரவிட்டுத் தேசீய ஒற்றுமையைக் கெடுத்துவிடும். பிலிப்பிநோஸ் (*Filipinos*) நாட்டில் முதலில் ஸ்பேனிஷ் மொழியும், பிற்பாடு ஆங்கில மொழியும் பரவியிருந்தன. அது விடுதலை அடைந்தவுடன்,

இவ்விரு மொழிகளையும் நீக்கிவிட்டு, அந்நாட்டுக்குரிய பூர்வ மொழிகளில் ஒன்றைத் தேசியப் பொதுமொழியாய்க் கொள்ளத் தீர்மானித்தது. ஆங்கிலத்தை நீக்கிவிட்டு, ஹிந்தியைத் தேசிய மொழியாக்குவதற்கு நமது நாட்டினர் எடுக்கும் முயற்சியோடு இது ஒப்பிடுதற்குரியது.

அந்நிய மொழி வெறுப்பிலிருந்து அந்நிய தேசிய வெறுப்பு எளிதில் விளைந்துவிடுகிறது. இத்தேசிய வெறுப்பினுல் தேசியச் சொல்லுக்குப் புதுப் பொருள் ஏற்பட்டு விடுகிறது. *Dutch Courage* என்ற தொடர் இயற்கைத் தைரியமின்றி, சாராயம் குடித்து, வெறிகொண்டு போரிற் காட்டும் தைரியத்தைக் குறிக்கும். இதனேடு 'கேரளாசாரம்' என்பது ஒப்பிடற்குரியது. 'கேரளம் வானராசாரம்' என் பதனைப் பின்பற்றி ஆசாரமின்மை அல்லது மிருகவொழுக்கம் என்று இத்தொடர் பொருள்படும். இவ்வாறே ஊணன், அவுநன் என்பவை ஜாதிப்பொருள் போய் அசுரத் தன்மையன் எனப் பொருள்பட்டுவிட்டது. வர்க்க வேற்றுமை (*Racial discrimination*) காட்டுதல் சமீப காலத்திலேதான் தோன்றியது. இது ஒரு போலி விஞ்ஞான சாஸ்திரக் கொள்கையை மேற்கொண்டது. நோர்டிக் அல்லது ஆரிய வர்க்கத்தினர் பழுப்புக் கலந்த பொன்னிறத் தலையும், வெண்ணிற மேனியும், நெடுமையும், நீண்ட தலையோடும் உடையவர்கள். இவர்கள் பால்டிக் பிரதேசத்தில் வாழ்ந்து வந்தவர்களாம். அங்கிருந்து கீழே வந்து ஆல்பைன் அல்லது மத்தியதரைக் கடல் வர்க்கத்தினரை வென்று அவர்களோடு கலந்துவிட்டனராம். பின்கூறிய வர்க்கத்தினர் கறுப்பு நிறத்தவர், குட்டை மேனியர், அகன்ற தலையோடு உடையவர். இக்கொள்கை சென்ற நூற்றுண்டில் கோபிநோ (*Gobineau*) என்ற பிரெஞ்சுக்காரரால் முதல் முதல் வெளியிடப்பட்டது. பின்னர் மாடிஸன் கிராண்ட் (*Madison Grant*) என்ற அமெரிக்கரால் 20-ம் நூற்றுண்டின் தொடக்கத்தில் மீண்டும் வலியுறுத்தி வெளியிடப்பட்டது. இவ் வர்க்கக் கொள்கை

யினரின் கருத்துப்படி, தெற்கு ஐரோப்பாவின் அனைத்து வகைப் பெருமைகளுக்கும் இவ்வர்க்கக் கலப்பே காரணமாம். கிரேக்கர், ரோமர், எபிரேயர், இடைக்காலப் பிரெஞ்சுக் காரர், ஸ்பேனியர், மறுமலர்ச்சி இத்தாலியர் - இவர்கள் நாகரிக வளர்ச்சிக்குச் செய்த நற்செயல்கள் யாவற்றிற்கும் இந்த நோர்டிக் வர்க்கக் கலப்பே விளைநிலமாயிருந்ததாம்.

இந்த நோர்டிக் வர்க்கத்தினரை இந்தோ-ஐரோப்பிய மொழிகளைப் பேசும் வகுப்பினரோடு இணைக்க முயற்சி நடைபெற்று வந்தது. இந்தோ-ஐரோப்பிய மொழி, அதன் ஆதி நிலையில் நோர்டிக் வர்க்கத்தினரின் ஆதிமக்களுக்குரிய தாக இருந்ததாம். இவர்களுக்குச் சென்ற இடமெல்லாம் வெற்றி கிடைத்துவந்தமையினாலே, தமது மொழியைத் தோல்வியுற்றவர்கள்மீது சுமத்திவிட்டார்களாம். தோல்வி யுற்றவர்களில் அங்கங்கே சில வகுப்பினர் இம்மொழியை ஏற்றுக்கொள்ளவில்லை. இங்ஙனம் ஏற்றுக்கொள்ளாதவர் கள், முற்காலத்திற் பெருவழக்காயிருந்த ஐபீரியன் மொழி களையோ அல்லது திராவிட மொழிகளையோ பேசிவந்த ஆதிமக்களாம்.

ஆரிய வர்க்கம், மூல இந்தோ-ஐரோப்பிய மொழி என்ற இரண்டு கொள்கைகளையும் கலந்து, தமது அதிகார வரம்பு பரந்து நீடிக்க வேண்டும் என்ற கருத்துடன், தாமே உலகில் உயர்ந்தவர்களென்றும், பிறரெல்லாம் கீழானவர்கள் என் றும் ஜெர்மன் மக்கள் கருதி வந்தனர். எனவே உலக மக்கள் ஆளுதற்குரியோர், ஆளப்படுதலுக்குரியோர் என இரண்டு பகுதியினராயினர். ஆனால் மேற்கூறிய இரண்டு கொள்கைகளும் பொய்க்கால்களேயாம். இவற்றின்மீது நின்று யாரும் நடனமாட முடியாது. மொழிக்கும் வர்க்கத் திற்கும் இன்றியமையாத தொடர்பு யாதுமில்லை. ஏதேனும் ஒரு தேசிய மக்கள் மேலோரென்றும், பிறர் கீழோர் என்றும் கொள்வது சரித்திரத்திற்கு ஒவ்வாதது.

இங்ஙனமே சமய வேற்றுமையினலும், வகுப்பு வேற்று மையினலும் விளைந்த மொழிமாற்றங்களும் மிகப் பலவாம். ஆனல் இவையெல்லாம் ஒரே முடிவினைத்தான் தெரிவிக் கின்றன. போர்தான் இவற்றின் விளைவு. இப்போர்களும் பலவகைப்படும். சில தேசியப்போர்; உதாரணம் நெப் போலியன் போர்கள். வகுப்புப்போர்; உதாரணம் ஹிட்லரது போர்கள். சில சமயப் போராக இருக்கலாம்; உதாரணம் முஸ்லீம்களுடைய ஜீஹத், கிறிஸ்தவர்களுடைய குருஸேட். சில வர்க்கப்போராயிருக்கலாம்; உதாரணம் ருஷ்யப் புரட்சிப் போர்கள்.

இப்போர்களில் மொழி மிகவும் அதிகமாக உதவுகிறது. அந்நிய மொழிப் படிப்பு அவசியம் என்பதையும் அவை காட்டுகின்றன. போர்களினல் மொழிகளில் சொற்களும் பெருகுகின்றன. ஆகவே, மொழி நன்மைக்கும் தீமைக்கும் பயன்படுகிறது என்று அறியலாம். இது மொழியின் குறை யன்று. எந்தக் கருவியையும் தீமை விளைவிக்கவும் உபயோ கித்தல் கூடும் அல்லவா! ஆதலால் அதனை ஆளும் மனிதனே தீமைக்குப் பொறுப்பாளி.

எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே.